விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 29 சனிக்கிழமை (15.11.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 331

## கொழும்பு வருகிறது நாசகாரி போர்க்கப்பல்



(கொழும்பு)

ரஷ்யக் கடற்படையின் நாசகாரி போர்க்கப்பல் ஒன்று நான்கு நாள் பயணத்தை மேற்கொண்டு எதிர்

24 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி தேர்தல் ஜனவரி – 8

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்காக தேர்தல் செயலகம் தயார்ப்படுத்தல் [illegible] மேற்கொண்டு வருகிறது.

தேர்தல் ஆணையாளர் மற்றும உதவி தேர்தல் ஆணையாளர்களுக்கிடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதனடிப்படையில் அந்த தினத்திற்கு ஏதுவான முறையில் தேர்தல்

24 ஆம் பக்கம் பார்க்க

### நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அவசியம்

# அரசியல் அமைப்பில் திருத்தம் இல்லை

## -ஜனாதிபதி



**பிரிவினைவாதத்தைத் தடுக்க நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அவசியமானது. தேர்தல் ஒன்று நடைபெறவிருக்கும் தருவாயில் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய முடியாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கலகொதர பிரதேசத்தில் வடக்கு அதிவேக வீதியின் நிர்மாணப் பணிகளை நேற்று முற்பகல் ஆரம்பித்து வைத்துப் பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்குமாறு தற்போது பலர் மேடைகளில் கோஷம் போட்டு வருகின்றனர்.

இதற்காக இரண்டு வருடங்களுக்கு முன்னர் நான் நாடாளுமன்ற

24 ஆம் பக்கம் பார்க்க

## புலிச்சந்தேக நபர் கொழும்பில் கைது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் என சந்தேகிககப்படும் ஒருவா நேற்று கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மலேசியாவிலிருந்து இலங்கை வந்த விமானப் பயணி ஒருவரே விடுதலைப் புலிகளின் முன்னாள் முக்கியஸ்தர் என்ற குற்றச்சாட்டின பேரில் பயங்கரவாத தடுப்புப்

24 ஆம் பக்கம் பார்க்க

## O/L மாதிரி வினாத்தாள்

க.பொ.த (சாதாரண) தர
மாணவர்களுக்கு...
கி.மாகாண கல்வி வலயத்தால்
தயாரிக்கப்பட்ட
மாதிரி வினாத்தாள்
உள்ளே

## பாப்பரசர் வருகை ஜனவரி 13-ல்

### பயண அட்டவணை நேற்று வெளியீடு

(கொழும்பு)

இலங்கைக்கான புனித பாப்பரசர் முதலாவது பிரான்சிஸ் திருத்தந்தையின் விஜயம் தொடர்பான கால அட்டவணையை வத்திகான் இல்லத்தின் தகவல் மற்றும் ஊடகப் பணியகம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

பாப்பரசர் ஜனவரி 12 ஆம் திகதி ரோமின் ஃயுமிசினோ விமான நிலையத்தில் இருந்து இலங்கை புறப்பட உள்ளார்.

ஜனவரி 13 ஆம் திகதி கொழும்பு வரும் பாப்பரசர் 15 ஆம் திகதி முற்பகல் கொழும்பில் இருந்து பிலிப்

24 ஆம் பக்கம் பார்க்க

### யாழில் மேலும் 11 இடங்களில்

# மக்களின் காணிகளை சுவீகரிக்க திட்டமிட்டுள்ளது கடற்படை

(யாழ்ப்பாணம்)

யாழில் புதிதாக மேலும் 11 இடங்களில் கடற்படை மக்களின் நிலங்களினை சுவீகரிக்க திட்டமிட்டுள்ளது எனவும் அக்காணிகளினை அளவிடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் வலி. வடக்கு பிரதேச சபையின் உப தவிசாளரும், வலி.வடக்கு மீள்குடியேற்றத் தலைவருமான எஸ்.சஜீவன் தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கில் இராணுவம் சட்ட விரோதமான வகையில் சுவீகரிக்கப்பட்டுள்ள 6 ஆயிரத்து 500 ஏக்கர் காணியினை சட்ட பூர்வமாக சுவீகரிக்கப்பட்டது போன்று காட்டுவதற்கான ஏற்பாடுகளும் இடம் பெற்றுக் கொண்டிருப்பதாகவும் சஜீவன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி.வடக்கில் 24 கிராம சேவையாளர் பிரிவினை உள்ளடக்கிய 6 ஆயிரத்து 500 ஏக்கர் பொதுமக்களின் காணிகளினை 2011 ஆம் ஆண்டு கொழும்பிலிருந்து வந்தவர்களினால் காணிகளின் உரிமைகளிற்கு தெரியப்படுத்தாமல் அளவிடப்பட்டது.

இதனை மக்களின் அனுமதியுடன் அளவிடப்பட்டது போன்று 2013 ஆம் ஆண்டு தான் இக்காணிகள் அளவிடப்பட்டது போன்றும் இராணுவம் காட்ட முயல்கிறது.

எதிர்வரும் 16 ஆம் திகதியன்று

24 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். பல்கலைக்கழக சூழலில் இராணுவத்தால் அச்ச நிலை

### பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சூழலில் இராணுவம் நிறுத்தப்பட்டமையானது மாணவர் மத்தியில் பெரும் அச்ச நிலையைத் தோற்றுவித்துள்ளதாக யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

சிலவாரங்களாக பல்கலைக்கழக பிரதான வாசலில் இராணுவத்தினர் நிலை நிறுத்தப்பட்டுள்ளனர்.

மாவீரர்வாரம்நெருங்கும்வேளையில் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு முன்னால் இராணுவம் நிலை கொண்டுள்ளது. இதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

24 ஆம் பக்கம் பார்க்க

## வட. அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப்பணி ஆரம்பம்



(கண்டி)

வடக்குக்கான அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணத்துக்கான முதற்கட்ட பணி நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, செங்கடகல நுழை

24 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியாவை புறந்தள்ளி சீனாவுடன் உறவை பேணுவது ஆபத்தை ஏற்படுத்தும்

### அரசை எச்சரிக்கிறார் சம்பந்தன்

(கொழும்பு)

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக இந்தியா உள்ளிட்ட பிராந்திய நாடுகளுடனான உறவைப் புறந்தள்ளி சீனாவுடன் உறவைப் பலப்படுத்துவதன் ஊடாக இலங்கை ஆபத்தையே எதிர்கொள்ளும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வெளிவிவகார அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் தனதுரையில தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு,

வெளிவிவகாரக் கொள்கை இன்று கேள்விக்குறியாகியுள்ளது. இதனால் எதிர்காலத்தில் நாடு பெரும விபரீதங்களையே சந்திக்க நேரிடும்.

ஆசியப்பிராந்தியத்திலுள்ள எல்லா நாடுகளுடனும் அரசாங்கம் உறவுகளை வைத்துக் கொள்வது அவசியம்தான். எனினும் தொன்று தொட்டு இலங்கையுடன் உறவை வளர்த்து வந்துள்ள இந்தியாவைப் புறந்தள்ளி சீனாவுடன் உறவுகளைப பேணுவது ஆரோக்கியமானதன்று.

இன்று போரியல், பொருளாதாரம், அரசியல் போன்ற சகல துறை

24 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# டிசம்பரில் யாழ்தேவி புகையிரதம் தெல்லிப்பழை வரை பயணிக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேவி புகையிரதம் எதிர்வரும் டிசம்பர் மாதம் தெல்லிப்பழைக்கும் மார்ச் மாதம் காங்கேசன்துறைக்கும் பயணிக்கவுள்ளதாக யாழ்.இந்திய துணைத் தூதுவர் எஸ்.மூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு நேற்றையதினம் நேரில் சென்று பார்வையிடப்பட்ட துணைத்தூதுவர் புகையிரத நிலைய அதிபருடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

புகையிரத நிலையத்தின் இயங்குதளம் அலுவலகம் என்பவற்றை பார்வையிட்ட துணைத்தூதுவர், யாழ்ப்பாண மக்கள் இப் புகையிரத சேவையினால் பெரிதும் நன்மை அடைந்துள்ளதாகவும் யாழ். மக்களின் மகிழ்வே எமது மகிழ்வு என தெரிவித்த அவர் புகையிரத சேவைகள் தொடர்பில் நிலைய அதிபரிடம் கேட்டு அறிந்தும் கொண்டார். (செ-4)

# பதில் கடமை புரிந்தவர்கள் இ.க.நி.சேவையில் உள்ளீர்ப்பு

## 20-ம் திகதி நேர்முகத் தேர்வு

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு-III இல் பதில் கடமை புரிந்தவர்களை இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ளீர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 20.11.2014 அன்று இசுறுபாயவில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் அலுவலகத்தில் நடைபெறும் என கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

பதில் கடமையில் 01.06.2012-ற்கு முன்னர் 3 வருடங்களை பூர்த்தி செய்தவர்கள் மட்டுமே இந் நேர்முகத் தேர்வில் பங்குபற்ற முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-15)

# ஆலயத்திற்குள் நுழைந்து திருடர்கள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, அரசடி சிவகாம சுந்தரி அம்மன் ஆலயத்திற்குள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு நுழைந்த திருடர்கள் சிலர், அங்கிருந்த ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

மழை பெய்துகொண்டிருந்த தருணம், ஆலயத்தின் பின்கதவை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பித்தளை குத்துவிளக்குகள், பித்தளை பொருட்கள் மற்றும் ஒலி பெருக்கிச் சாதனங்கள் என்பவற்றையே திருடிச் சென்றுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை காலையில் ஆலயத்துக்குச் சென்றவர்களே ஆலயப் பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன என்பதை ஆலய நிர்வாக சபையினருக்கு அறிவித்துள்ளனர்.

தொடர்ந்து ஆலய நிர்வாக சபையினர், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர். முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (செ-11)

# 35 ஆயிரம் முறைசாரா, தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்

## பட்ஜெட்டில் பரிந்துரை என்கிறார் லலித்

அரச சேவையில் பணியாற்றும் முறைசாரா மற்றும் தற்காலிக ஊழியர்கள் 35 ஆயிரம் பேர் நிரந்தரமாக்கப்பட உள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் இதற்கான பரிந்துரையை செய்துள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் 5,000 தபால் சேவை ஊழியர்களுக்கும் இடையில் அண்மையில் அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதியின் செயலாளர் இதனை கூறியுள்ளார்.

முறைசாரா மற்றும் தற்காலிகமாக பணியாற்றும் ஊழியர்கள் அனைத்து அரச நிறுவனங்களிலும் உள்ளனர்.

தபால் திணைக்களத்தில் இப்படியான ஆயிரத்து 500 ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

நாளாந்த சம்பளம் என்ற அடிப்படையில் பணிபுரிந்து வரும் இந்த ஊழியர்கள் ஏனைய அரச ஊழியர்கள் அனுபவிக்கும் சிறப்புரிமைகளை அனுபவிப்பதில்லை என்றும் லலித் வீரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் இம்முறை சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதுவரை தாக்கல் செய்யப்பட்ட வரவு செலவுத் திட்டங்களில் இப்படியான வரப்பிரசாதங்கள் வழங்கப்பட்டதில்லை எனவும் ஜனாதிபதியின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# நினைவஞ்சலிக் கூட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

மறைந்த ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி விகடகவி மு.திருநாவுக்கரசுவின் நினைவஞ்சலிக் கூட்டம் பருத்தித்துறை ஞானசம்பந்த கலைமன்ற மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்.பட்டிமன்றக் குழுவின் தலைவர் பொன்.சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (செ)

# வீட்டில் புகுந்து நகைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கைக்கு சுற்றுலா சென்ற யாழ்ப்பாணம், ஊரெழு கிழக்கைச் சேர்ந்த குடும்பமொன்றின் வீட்டிலிருந்த 4 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

வீட்டிலிருந்தவர்கள் கடந்த வாரம் தென்னிலங்கைக்கு சுற்றுலா சென்றிருந்தனர். இந்நிலையில், வீட்டின் ஜன்னல் கம்பியை வளைத்து உள்நுழைந்துள்ள திருடர்கள், அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

தொடர்ந்து, வீட்டுக்காரர்கள் சுற்றுலா முடிந்து வீட்டிற்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திரும்பி வந்து பார்த்த போது, வீட்டில் திருட்டுப்போன விடயம் தெரியவந்தது. இதனையடுத்து, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் கூறினர். (செ-11)

# புலிகளின் தடை நீக்கத்தை எதிர்த்து முறையிட போவதில்லை

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் நீக்கியமைக்கு மேன்முறையீடு செய்யப் போவதில்லை என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று நாடாளுமன்றத்தில் வைத்து இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த தடை நீக்கத்துக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்படுமா என்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல கேள்வி எழுப்பி இருந்தார்.

அதற்கு பதிலளிக்கும் போது ஜீ.எல்.பீரிஸ் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

எனினும் தடைக்கு எதிராக மேன்முறையீடு ஒன்றை செய்து, ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்ற விவாதத்தின் வாதியாக செயற்பட முடியும என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இந்திய பாதுகாப்பு ஆலோசகர் இலங் கைக்கு விஜயம் செய்யவுள்ளார்

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டொவால் அடுத்த மாதத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

வெளியுறவு அமைச்சர்ஜிஎல்பீரிஸ்இதனை நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (செ-11)

# பங்கு முதலீட்டு பயிற்சிப் பட்டறை

பங்கு முதலீட்டில் ஆர்வமுள்ளவர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்று இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 தொடக்கம் பி.ப. 4.30 வரை இல.147-2/3, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பங்குப் பரிவர்த்தனைக் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

பங்கு முதலீடுகளுக்கான அறிமுகம், நிதிக்கூற்றுக்களை விளங்கிக்கொள்ளல், பங்குகளைத் தெரிவு செய்தல், முதலீட்டைத் தெரிவு செய்தல் உட்பட பயனுள்ள விடயங்களை உள்ளடக்கியதாக இடம்பெறவுள்ள இக்கருத்தரங்கின் பதிவுக் கட்டணம் ரூ.500 ஆகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (செ)

# நிலக் கண்ணிவெடிகள் இன்னமும் உள்ளது

(கொழும்பு)

இலங்கையில் ஆபத்தான பகுதி என அடையாளமிடப்பட்டுள்ள பகுதியில் 78.8 சதுரகிலோமீற்றர் பகுதியில் இன்னமும் நிலக்கண்ணிவெடிகள் அகற்ற வேண்டியுள்ளது என ஐ.நா.வின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் இடம்பெற்ற மாநாடொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

நிலக்கண்ணி வெடிகளால் அபாயத்தை எதிர்கொண்டுள்ள நாடுகளுடன் நிலக் கண்ணி வெடிகளை அகற்றுவது குறித்த தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள இலங்கை தயாராகவுள்ளது. இலங்கை 5 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவில் நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் பணியை மேற்கொண்டுள்ளது..

இதில் 2500 சதுர கிலோமீற்றர் பகுதி அதிக ஆபத்தான பகுதி என அடையாளப்படுத்தப்பட்டு அவற்றிலிருந்து கடந்த 5 வருட காலப்பகுதியில் 1,128,336 வெடிபொருட்களை அகற்றியுள்ளோம். இவ்வருடம் மாத்திரம் 55,762 வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளன. நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கையில் 75 வீதமான பணிகளை இராணுவமே முன்னெடுக்கின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# வீதியை கடந்தவர் விபத்துக்குள்ளானார்

(முக்கொம்பன்)

ஏ9 வீதியைக் கடக்க முற்பட்ட நபரை வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் மோதித் தள்ளியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச் சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் கிளிநொச்சி கரடிபோக்கில் அமைந்துள்ள கொமர்ஷல் வங்கிக்கு அருகாமையில் நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி உமையாள்புரத்தைச் சேர்ந்த நவரெட்ணராசா கணேசன் (வயது 32) என்பவரே தலையிலும் கையிலும் படுகாயமடைந்தவராவார்.

கிளிநொச்சி மாவட்ட தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் தொழிலாளியாக கடமைபுரியும் பிரஸ்தாப நபர் வீதி வேலையை முடித்துவிட்டு வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் கரடிப்போக்கு சந்தியிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் மோதித் தள்ளியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (செ-2, 283)

2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.

இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் மற்றும் கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு நியாயமான விலையில் காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
நாய்க்கான கோழியிறைச்சி விற்பனைக்குண்டு 190/-
இப்போது கோழிப் பாகங்களும் (Chicken Parts) பெற்றுக் கொள்ளலாம்
நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.


பாராட்டி வாழ்த்துகின்றோம்
திசாந்திலதா தருமர்
B.A (Hons)
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 30ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணி B.A (Hons) பட்டம்பெற்ற திசாந்திலதாவை வாழ்த்துவதோடு அவர் இன்னும் பல பட்டங்கள் பெற இறைவனை வேண்டுகின்றோம்.
வாழ்த்துவோர்
அத்தான், அக்கா மற்றும் பிள்ளைகளான அசாத், ஐசித்.
மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.
(8332)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவிப்புலன் கருவி விநியோகிக்கப்படும்

யுத்தம் மற்றும் வறுமை காரணமாக செவிப் புலன் கருவியை கொள்முதல் செய்து கொள்ள முடியாதுள்ள உறவுகளுக்கு இதனை இலவசமாக வழங்க யாழ்ப்பாண றோட்டறிக்கழகம் முன் வந்துள்ளது.

குறித்த உபகரணம் தேவைப்படுபவர்கள் உரிய மருத்துவ சான்றிதழ்களை யாழ்ப்பாண றோட்டறிக்கழக அலுவலகம், இல 359,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ்ப்பாண றோட்டறிக்கழகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மேலதிக தொடர்புகளுக்கு பிரசாந்தன் 0718473970 எனும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

## கண்ணிவெடி அகற்றும் பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை

### ஆரிய சிங்ஹ தெரிவிப்பு

இலங்கையில் ஆபத்தான பகுதி என அடையாளமிடப்பட்டுள்ள பகுதியில் 78.8 சதுரகிலோமீற்றர் பகுதியில் இன்னமும் நிலக்கண்ணிவெடிகள் அகற்ற வேண்டியுள்ளது என தெரிவித்துள்ளார் ஐ.நா.விற்கான இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்ஹ.

ஜெனீவாவில் இடம்பெற்ற மாநாடொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

நிலக்கண்ணி வெடிகளால் அபாயத்தை எதிர்கொண்டுள்ள நாடுகளுடன் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவது குறித்த தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள இலங்கை தயாராகவுள்ளது.

இலங்கை 5 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவில் நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் பணியை மேற்கொண்டுள்ளது. இதில் 2500 சதுர கிலோமீற்றர் பகுதி அதிக ஆபத்தான பகுதி என அடையாளப்படுத்தப்பட்டு அவற்றிலிருந்து கடந்த 5 வருட காலப்பகுதியில் 1,128,336 வெடிபொருட்களை அகற்றியுள்ளோம்.

இவ்வருடம் மாத்திரம் 55,762 வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளன. நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கையில் 75 வீதமான பணிகளை இராணுவமே முன்னெடுக்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## செல்வச் சந்நிதியில் திருக்கல்யாணம்

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய திருக்கல்யாணத் திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

திருக்கல்யாண திருவிழாவுடன் ஆரம்பமாகி தொடர்ந்து முருகப் பெருமான் வீதிவலம்வந்து கந்தபுராண படனபூர்த்தியுடன் நிறைவடையும். (இ-5)


## காணி விற்பனைக்கு

உரும்பிராய் பலாலி வீதியில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்திற்கு அருகாமையில் பிரதான வீதியில் 9.6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. முழுமையாகவோ பகுதியாகவோ விற்கப்படும். தோட்டம் செய்வதற்கும் உகந்தது.

தொடர்புகளுக்கு:-
078 9138984 (8326)


## மகிந்தவின் பிறந்தநாளை முன்னிட்டு துன்னாலையில் விசேட வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாள் எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொண்டாடப்படவுள்ள நிலையில் துன்னாலை தெற்கு கலிங்க கந்தசுவாமி கோவிலில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அன்றைய தினம் துன்னாலை தெற்கு தொகுதிக்குட்பட்ட தரம் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டு அன்பளிப்புகள் வழங்கப்படவுள்ளதுடன் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்படவுள்ளன. (இ-7)



## நிரந்தர தொழில் வாய்ப்பு

அரச அங்கீகாரமுடைய எமது நிறுவனத்தில் உங்களுக்கு தேவையான வேலைகளை ஒரே கூரையின் கீழ் பெறலாம். கொழும்பை அண்மித்த நவீன தொழிற்சாலைகள் (ஜேம்/டொபி/பிஸ்கட்/கோடியல்/கிளவுஸ்/PVC...)தனியார் துறைமுகம், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இலக்ரீசன், மேசன் கையுதவியாளர்கள் இதுபோன்ற பல வெற்றிடங் கள் எம் கைவசம் உள்ளன. வயது 18-50 ஆண்,பெண் உடனடியாக தேவை. சம்பளம் 19000/=, 38000/=, வருகை அன்றே வேலைக்குச் செல்லலாம்.

மேலதிக தகவல்களுக்கு :-077-6838231 (சி-9077)


## உயர்கல்வி வழிமுறை தொடர்பான விதிமுறை

பாடசாலைக்கல்வியை நிறைவு செய்தவர்களுக்கான உயர் கல்வி வழிமுறைகள் மற்றும் தொழில் வாய்ப்புக்கள் எனும் தலைப்பிலான விரிவுரை ஒன்றுபேராதனைபல் கலைக்கழக தொழில் வழிகாட்டல் பிரிவின் இயக்குனரான கலாநிதி பி.எம்.கே.பெரேராவினால் இன்று பிற்பகல் 3 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் மாபெல் தம்பையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்குக.பொ.த உயர்தரமாணவர்கள்(2014, 2015பிரிவுகள் ) மற்றும் அவர்களின் பெற்றோர்கள் பங்குபற்றுமாறு அழைக்கப்படுகின்றனர். பாடசாலை மாணவர்கள் பாடசாலை சீருடையில் சமூகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (இ


## விசேட சலுகை

வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் ,பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.

**முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.**


மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு:- 021 2217 603
021 5671 532
Valampuriijaffna@gmail.com


## மரண அறிவித்தல்

**திரு.வைரமுத்து கணபதிப்பிள்ளை**

(கங்கேஸ்வரன் ஸ்ரோர்ஸ், கண்ணதாசன் மில் உரிமையாளர், கிளிநொச்சி)



அத்துளு அம்மன் கோயிலடி, கரவெட்டியை பிறப்பிடமாகவும் திருநகர், கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட அமரர் வைரமுத்து கணபதிப்பிள்ளை 10.11.2014 இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.11.2014 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கோவிற்கடவை, துன்னாலை மத்தி, கரவெட்டியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக வேரூண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

(சி-9081)

கோயிற் கடவை, துன்னாலை மத்தி,
கரவெட்டி.

தகவல் :- குடும்பத்தினர்

## இராசி பலன்

15.11.2014
(ஐப்பசி 29, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை- 6.00 மணிக்கு
அட்டமி முற்பகல் 10.45 மணிவரை
மகம் பின்னிரவு 4.27 மணிவரை
இராகுகாலம் 9.07-10.37 மணிவரை
சுபநேரம் 3.07-4.37மணிவரை
அட்டமி நவமி

வளவன்

**மேடம்:** அடிப்படைத்தேவைகளை பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், பிள்ளைகள்குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**இடபம்:** விருந்தினர் வருகையுண்டு, தாய் வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்,சுப தகவல்கள் வந்து சேரலாம், தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள்.

**மிதுனம்:** பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்,இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கடகம்:** உங்களின் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்,புதிய பொருட் சேர்க்கையுண்டு,தேவையற்ற விவாதங்களை தவிர்ப்பது நல்லது.

**சிம்மம்:** நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள்,அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியக்கில் கவனம் தேவை குடும்பச் சுமை கூடும்.

**கன்னி:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்,தொழிலில் பணியாளர்களை மாற்றும் எண்ணம் உருவாகும்,மனதில் தேவையற்ற சஞ்சலங்கள் தோன்றும்.

**துலாம்:** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன் வரலாம், முன்னேற்றப்பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், [illegible]ளர்களின் வருகையால் உற்சாகம் பெருகும் நாள்.

**விருச்சிகம்:** எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும், பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், உற்சாகமான நாள், தன்னம்பிக்கை அதிகரிக்கும், [illegible] ஒத்துழைப்பு கிடைக்கும்.

**தனுசு:** ஆன்றோர் சந்திப்புண்டு, உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், குடும்பத்தி லேற்பட்ட கருத்து முரண்பாடுகள் குறையும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.


**மகரம்:** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை,கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள்.

**கும்பம்:** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், செல்வாக்கான நாள், நண்பர்களின் ஆதரவு பெருகும், வாழ்க்கைத்துணை வழியே வரவுகள் வந்து சேரலாம்.

**மீனம்:** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், அதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது,காணாமல் போன பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் பேண்தகு அபிவிருத்திக்கான சவால்களும் எதிர்கொள்வதற்கான கல்வி முறைகளைக் கண்டறிதலும்



திரு. ஆ. நித்திலவர்ணன்
விரிவுரையாளர்
கல்வியியல்துறை
யாழ். பல்கலைக்கழகம்

...யுத்தத்திற்குப்பின்னர் மீள் கட்டமைப்புச் செயற்பாடுகள் துரிதமாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றபோதும், மக்களின் வாழ்க்கைத்தரம் பெருமளவில் மேம்படவில்லை. மாகாணத்தின் வறுமை, கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்து செல்கின்றபோதும், இன்னும் முற்றாக ஒழிக்கப்படவில்லை. நகரம், கிராமங்களிடையில் வறுமையின் பரம்பல் இன்றும் சமனற்றுக்காணப்படுகின்றது.

யுத்தத்திற்கு முன்னர் வடக்கில் இயங்கிவந்த பாரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் மீள இயங்க ஆரம்பிக்கவில்லை. விவசாயத்திற்கேற்ற வழமான மண்ணைக்கொண்ட பிரதேசங்களில் மக்கள் விவசாயம் செய்ய இன்னும் அனுமதிக்கப்படவில்லை.

தற்காலத்தில் வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குத் தேவையான தொழிலாளர்கள், தென்னிலங்கையில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் கொண்டு வரப்படுகின்றார்கள். உள்ளூரில் உள்ள தொழிலாளர்களை பயிற்றுவித்து தொழில் வழங்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டும். நடுத்தர தொழிலாளர்களை பயிற்றுவிக்கும் தொழில் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும்.

கொழும்பைத் தளமாகக்கொண்டு இயங்கும் பெரியநிறுவனங்கள் வடக்குக் கிழக்கில் கிளைகளைத் திறந்து தமது வியாபார நடவடிக்கைகளை முன்னெடுப்பதால், உள்ளூர் மக்களின் வர்த்தக நிறுவனங்கள் அவற்றுடன் போட்டிட்டு செயற்படமுடியாது நட்டமடைகின்றன. இதனால் உள்ளூர் வர்த்தகர்கள் பலர் விரக்தியடைந்து தற்கொலை கூட செய்துகொண்டுள்ளனர்.

அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள், உலகளாவிய நிதிநெருக்கடியால் (Global Financial Crisis) பாதிக்கப்பட்டுவருவது அனைவரும் அறிந்ததே. அதேபோல தற்காலத்தில் வடக்குக்கிழக்கில் கிராமம் - நகரம், மற்றும் படித்தவர்- படிக்காதவர் என்ற வேறுபாடின்றி மக்கள் பல்வேறுவிதமாக நிதிநெருக்கடிக்கு (Financial Crisis among the Local People) ஆளாகிவருகின்றனர்.

முன்னைய காலத்தில் "சீட்டுப் போடுதல்" மூலமாக சிறுகச் சிறுகச் சேமித்து, எமது மக்கள் தமது பொருளாதாரத்தை மேம்படுத்தினர். ஆனால் தற்காலத்தில் சீட்டுப் போட்ட பலரும் ஏமாந்து நடுத்தெருவுக்கு வந்துவிட்டனர். சொந்தக்காரர் மற்றும் நெருங்கிய நண்பர்களே ஏமாற்றிவிட்டு இந்தியா, அவுஸ்ரேலியா என்று ஓடிவிட்டனர்.

இவை தொடர்பான பல முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களுக்கு கிடைத்துள்ளன.

இணக்கசபைகளிலும், நீதிமன்றங்களிலும் இவை தொடர்பான பலவழக்குகள் நடைபெற்று வருகின்றன.

"காசோலை மோசடிகள்" தொடர்பான செய்திகள் அடிக்கடி பத்திரிகைகளில் வெளிவருகின்றன.

"வட்டிக்குப்பணம் கொடுத்தல்" எமது சமூகத்தில் ஒரு பாவப்பட்ட செயலாகப் பார்க்கப்படுகின்றது.

பலர் இன்றும் அந்தப்பாவச் செயலைச்செய்து வருகின்றனர்.

பணம் பெற்றவர்களால் ஏமாற்றப்பட்டும் வருகின்றனர். இவை தொடர்பாக எமது மக்கள் விழிப்பூட்டப்படவேண்டும்.

அரசியல்வாதிகள், சமூகநலனில் அக்கறைகொண்டவர்கள் கிராமங்களில் மற்றும் நகரங்களில் இறங்கி இதற்காகப்பணியாற்ற வேண்டும்.

தற்காலத்தில் எமது பிரதேசங்களில், கட்டுப்பாடுகள் மற்றும் வரையறையின்றி அதிகரித்துச் செல்லும் வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளிடம் அதிகரித்த வட்டிக்கு கடன்களைப்பெற்ற மக்கள் மீளவும் அவற்றைச்செலுத்த முடியாது, விரக்தியடைந்து மனநோயாளிகளாக மாறிவருகின்றனர்.

வாடகைகக் குத்தகைக்கு (Leasing) வாகனங்களைக்கொள்வனவு செய்தவர்கள், மாதாமாதம் தவணைக் கட்டணங்களைச் செலுத்த முடியாது, மீளவும் அக்கம்பனிகளால் அவ்வாகனங்கள் கையகப்படுத்தப்படுகின்ற நிலையே அதிகமாகக்காணப்படுகின்றது.

நீண்டகாலமாக பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் வடக்குக் கிழக்கில் இயங்கிவந்ததனால், அவற்றிடமிருந்தும் புலம்பெயர் ஈழத்தமிழ்உறவுகளிடமிருந்தும் உதவிகளைப்பெற்றுவந்த மக்கள், எதையும் இலவசமாகப் பெறும் மனநிலைக்கு மாற்றமடைந்ததனால், தாம் சுயமாக உழைத்து வாழ்வதில் சோம்பலடையும் நிலைக்கு பழக்கப்பட்டுவருவதும் அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான தடையாகவுள்ளது. இது தொடர்பான விழிப்புணர்வு மக்களிடம், குறிப்பாக இளைஞர்களிடம் ஏற்படுத்தப்படவேண்டும்.

**காலநிலை மாற்றமும் பொருளாதாரப்பாதிப்புக்களும்**

தற்காலத்தில், காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள், நாட்டின் அனைத்துப்பகுதிகளிலும் பாதிப்புக்களை ஏற்படுத்திவருகின்றது.

இதனால் விவசாயம், கால்நடைவளர்ப்பு, வனத்துறை, மீன்பிடித்துறை, சுகாதாரம், கரையோரச்சூழல், உயிர்ப்பல்வகைமை மற்றும் மனித வாழிடங்கள் போன்றன கடுமையான பாதிப்புக்கு உள்ளாகின்றன. இத்துறைகளைச்சார்ந்த மக்களின் பொருளாதாரமும் கடுமையான பாதிப்புக்குள்ளாகி வருகின்றது.

# ஞானம் அருளிடும் கேது கிரகங்களின் சேர்க்கை...



**கேது சூரியன்**

எப்போதும் சுறுசுறுப்பும் ஊக்கமும் கொண்டவர்கள். எடுத்த காரியத்தை திறமையுடனும் வெற்றியுடனும் செயற்படுத்துவதில் தீவிரமாக இருப்பார்கள். தைரியம் மிக்கவர்கள். எதையும் நேருக்கு நேராகப் பளிச்சென்று பேசுவார்கள். நல்ல குணங்களுடன் திகழ்வார்கள். பரந்த நோக்கம் கொண்டவர்கள். உடன் பிறந்தவர்களிடமும் தந்தையிடமும் அதிக பாசம் உள்ளவர்கள். வாழ்க்கையில் சிரமங்களும் சண்டை சச்சரவுகளும் அதிகமாக இருக்கும். [illegible] உழைத்துக் கொண்டே இருப்பார்கள். [illegible] ணம் அதிகமாக இருக்கும்.

**கேது சந்திரன்**

சிவந்த மேனியுடன் அழகான உடல் அமைப்பு பெற்றிருப்பர். கல்வியில் திறமை வாய்ந்தவர்களாக இருக்கும் இவர்கள், ஆசார அனுஷ்டானங்களிலும், தெய்வ வழிபாடுகளிலும் சிரத்தையுடன் ஈடுபடுவார்கள். விவசாயத் தொழில், ரியல் எஸ்டேட், கட்டுமானத் தொழில் போன்ற துறைகளில் ஈடுபடுவர். குளிர்ச்சியான உடல்வாகு உள்ளவர்க ளாகவும், அடிக்கடி ஜலதோஷத்தால் பாதிப் படைபவர்களாகவும் இருப்பர். மனைவியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு இருப்பார்கள். முத்து, பவளம் முதலியவற்றை வியாபாரம் செய்வர்.

**கேது செவ்வாய்**


வாழையடி வாழையாக இவருடைய வம்சம் தழைத்தோங்கும். ஆண் குழந்தைகளே அதிகம் பிறக்கும். உடல் வலிமையும், தேஜஸ {ம், நல்ல குணங்களும், அழகான கண்களும் கொண்டிருக்கும் இவர்கள் தர்ம சிந்தனை உள்ளவர்களாகத் திகழ்வர். எங்கும எதிலும் இவர்களுக்கு வெற்றியே உண்டாகும். இவர்களில் சிலர் ஆகம சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்றிருப்பர். ஏரி, குளம், கிணறு வெட்டுதல், கோயில் நிர்மாணம் போன்றவற்றில் ஆர்வத்துடன் ஈடுபடுவர். உடன்பிறந்த சகோதர சகோதரிகளிடம் அதிக பாசம் கொண்டிருப்பதுடன், அவர்களுக்குப் பல வகைகளிலும் உதவிகரமாக இருப்பர். பூர்வ ஜன்மம் பற்றிய ஞானம் இருக்கும்.

**கேது புதன்**

தாய்மாமன் வகையில் வாழ்க்கைத் துணை அமையும். எதிர்பாராத வகையில் சொத்துச் சேர்க்கை உண்டாகும். புளிப்பு, காரம் அதிகமுள்ள உணவு வகைகளை விரும்பிச் சாப்பிடுவார்கள். ராணுவத்தில் கணக்குத் துறையுடன் தொடர்புடைய வேலையில் அமர்ந்திருப்பார்கள். நல்ல உயரமும் பருமனும் கொண்டிருக்கும் இவர்கள் செய்யும் தொழிலில் [illegible] ஆர்வத்துடன் ஈடுபடுவர். அந்தஸ்தில் குறைந்தவர்களிடம் அலட்சியத்துடனும், அதிகாரத்துடனும் நடந்துகொள்வார்கள். சொந்த வீட்டில இவர்களால் இருக்க முடியாது. ஓரளவு தானம் தர்மம் செய்வார்கள்.

**கேது குரு**

பெரியவர்களிடம் மிகுந்த மரியாதையுடன் நடந்துகொள்வார்கள். ஆடம்பரமற்ற அமைதியான குடும்பம் அமையும். கௌரவமான உத்தியோகத்திலிருந்து கொண்டு வீடு, வாசல், வாகன சுகங்களை அனுபவிப்பர். ஆண் குழந்தைகளே அதிகம் பிறக்கும். மடம், கல்வி, அறக்கட்டளை போன்ற சமூக நலப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவர். சகல சுகங்களையும் அனுபவிப்பர். கல்வித் தகுதி குறைவாக இருந்தாலும், நல்ல உத்தி



யோகம் அமையும். மூதாதையர்களின் சொத்துக்களை அனுபவிக்கக்கூடியவர்களாக இருப்பார்கள். அலுவலகத்தில் எதிரிகள் இருந்தாலும், அவர்களால் பாதிப்பு இருக்காது.

**கேது சுக்கிரன்**

தாயாரின் உடல்நலம் அவ்வப்போது பாதிக்கும். [illegible] உறவு சுமூகமாக [illegible]. எதிரிகளைப் பற்றிய அச்சம் இருந்துகொண்டேயிருக்கும். கடன்களும் தொல்லை கொடுக்கும். வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்வர். அழகான உடல் அமைப்புடன் ராஜ கம்பீரம் பெற்றுத் திகழ்வார்கள். விரோதிகள் நிறைந்திருந்தாலும், சபையில் மரியாதையுடன் நடத்தப்படுவர். மனைவி வழியில் ஆதரவு இருக்காது. கடல் வாழ் பொருள்கள் சார்ந்த வியாபாரத்தில் ஈடுபடுவர்.

**கேது சனி**

இரும்பு, திராவகம் தொடர்புள்ள வியாபாரம் செய்வார்கள். தந்திரசாலிகளாக நடந்து கொண்டு, காரியம் சாதிக்கும் குணம் கொண்டவர்களாக இருப்பார்கள். திடமான சரீரம் கொண்டவர்கள். சுகபோகங்களுடன் வாழ விரும்புவார்கள். மாந்திரீக சக்தியைப் பெற்றிருப்பர். மனைவியிடம் மிகுந்த அன்புடன் இருப்பார்கள். பெரிய குடும்பத்தை போஷிப்பவர்களாகவும், சிறந்த கவிஞர்களாகவும் திகழ்வார்கள். மற்றவர்களின் [illegible] வார்த்தைகளைக் கேட்டு அவற்றை நம்பி, அடிக்கடி மன சஞ்சலங்களுக்கு ஆட்படுவார்கள்.

ஜோதிட மாமணி
கிருஷ்ணதுளசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச ஊழியர்களுக்கான நாடகப் போட்டி யாழில்

(கொழும்புத்துறை)

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் அரச ஊழியர்களுக்கிடையிலான நாடகப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அரச உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்பட்ட நாடகப் பிரதிகள் கலாசார அமைச்சிற்கு ஏற்கனவே அனுப்பப்பட்டதையடுத்து கலாசார அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட நாடகங்களே இங்கு மேடையேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-51)

## மாணவர்கள் கௌரவிப்பு

(கரணவாய்)

யாழ்.வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட தரம் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 106 மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கரவெட்டி பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வின் போதே இம்மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளதாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தலைவர் பொ. வியாகேசு அறிவித்துள்ளார். (இ-7-60)

## கொழும்பு கம்பன் கழகத்தின் கவிதை,பேச்சு போட்டி விபரம்

ஆண்டுதோறும் கம்பன் விழாவினை நடத்திவரும் கொழும்பு கம்பன்கழகம் 2015 ஆம் ஆண்டுக்கான கம்பன் விழாவை, பெப்ரவரி மாதம் நடத்தவுள்ளது.

இவ் விழாவை முன்னிட்டு மேற்படி கழகம் நடததவுள்ள அமரர் துரைவிஸ்வ நாதன் ஞாபகார்த்த பேச்சு மற்றும் அமரர் பொன். பாலசுந்தரம் ஞாபகார்த்த கவிதை போட்டிகள் என்பன இடம்பெறவுள்ளன. போட்டிகள் பற்றிய விபரங்களை கம்பன் கழகம் அறிவித்துள்ளது.

3 பிரிவுகளாக இடம்பெறவுள்ள மேற்படி போட்டிகளில் கீழ்ப்பிரிவில் 14 வயதுக்குட்பட்டோரும், மத்திய பிரிவுப் போட்டிகளில் 15 - 19 வயதுக்குட்பட்டோரும் மேற்பிரிவுப் போட்டிகளில் 20 - 35 வயதுக்குட்பட்டோரும் கலந்து கொள்ள முடியும். அத்துடன் கடந்த விழாக்களில் தங்கப்பதக்கப் பரிசில்களைப் பெற்றோர் தவிர்ந்த, பேசும், கவிதை இயற்றும் திறமையுள்ளோர் மேற்படி போட்டிகளில் பங்கு பற்ற முடியும்.

போட்டியாளர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட வண்ணப்படிவத்தில் தமது முழுப்பெயர், வயது, பிறந்ததிகதி, முகவரி, தொலை பேசி இலக்கம் என்பவற்றையும் தயாரிக்க வேண்டும்.

இதேவேளை மாண வராயின் பாடசாலையின் பெயர், இல்ல முகவரி கலந்து கொள்ளவுள்ள போட்டி முதலிய விபரங்களைக் குறிப்பிட்டு, கல்லூரி அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது கிராமசேவகர் ஆகியோரிடம் தமது விபர ங்களை உறுதிப்படுத்தி, இல.12, இராம கிருஸ்ணா தோட்டம், கொழும்பு - 6 (Se cretary, Colombo Kamban Kazha kam, 12, Ramakrishna Garden, Colombo-06.) எனும் முகவரிக்கு டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். ஒருவர் இரண்டு போட்டிகளிலும் கலந்துகொள்ள முடியும் என்பதுடன் போட்டி நடைபெறும் திகதி போட்டியாளர்களுக்குத் தனித்தனியே அறிவிக்கப்படும்.

பேச்சு மற்றும் கவிதை போட்டிக்கான தலைப்புகள் இலக்கியம், கலை, வாழ்வியல் தொடர்பில் அமைந்திருக்கும் எனவும் கீழ்ப் பிரிவு போட்டியாளருக்கு தலைப்புகள் அனுமதி அட்டையுடன் அனுப்பி வைக் கப்படும் எனவும் மத்திய பிரிவு, மேற்பிரிவுப் பேச்சுப் போட்டியாளர்கள் உடன் வழங்கப்படும் 5 தலைப்புக்களில் விரும்பிய ஒரு தலைப்பில் பேசும் தகுதி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் எனவும் கொழும்பு கம்பன்கழகம் அறிவித்துள்ளது.

மேலும் தரமான நடுவர் குழுவினால் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும் 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள கம்பன் விழவில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கப் பரிசில்கள் வழங்கப்படும் எனவும் போட்டிகளில் இயல்பாளுமையை வெளிப்படுத்தும் போட்டியாளர்கள் கம்பன் விழா நிகழ்ச்சிகளில் இணைத்துக் கொள்ளப்படுவர் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## மலவாயில் மறைத்து தங்கம் கடத்திய இருவர் கைது

29 தங்க பிஸ்கட்டுக்களை மலவாயிலில் மறைத்து இலங்கைக்கு கடத்தி வந்த இருவர் மத்தள விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

டுபாயில் இருந்து இலங்கைக்கு நேற்று காலை 6.45 அளவில் வந்த விமானத்தினை சோதனை செய்தபோதே குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மருதானை மற்றும் கட்டுகஸ்தோட்டை பகுதிகளைச் சேர்ந்த 57 வயதுடைய நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவு ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

ஒருவர் ஒரு கிலோ 300 கிராம் நிறையுடைய 13 தங்க பிஸ்கட்களை மலவாயிலில் மறைத்து வைத்திருந்ததுடன், மற்றுமொருவர் ஒரு கிலோ 600 கிராம் நிறையுடைய 16 தங்க பிஸ்கட்களை மலவாயிலில் மறைத்து வைத்திருந்துள்ளார்.

இவர்கள் இருவரும் மலவாயிலில் 2 கிலோ 900 கிராம் தங்கத்தை மறைத்து வைத்திருந்துள்ளதாக சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது. (செ-11)

## முதியோர் தினம் நடைபெறாது

கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜிதசேனாரட்னவின் ஏற்பாட்டில் ஜனாதிபதி தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பு அலரி மாளிகையில் நடைபெறவிருந்த சர்வதேச முதியோர் தினம் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெற மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் நா. பொன்னம்பலம் அறிவித்துள்ளார். (இ-7-19)

## வலம்புரி செய்தியை அடுத்து வாய்க்கால் புனரமைப்பு ஆரம்பம்

(கரணவாய்)

யாழ். வடமராட்சியில் அண்மைக்காலமாக புனரமைக்கப்படாதிருந்த நீர்வழிந்தோடும் வாய்க்காலின் புனரமைப்பு வேலைத்திட்டங்கள் வலம்புரி செய்தியை அடுத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அப்பிரதேச மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

கரவெட்டி பிரதேச செயலகத்தின் கீழுள்ள இராஜகிராமத்தில் இருந்து கிராஸ் வயல் வரை அமைக்கப்பட்டிருந்த நீர்வழிந்தோடும் வாய்க்காலின் புனரமைப்பு வேலைத்திட்டங்களே தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய கரவெட்டி பிரதேச செயலகத்தின் வேண்டுகோளுக்கமைய 80 இலட்சம் ரூபா செலவில் மேற்படி புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த வாய்க்காலானது முன்னர் 80 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டது.

ஆனால் புனரமைப்பு வேலைகள் சீரான முறையில் இடம்பெறாமையினால் மழை காலங்களில் வெள்ள நீர் நிரம்பிக் காணப்பட்டு வந்தது.

இதனால் அவ்வாய்க்கால் ஊடாக பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள் என பல தரப்பட்டவர்கள் தினமும் பல சிரமங்களின் மத்தியில் பயணித்து வந்தனர்.

இதனால் குறித்த வாய்க்காலினை புனரமைத்து தருமாறு அப்பிரதேச மக்களால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விடுக்கப்பட்டிருந்த கோரிக்கை தொடர்பான செய்தி ஒன்று கடந்த ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி வலம்புரிப் பத்திரிகையில் வெளிவந்தது.

இந்தக் கோரிக்கையினை கவனத்திற்கொண்ட கரவெட்டி பிரதேச செயலகமானது இவ்வாய்க்காலினை மீண்டும் புனரமைப்பதற்கு முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-60)

## யாழ். அனலைதீவு பொதுநூலக தேசிய வாசிப்பு மாத போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் அனலைதீவு பொதுநூலகத்தால் தேசிய வாசிப்பு மாதம் ஒக்டோபர் -2014 மற்றும் தேசிய வாசிப்பு மாத பத்தாண்டு பூர்த்தி என்பவற்றை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் வாசகர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளின் முடிபுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**திருக்குறள் மனனம் - தரம் 01**

கு.கௌதம் (யா/அனலைதீவு தெற்கு அ.த.க. பாடசாலை), ர.மதுசியா (யா/அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை), (க.கிசாயினி யா/அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை)

**திருக்குறள் மனனம் - தரம் 02**

த.சகானா (யா/அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை), ர.டினோயா (யா/அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை), கு.அபிசாயினி (யா/ அனலைதீவு தெற்குஅ.த.க.பாடசாலை)

**வாசிப்பு - தரம் 03**

ஜெ.ஜெனார்த்திகா (யா/அனலை தீவுவடலூர் அ.த.க.பாடசாலை), பி.அபிசாளினி (யா/அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை), க.அபினயன் (யா/அனலைதீவு தெற்கு அ.த.க. பாடசாலை)

**திருக்குறள் மனனம் - தரம் 04, 05**

த.பிரியா (யா/அனலைதீவு வடலூர் அ.த.க. பாடசாலை), செ.விவேதினி (யா/ அனலைதீவு தெற்குஅ.த.க.பாடசாலை), த.லக்சிகா (யா/ அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை)

**திருக்குறள் மனனம் - தரம் 06, 07, 08**

த.தாட்சாயினி (யா/ அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்), செ.மதுசியா (யா/ அனலைதீவு சதாசிவமகாவித்தியாலயம்), த.துவாரகா (யா/ அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்)

**கவிதை - தரம் 09, 10, 11**

ஸ்ரீ.மதுசானினி (யா/அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயம்), ச.சுவேதிகா (யா/அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்), உ.துஸயந்தன் (யா/அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்)

**குழுசஞ்சிகை ஆக்கம்**

"மலரும் மொட்டுக்களும்" (தரம்-08) யா/அனலைதீவு சதாசிவமகாவித்தியாலயம், "அமுது" (தரம்-07) - யா/அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயம், "தளிர்"(தரம்-08) - யா/அனலைதீவு சதாசிவமகாவித்தியாலயம்

**பொதுஅறிவுதிறந்தபிரிவு**

உதயசீலன் துஸ்யந்தன் (6ஆம் வட்டாரம், அனலைதீவு), நவரெத்தினம் ராதிகா (1ஆம் வட்டாரம், அனலைதீவு), ராஜீவ் சாத்விகா (2ஆம் வட்டாரம்,அனலைதீவு)

**சிறந்த நூலக அங்கத்தவருக்கான பரிசு**

சத்தியசீலன் மேனகன் (1ஆம் வட்டாரம், அனலைதீவு), சத்தியசீலன் சுவேதிகா(1ஆம் வட்டாரம்,அனலைதீவு), கருணாநிதி அனுசியா (6ம வட்டாரம்,அனலைதீவு) ஆகியோரின் பெயா விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 74 1/2<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BA/ சொந்த தொழில்<br>தொ.இ: B/2044 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 13 1/2<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: G/3085 |
| பிறப்பு: 1974 RC<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/2045 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: 99 செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSC/பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: சைவ போசனம்<br>தொ.இ: G/3093 |
| பிறப்பு: 1978<br>இந்துநட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா; 20<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/2048 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா: 28 செவ் இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L/ வங்கி உத்தியோகத்தர்<br>தொ.இ: G/3101 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4ஆம்<br>கி.பா: 34 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/2051 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2ஆம்<br>கி.பா: 22 1/2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்<br>தொ.இ: G/3103 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'விமர்சன ரீதியான வேறுபாடு' கலைச் சஞ்சிகை கருத்துரை


சமகாலக்கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் கருத்துரையில் பன்னிரண்டாவது நிகழ்வாக விமர்சன ரீதியான வேறுபாடு எனும் தலைப்பில் அசாரா ஜலீல் கருத்துரை நிகழ்த்தவுள்ளார்.

இலங்கையின் முதலாவது காண்பியக் கலைக்கான சஞ்சிகையாக்கத்தின் வேறுபட்ட நிலவரங்களை வெளிப்படுத்தும் அசாரா ஜலீல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில் பட்டம் பெற்றவரும் டெய்லி மிரரில் வாராந்தம் கலைபற்றி எழுதுபவரும் ஆவார்.

மேற்படி கருத்துரை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை 16 ஆம் திகதி முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல்12 மணிவரை சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக் கான ஆவணக்காப்பகம் இல.199, கோவில் வீதி ,நல்லூரில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு சமகாலக்கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தின் முகாமையாளர் தி.சதீஸ்குமார் அறிவித்துள்ளார். (இ




# உயிருக்கு அச்சுறுத்தலாகவுள்ள வீதியை கொஞ்சம் கவனியுங்கள்

(கரணவாய்)

யாழ்.துன்னாலை தெற்கு ஜே/370 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள காளிகோவில் வீதி நீண்ட காலமாக குன்றும் குழியுமாக காணப்படுவதாக அப்பிரதேச மக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் வீதியில் காணப்படுகின்ற வெள்ளநீர் வழிந்தோடும் குழாய் ஒன்றும் நீண்ட காலமாக பழுதடைந்து காணப்படுவதாக கூறப்படுகிறது.

சுமார் 5 ஆயிரம் மக்களின் பாவனையில் உள்ள குறித்த வீதியானது அண்மைக்காலமாக கவனிப்பாரின்றி காணப்படுகிறது.

பழுதடைந்த நிலையில் காணப்படுகின்ற குழாய் ஊடாக மழை நீர் வழிந்தோடுவதில்லை.


இதனால் இவ்வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் குழாய் வழியாக வெள்ள நீர் சென்று நிரம்பும் வழிநீர் கிடங்குகள் உடைந்து காணப்படுகின்றன.

இதேவேளை இவ்வீதியால் சிறுவர்களை தனியாக பயணிக்க விடுவதற்கு பெற்றோர்கள் அச்சப்படுகின்றார்கள்.

ஏனெனில் தண்ணீர்க் கிடங்குகளின் மேற்பகுதி உடைந்திருப்பதால் சிறுவர்கள் அக்கிடங்குகளில் விழுந்து விடுவார்கள் என அச்சப்படுகின்றார்கள்.

எனவே பயணிப்பதற்கு மிகுந்த சிரமத்தினை கொடுக்கும் இவ் வீதியினை சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனத்தில் கொள்ள வேண்டும் என அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7-60)



# ஜனாதிபதியின் பிறந்தநாளை முன்னிட்டு வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் வழிபாடு

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தால் ஜனாதிபதியின் பிறந்த தின நாளாகிய எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தில் காலை 8 மணியளவில் விசேட பூசை யொன்று நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.இச்சிறப்பு நிகழ்வில் முக்கியஸ்தர்கள், பிரமுகர்கள், பொது மக்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# கலைத்தூது அழகியற் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை

(கொழும்புத்துறை)

யாழ்.திருமறைக்கலாமன்றக் கலைத்தூது அழகியற் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் கலைத்தூது அழகியற் கல்லூரி அதிபர்திருமதி அன்சலா அல்போன்ஸ்ஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பியும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள அழகியற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மதிவாணி விக்னராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7-51)

# ஈழத்து சபரி மலையில் மகரஜோதி பெருவிழா

ஈழத்து சபரி மலை அகில இலங்கை யாழ்.கோண்டாவில் சபரி ஐயப்ப தேவஸ்தானத்தில் இவ்வாண்டுக்கான மகர ஜோதிப் மண்டல விரத மகர மஹோற்சவ பெருவிழா நிகழ்வுகள் நாளை மறுதினம் 17 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 15.01.2015 வியாழக்கிழமைவரை மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து சாமிமார்களுக்கு புனித விரத மாலை அணிவிக்கப்படும். அன்று தொடக்கம் மண்டல விரத பூஜைகள் யாவும் சிறப்பாக நடை பெறவுள்ளன.தினமும் காலை 6 மணிக்கு நடைதிறத்தல, மூலவர் அபிஷேகம்,கணபதிஹோமம்,விசேட பூஜைகள், பஜனை ,படிப்பூஜை, ஹரிவராசனம் இரவு 9 மணிக்கு நடை சாத்துதல்என்பனதினமும் நடைபெறும்என ஆலயபிரதமகுரு கிஹரிஹர ரசுதசிவஸ்ரீயார்அறிவித்துள்ளார். (இ

# பயன்தரு மரக்கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளன

(பருத்தித்துறை)

யாழ்.கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் வே. சிவயோகம் தெரிவித்துள்ளார்.

நாளைஞாயிற்றுக்கிழமைகாலை 9 மணிக்கு கரவெட்டி மூத்த விநாயகர் ஆலய பகுதியிலுள்ள தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் அலுவலகத்தில் வைத்து இம்மரக்கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

வடமாகாணசபையின்மரம்நடுகை திட்டத்தின் கீழ் இம் மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7-10-60)


# பாராட்டு விழா

யாழ்.கைதடி வடக்கு செல்வா சனசமூக நிலையம் இவ் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளியை அடைந்த மாணவர்களுக்கான பாராட்டு விழாவை நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடத்த உள்ளது.

கைதடி குருசாமி வித்தியாலயத்தின் சனசமூக நிலையத் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கியின் பரந்தன் கிளை முகாமையாளர் க.சிறிதரன்,கைதடி குருசாமி வித்தியாலய அதிபர் திருமதி.ப.செல்வநாயகம் மற்றும் கைதடி எருதிடல் அ.த.க. பாடசாலை அதிபர் ந.ஜெயரூபன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர் லயன் ப.செல்லத்துரை,கைதடி எருதிடல் அ.த.க.பாடசாலை அதிபர் ச.ஞானகுமார்,கைதடி குருசாமி வித்தியாலய ஆசிரியை திருமதி. கே.செல்வநாயகம், கைதடி யூப்பிட்டர் கல்வி நிலைய இயக்குநர் மற்றும் திருமதி லனிதா மதியழகன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். (இ-7-254)

# அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் ஸ்ரீராமநாம கானாமிர்தம் இசைவேள்வி


கத்ரி கோபாலநாத்


நெய்வேலி சந்தானகோபாலன்


பம்பாய் ஜெய ஸ்ரீ


ஏ.கன்னியாகுமரி

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் ஸ்ரீராமநாம கானாமிர்தம் இசைவேள்வி-2014 விழா நேற்றையதினம் நல்லூர் கம்பன் கோட்டம் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் ஆரம்பமாகியது.

தென்னிந்திய இசை கலைஞர்களான சந்தான கோபாலன், பம்பாய் ஜெயஸ்ரீ, கத்ரி கோபால்நாத், ஏ.கன்னியாகுமரி ஆகியோர் கலந்து சிறப்பிக்கும் இந்நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 5.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

லண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் அனுசரணையுடன் இன்றைய தினம் இடம்பெறவுள்ள இசைப் பேரரங்கில் தலைமையுரையினை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வழங்கவுள்ளதோடு பாடலினை நெய்வேலி ஆர். சந்தான கோபாலனும் வயலின் -நே. கே.திலீப், மிருதங்கம் -நெல்லை ராம், கஞ்சிரா அனிருத் ஆத்ரேயா ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

யூரோ ஸ்டார் யூ.கே.ஈ.லிமிட்டெட் அனுசரணையுடன் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள இசைப் பேரரங்கில் தலைமையுரையினை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் வழங்கவுள்ளதோடு பாடலினை நாதவாணி ஸ்ரீமதி பம்பாய் ஜெய ஸ்ரீயும் வயலின் - எம்பார் கண்ணன், மிருதங்கம் - நெல்லை ராம், கஞ்சிரா அனிருத் ஆத்ரேயா ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

பூபாலசிங்கம் புத்தகசாலை அனுசரணையுடன் நாளை மறுதினம் திங்கட்கிழமைஇடம்பெறவுள்ளஇசைப் பேரரங்கில் தலைமையுரையினை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வழங்கவுள்ளதோடு சக்ஸபோன் பத்மஸ்ரீ கத்ரி கோபால்நாத், வயலின்கலைமாமணி ஸ்ரீமதி ஏ.கன்னியாகுமரி, மிருதங்கம் டெல்லி சாய்ராம், கஞ்சிரா அநிருத்ஆத்ரேயா ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17 | 15 |
| 08 | 11 |
| 1949 | 2006 |

திதி: பூர்வபட்ச ஏகாதசி

### திருமதி நேசமலர் சின்னத்துரை

மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையை
பிறப்பிடமாகவும் கொழும்பு மட்டக்குளியை
வதிவிடமாகவும் கொண்டவர்

அம்மா, அன்பே சிவம் என்பது உன்னில் கண்டது
உன் முகமே எங்கள் உலகம் அம்மா.
அம்மா, நாம் பசுவைக் காணாத கன்றுகள் போல்
உன் முகத்தை தேடி அலைகின்றோம்.
அம்மா, உங்கள் முகம் மலர்ந்த சிரிப்பை
எப்போ எங்கே காண்போம் அம்மா

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கரைப்பிரான் ஆதி விநாயகப் பெருமானையும் ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாளையும் வேண்டுகின்றோம்.

தகவல்
பிள்ளைகள்
தொலைபேசி இல:
0212213058

என்றும் உங்கள் நினைவுகளோடு
கணவன்,
பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(8322)

## நினைவு நாள்

15.11.2014





திருமதி
**தெய்வேந்திரா சுமதி**
(நோர்வே)

பிறப்பு:
1967.07.26
மறைவு:
2000.01.01

**பேரம்பலம் பிரதீபன்**

பிறப்பு:
1981.03.13
மறைவு:
1998.11.15

கண்ணின் மணிகளே
எங்கள் குடும்ப
ஒளி விளக்கே
அன்பால் அரவணைத்த
செல்வங்களே
6 ஆண்டும், 15 ஆண்டும்
ஆறாத எம் துயரம்
வாழும் வரை தீராது.

கந்தரோடையை பிறப்பிடமாகவும் உருத்திரபுரம் புதுமுறிப்பை வசிப்பிடமாகவும் கொண்டவர்களாவர். இவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

இ. பேரம்பலம் குடும்பம்,
சுமதி அரைக்கும் ஆலை, புதுமுறிப்பு.
077 160 4986

(சி-9076)

# மரண அறிவித்தல்

## அமரர் தங்கவேலு காந்தமலர்



புலோலி வட கிழக்கு சந்தாதோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேலு காந்தமலர் அவர்கள் கடந்த திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் முத்துதங்கவேலுவின் அன்பு மனைவியும் அமரர்களான அண்ணாவி கந்தையா- அன்னம்மா தம்பதிகளின் அருமை மகளும் அமரர்களான முத்து- பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் மற்றும் நாகேந்திரனின் அருமைச் சகோதரியும் விஜயகலா, விஜயதாசன் (கனடா), சதீஸ்குமார் (கனடா), சுகந்தி (கனடா), விஜயலதா (நோர்வே), அமரர் சாந்தி மற்றும் ஸ்ரீநிவாசன் (நோர்வே), சுகன்யா (இந்தியா) ஆகியோரது அன்புத் தாயாரும் நாகேந்திரன்- பிங்கலாதேவியின் பாசமிகு மைத்துனியும் அமரர் புஸ்பராசா மற்றும் அன்ரனி தவராசா (பாப்பா), அலங்கீஸ் (கனடா), ரவி (இந்தியா), வாகினி (கனடா), ராதிகா, ரதிக்கா, ரதீஸ், ரந்தீஸ் ஆகியோரது அருமை மாமியாரும் பிரசன்னா, ஜெனாத், இலக்கியா, அனஜா, அனுசாந், டிலக்ஸன், விசாலி, றக்ஸனா, டிலக்ஸனா, அபிராஜ், அகில், ஆன்ரியன், லிபின்சூரியா ஆகியோரது அன்புப் பேர்த்தியும் ஐஸ்வர்யா, ஆகாஸ், சர்மி, ஆகியோரது பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 16.11.2014 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புலோலி ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தா தோட்டம், புலோலி வடகிழக்கு,
புலோலி.
தொ.பே.இல.021 320 5571

(8327)

தகவல்:-
மு.தங்கவேலு (கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களை மீட்டு வரும் முயற்சி

# மகிழ்ச்சி தரும் நிலையை இதுவரை எட்டவில்லை

**கொழும்பு மேல்நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்த 5 மீனவர்களை இந்திய அரசிடம் ஒப்படைக்க அந்நாட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒப்புக் கொண்டார் எனத் தகவல்கள் வெளியாகி வருகின்றன. இந்த நிலையில் மீனவர்களை பத்திரமாக மீட்டு வரும் முயற்சியில் மகிழ்ச்சி தரும் நிலையை இன்னும் எட்டவில்லை என்று இந்திய வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.**



சார்க் நாடுகளுக்கு இடையேயான கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் 5 தமிழக மீனவர்களை இந்தியாவிடம் ஒப்படைக்கவும், அவர்கள் மீதான மேல் முறையீட்டு வழக்கை இந்திய நீதிமன்றத்தில் நடத்தவும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் ஒப்புக் கொண்டார் என தகவல்கள் வெளியாகின. இந்தத் தகவலை பா.ஜ.க மூத்த தலைவர் சுப்பிரமணிய சாமி முதலில் தெரிவித்த நிலையில், இலங்கை அமைச்சர் செந்தில் தொண்டமான் 5 மீனவர்களை ஒப்படைக்க ஜனாதிபதி மகிந்த கொள்கை அடிப்படையில் முடிவு செய்திருக்கிறார் எனத் தெரிவித்திருந்தார். இதனை அறிந்த பாதிக்கப்பட்ட மீன வர்களின் குடும்பத்தினர் மற்றும் அப்பகுதி மீனவர்கள் தங்களது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துள்ளனர். இதற்கிடையே இந்தப் பிரச்சினை குறித்து செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த இந்திய வெளியுறவுத்துறை செயதித் தொடர்பாளர் சையது அக்பருதீன் - 5 மீனவர்களை மீட்கும் விவகாரத்தில் மகிழ்ச்சி தரும் நிலையை இன்னும் எட்டவில்லை. பாதிக்கப்பட்ட 5 மீனவர்களும் பத்திரமாக நம் நாட்டுக்கு திரும்புவதற்கான அனைத்து வாய்ப்புகளையும், அனைத்து நிலைகளிலும் மத்திய அரசு ஆராய்ந்து வருகிறது. இலங்கை நீதிமன்றத்தின் தீர்ப்பை அங்குள்ள இந்திய தூதரகம் பெற்றுள்ளது. அந்த தீர்ப்பு சிங்கள மொழியில் 200 பக்கங்களில் உள்ளது. வழக்கறிஞர்கள் அதனை ஆராய்ந்து வருகின்றனர்.

இந்திய தூதரகம் சட்ட நிபுணத்துவம் வாய் ந்தவர்களைக் கொண்டு, இந்த பிரச்சினையை சிறந்த முறையில் அணுகி, இந்தியாவைச் சேர்ந்த 5 பேரும் பத்திரமாக நாடு திரும்புவதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறது என்றார்.

மேலும், மிகவும் சிக்கலான இந்த பிரச்சினையைப் பற்றி தொடர்ந்து ஊடகங்களில் பேச அரசு விரும்பவில்லை. அதே வேளையில் மீனவர்களை மீட்க அனைத்து முயறசிகளையும் எடுத்து வருவதாகவும் தெரிவித்தார். (இ-7)

## பெரும் நட்டத்தில் சேமலாப நிதியம்

### தினேஷ் குணவர்த்தன கவலை



ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பல கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான தினேஷ் குணவர்த்தன நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதியத்தின் இலாபத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் கொழும்பு பங்குச்சந்தையில் முதலீடு செய்யப்பட்டது. முன்னணி நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட போதும் அவற்றில் இருந்து எவ்விதமான இலாபமும் ஊழியர் சேமலாப நிதியத்துக்குக் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

குறிப்பாக முன்னணி விமான நிறுவனத்தின் 18 இலட்சத்து 63 ஆயிரத்து 676 பங்குகள் 50 கோடி ரூபாவுக்கு வாங்கப்பட்டன ஆனால் இந்த நிறுவனத்திலிருந்து இலாபம் எதுவும் கிடைக்கவில்லை.

இதேபோன்றுநிதி நிறுவனம் ஒன்றின் 20 கோடியே 54 இலட்சத்து 89 ஆயிரத்து 613 ரூபா பெறுமதியான பங்குகளையும் ஹோட்டல் ஒன்றின் 81 கோடியே 3 இலட்சத்து 21 ஆயிரத்து 611 ரூபா பெறுமதியான பங்குகளையும் ஊழியர் சேமலாப நிதியம் கொள்வனவு செய்தது இவற்றில் இருந்து இலாபம் எதுவும் கிடைக்கவில்லை.

இவ்வாறு 14 முன்னணி நிறுவனங்களின் பங்குகளில்இருந்து எந்தவிதமான இலாபமும் கிடைக்கவில்லை. இவற்றாலேயே ஊழியர் சேமலாப நிதியத்துக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார் தினேஸ் குணவர்த்தன. (இ)

## 904 சூதாட்ட வர்த்தகங்களுக்கு அனுமதி; பெயர் விபரங்களை வெளியிட முடியாதாம்

இலங்கையில் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் கசினோ மற்றும் சூதாட்ட வர்த்தகம் தொடர்பான 904 இறைவரி கோப்புகளை திறந்துள்ளதாக நிதியமைச்சு நாடாளுமன்றத்திற்கு அறிவித்துள்ளது. இவ்வாறு வரி செலுத்துவதானது அந்த வர்த்தகங்களை நடத்துவதற்கு சட்டரீதியான அனுமதியை வழங்குவதாகும்.

கசினோவுடன் தொடர்புடைய 5 வர்த்தகங்களும், குதிரை பந்தய வர்த்தகம் தொடர்பில் 3 முகவர்கள் ஊடாக 12 பந்தய நிலையங்களும், நேரடி ஒளிப்பரப்புடன் கூடிய 884 பந்தய நிலையங்களும் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் நிதியமைச்சு இந்த தகவலை வழங்கியுள்ளது. அத்துடன் சூதாட்ட வர்த்தகத்திற்காக விசேட அனுமதிகள் பெறப்பட வேண்டியதில்லை எனவும் தேசிய இறைவரி சட்டத்தின் கீழ் செயற்படுவது போதுமானது எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும் தேசிய இறைவரி சட்டமூலகத்தில் விதிக்கப்பட்டுள்ள தடைகாரணமாக சூதாட்டம் மற்றும் பந்தய வர்த்தகத்தில் ஈடுபடும் நபர்களின் பெயர் விபரங்களை வெளியிட முடியாது என்றும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (இ)

## மசாஜ் நிலையமொன்று மருதானையில் முற்றுகை

மருதானை, டார்லி வீதியில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கிவந்த விபசார நிலையமொன்றை கடந்த புதன்கிழமை மாலை பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முற்றுகையிட்டு, 6 பெண்களையும் 2 ஆண்களையும் கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்பிட்டிய மற்றும் குடகல கமுவ பகுதிகளைச் சேர்ந்த ஆண்கள் இருவரும் உனகஹ, உடமாதுர, இரத்மலானை ஆகிய பெண்கள் 6 பேருமே கைதுசெய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்து விசாரணை இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ)

## தேசிய பொருளாதாரத்தை வீழ்த்த சதி! சவால்களை தனியாக எதிர்கொள்வேன்

### ஜனாதிபதி தெரிவிப்பு



வெற்றி கொண்ட சுதந்திரத்தை சவாலுக்கு உட்படுத்தவோ அல்லது பாரிய பொருளாதார அபிவிருத்திக்கு தடையேற்படுத்தவோ எவருக்கும் இடமளிக்க போவதில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி இதனை கூறியுள்ளார்.

நாடு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைவதை தற்போது சிலரால் சகித்து கொள்ள முடியவில்லை. தேசிய பொருளாதாரத்தை வீழ்த்தவே அவர்கள் முயற்சித்து வருகின்றனர். நாட்டை பின்னோக்கி இட்டுச் செல்ல இடமளிக்க முடியாது.

நாட்டை பின்னோக்கி இட்டுச் செல்வது பாரிய அநியாயம். பிறருக்கு ஏற்ற வகையில் ஆட்சியை முன்னெடுத்துச் செல்ல இடமளித்து வேடிக்கை பார்க்க தயாரில்லை. தனிப்பட்ட ரீதியில் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் சுமையை மக்கள் சுமத்தவில்லை. ஆட்சியாளர் என்ற வகையில் பிரச்சினைகளை நான் எதிர்கொளவேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ)

# மனிதப் புதைகுழியை தோண்ட 93 இலட்சம் ரூபா செலவாகும்

**குருக்கள் மடம் மனிதப் புதைகுழியைத் தோண்டுவதற்கு 93 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்றும் இதை தோண்டுவதற்குரிய ஏற்பாடுகளை உரிய தரப்புக்களுடன் பேசி நடவடிக்கை எடுப்பதற்கு கால அவகாசம் தேவை என்றும் களுவாஞ் சிக்குடி பொலிஸார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை களுவாஞ்சிக்குடி நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தனர்.**

மட்டக்களப்பு குருக்கள் மடம் மனிதப் புதைகுழிதோண்டுவது தொடர் பாக கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் பொறியியலாளருமான சிப்லி பாறூக்கினால், கடந்த மாதம் 2ஆம் திகதி களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு ஏற்கனவே விசாரணைக்கு வந்த போது, இந்த புதைகுழியை தோண்டுவதற்கான ஏற்பாடுகள் குறித்து நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு, நீதிமன்றம் உத்தர விட்டிருந்தது.

இந்நிலையிலேயே, இந்த மனு மீதான விசாரணை நேற்று இடம்பெற்றது. இந்த அறிக்கையை பரிசீலித்த நீதிபதி ஏ.எம்.றியாழ், அடுத்த ஆண்டு (2015) ஜனவரி மாதம் 29 ஆம் திகதிக்கு வழக்கு விசாரணையை ஒத்தி வைத்தார்.

1990ஆம் ஆண்டு, காத்தான்குடியைச் சேர்ந்த சிலர் கலமுனையிலிருந்து காத்தான குடிக்கு சென்று கொண்டிருந்த போது குருக்கள்மடம் பிரதேசத்தில் வைத்து கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

இவர்களின் சடலங்கள், குருக்கள்மடம் பகுதியில் புதைக்கப்பட்டுள்ளதாகக் கோரி, உயிரிழந்தவர்களின் உறவினர்கள் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருட்டுப்போன மாடு மீட்கப்பட்டுள்ளது

(தர்மபுரம்)

கிளிநொச்சி பிரமந்தனாறு பிரதேசத்தில் எருது மாடுகள் களவாடப்படுகின்ற சம்பவங்கள் அதிகரித்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கடந்த சில நாட்களுக்கு முன்னர் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான விவசாய நிலத்தை உழுவதற்கு பயன்படுத்தப்படும் எருது மாடு ஒன்று களவாடப்பட்டது.

மாட்டின் உரிமையாளர் தனது நண்பர்களின் உதவியுடன் தனது எருது மாடு யாழ்ப்பாண வாசியொருவருக்கு இறைச்சிக்காக விற்கப்பட்டுள்ளதை அறிந்து கொண்டார்.

அவர் உடனடியாக யாழ்ப்பாண வாசியிடம் சென்று தனது மாட்டை அடையாளப்படுத்தியதுடன் அதை கொள்வனவு செய்த உரிமையாளரிடம் நடந்தவற்றை எடுத்துக் கூறியதை அடுத்து மாட்டை அவர் உரிய இடத்தில் கொண்டு சென்று விட்டுள்ளார். (அ-2-282)

# கண்டாவளை பிரதேசத்திற்கு 80 மலசலகூடங்கள் அமைப்பு

## இவ் வேலைத்திட்டம் இவ்வாண்டுக்குள் பூர்த்தி

**மீள்குடியேற்ற அமைச்சின் நீர் மற்றும் சுகாதார திட்டத்தின் கீழ் கிளிநொச்சி-கண்டாவளை பிரதேசத்தில் 80 மலசல கூடங்களும் இரண்டு பொதுக்கிணறுகளும் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக கண்டாவளை பிரதேச செயலக புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இவ்வாண்டு ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த வேலைத் திட்டங்கள், இவ்வாண்டு நிறைவுக்குள் முழுமையாக பூர்த்தியடையும் என தெரிவிக்கப்படுகின்றது.

மலசலகூடம் ஒவ்வொன்றும் 50 ஆயிரம் ரூபாய் செலவிலும் கிணறு ஒவ்வொன்றும் தலா ஒரு இலட்சம் ரூபாய் செலவிலும் நிர்மாணிக்கப்படுகின்றன.

குமரபுரம், பரந்தன், உமையாள் புரம், கோரக்கன்கட்டு, ஊரியான், முரசுமோட்டை, கண்டாவளை பெரியகுளம், கல்மடுநகர், தர்மபுரம் மேற்கு, தர்மபுரம் கிழக்கு, பிரமந்தனாறு, புன்னை நீராவி, புளியம்பொக்கணை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இந்த மலசல கூடங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.

இதேவேளை முரசுமோட்டை மற்றும் புன்னை நீராவி ஆகிய இடங்களில் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. கண்டாவளை பிரதேசத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டும் மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக 34 மலசல கூடங்களும் 2 பொதுக்கிணறுகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)




# புகையிரத சேவைகளில் விசமிகளின் விசமத்தனம்

## கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

வடபகுதிக்கான புகையிரத சேவையின் போது சில விசமிகளின் விரும்பத் தகாத செயற்பாடுகளால் புகையிரத சேவைகளும் மற்றும் பயணிகளும் இடர்பாடுகளை எதிர்கொள்வதாக புகையிரத திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு நாவற்குழி புகையிரத நிலையத்திலுள்ள புகையிரதங்கள் வழித்தடம் மாறும் தண்டவாளத்தின் திசை திருப்புமுனைப் பகுதியை விசமிகள் கற்களால் மூடியமை காரணமாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த யாழ்தேவி, கடுகதி புகையிரதமும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த தபால் புகையிரதமும் நாவற்குழி புகையிரத நிலையத்தில் வழித்தடம் மாற முடியாமல் சுமார் அரை மணி நேரத்திற்கு மேல் நிறுத்தி வைக்கப்பட்டே தொடர்ந்துள்ளன.

மேற்படி புகையிரதங்கள் ஒன்றையொன்று விலத்தி வழித்தடம் மாறி பயணிக்கும் தண்டவாள முனைப் பகுதியில் இருந்து இலத்திரனியல் தகவல் சமிக்ஞை கிடைக்காத காரணத்தினால் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் வழித்தடம் மாறும் தண்டவாள முனைப்பகுதிக்கு சென்று பார்த்த போதே விசமிகளால் அப்பகுதி முழுவதும் கற்கள் கொண்டு மூடப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதன்பின்னர் கற்கள் முழுவதும் அகற்றப்பட்டு இலத்திரனியல் சமிக்ஞை கிடைத்த பின்னர் தான் வழித்தடம் மாற்றம் செய்யப்பட்டு புகையிரதங்கள் ஒன்றையொன்று மாறி பயணத்தை தொடர்ந்தன.

மேலும் அண்மைக்காலமாக புகையிரத நிலையங்களில் புகையிரதத்தை பார்வையிட வருபவர்களில் சிலர் புகையிரத மேடையில் வெற்றிலை உமிழ்வதும் கழிவுப் பொருட்களை அங்காங்கே வீசுவதும் மலசலகூடங்களின் கதவுகளையும் மற்றும் புகையிரத பாதுகாப்பு கடவைகளின் தடுப்புக்களையும் சேதமாக்குவது தொடர்கின்றன.

இதேவேளை புகையிரதத்தினுள் ஏறி பார்வையிடுவோர் ஆசனங்களில் எழுதுவது, சேதப்படுத்துவது மற்றும் மின்விளக்குகள், மின்விசிறிகள் ஆகியவற்றை சேதப்படுவது என்பனவும் தொடர்கின்றன.

புகையிரதம் வருகின்றபோது புகையிரத பாதுகாப்பு கடவைகள் மூடப்பட்ட வேளை புகையிரதப் பாதையை கடந்து பயணத்தை தொடர்கின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளால் உயிராபத்துக்களையும் விபத்துக்களையும் மக்கள் சந்தித்துள்ளனர்.

எனவே புகையிரதத்தை பார்வையிட வருவோர்ரும் மற்றும் பயணிகளை அழைத்துவருவோரும் இவ்விடங்களில் அவதானத்துடன் செயற்படுமாறும் இல்லையேல் புகையிரத பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் நடவடிக்கைக்கு உட்பட வேண்டிய நிலை ஏற்படுமெனவும் புகையிரத திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-2-15)

# பூநகரி குளத்தை உருவாக்க வேலைகள் முன்னெடுப்பு

(கண்டாவளை)

பூநகரி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கொக்குடையான், மாலாப்பு ஆகிய இரு பெரிய நீர்த்தேக்கங்களை உள்ளடக்கி பூநகரி குளம் உருவாக்கப்படவுள்ளது.

இதற்கான மதிப்பீடுகள் இடம்பெற்று ஆரம்ப அளவீட்டு வேலைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் 10 கிலோமீற்றர் நீளமான பகுதியில் 11 சிறிய குளங்களை உள்ளடக்கியதாக மேற்படி குளம் அமைக்கப்படவுள்ளது.

குறித்த குளத்தின் தேவையை வலியுறுத்தி பூநகரி பிரதேசத்தைச் சேர்ந்த கமக்கார அமைப்புக்கள் இணைந்து பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இத்திட்டத்திற்கென 2 ஆயிரத்து 237 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்து கொடுத்துள்ளார்.

இக்குளம் அமைக்கப்படும் பட்சத்தில் பூநகரி பிரதேசத்தில் நிலவி வரும் குடிநீர் பிரச்சினை தீர்க்கப்படுமென எதிர்பார்க்கப்படுவதோடு நிலத்தடி நீர் உவர் நீராக மாற்றமடைவதும் தடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் மழை நீரை நம்பி வயல் நிலங்களில் நெற்செய்கை மேற்கொண்டு வரும் 10 கிராம அலுவலர் பிரிவிலுள்ள 20 கமக்கார அமைப்பைச் சேர்ந்த விவசாய குடும்பங்களும் நன்மை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2-263)

# கொஸ்லாந்தை மக்களுக்கு உதவி



பதுளை கொஸ்லாந்தையில் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென வவுனியா பேருந்து நிலைய வர்த்தகர்கள், நலன்புரிச் சங்கத்தினர் வவுனியா பேருந்து நிலைய கடைகளில் பொருட்களை சேகரித்தனர். சேகரிக்கப்பட்ட பொருட்களை சங்கத்தின் செயலாளர், உறுப்பினர்கள் ஆகியோர் அனர்த்தம் இடம்பெற்ற பகுதிக்கு சென்று வழங்கியுள்ளனர். இதில் ஒரு குடும்பத்தினருக்கு தலா ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகளை 90 குடும்பங்களுக்கு வழங்கினர். இதனை படத்தில் காணலாம். (படம்:- குருமன்காடு செய்தியாளர்)

# கிளி. மாவட்ட தமிழ்ச்சங்கத்தின் எழுத்துத் தேர்வு போட்டி முடிவுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கம் நடத்திய திருக்குறள், தமிழ் இலக்கிய எழுத்துத் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு,

**பிரிவு-அ (தரம்-12,13)**

கலைச்செல்வன் ஜெயந்தி (கிளி/வட்டக்கச்சி உ.நி.ப.), இரண்டாமிடம் இருவர்) திருநாவுக்கரசு காந்தரூபி (கிளி/வட்டக்கச்சி உ.நி.ப.), நித்தியானந்தன் குகாயினி (கிளி/உருத்திரபுரம் உ.நி.ப.), கருணாநிதி யதுசா (கிளி/வட்டக்கச்சி உ.நி.ப.)

**பிரிவு -ஆ (தரம்-10,11)**

கருணானந்தன் அபிசிகா (கிளி/முருகானந்தா கல்லூரி), (இரண்டாமிடம் இருவர்) ஜெயக்குமார் கயானி (கிளி/வட்டக்கச்சி உ.நி.ப.), அ.அர்ச்சனா (கிளிநொச்சி உ.நி.ப.), அமிர்தலிங்கம் யனகா (கிளி/சிவநகர் அ.த.க.பா.)

**பிரிவு-இ (தரம்-8,9)**

யோ.சதனிகா (கிளி/சிவநகர் அ.த.க.ப.), இராசரட்ணம் சங்கவி (கிளி/உருத்திரபுரம் உ.நி.ப.), கண்ணதாசன் லம்போதரன் (கிளி/வட்டக்கச்சி அ.த.க.ப.)

**பிரிவு-ஈ (தரம்-6,7)**

இ.சானுயா (கிளி/முருகானந்தா கல்லூரி), கே.அபியுகா (கிளி/திருவையாறு உ.நி.ப), (மூன்றாமிடம் மூவர்) கெ.கனிச்ரெலா, தர்சிகா (கிளி/பளைமத்திய கல்லூரி), யோ.பத்மினி (கிளி/உருத்திரபுரம் ம.வி.)

**பிரிவு-உ (தரம்-4,5)**

(முதலாமிடம் இருவர்) தயாபரன் கவிவாணன், சபாநாயகன் தாரகன் (கந்தபுரம் எண் -01 அ.த.க.ப.), அரவிந்தன் அம்ரிதா (உருத்திரபுரம் உ.நி.ப.), கோகுலரூபன் சகானா (கந்தபுரம் எண்-01 அ.த.க.ப.)

**பிரிவு-ஊ (தரம்-2,3)**

சண்முகராசா பாமகள் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.) (இரண்டாமிடம் இருவர்) பற்பநாதன் நிவேதனா (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.ப.), தயாபரன் தமிழ்நிலவன் (கிளி/திருவையாறு உ.நி.ப.), (மூன்றாமிடம் இருவர்) மகேந்திரன் விதுனன் (கிளி/திருவையாறு உ.நி.ப.), தேவகாந்தன் சரண்ணியா (கிளி/விவேகானந்த வித்தியாலயம்). (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பாதுகாப்பு தொடர்பான இந்திய-அமெ. இழுபறி தீர்ந்தது



உலக வணிக ஒப்பந்தத்திற்கு வழிவகுக்கும் வகையில், உணவு பாதுகாப்பு பிரச்சினைகள் தொடர்பில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான கருத்துவேறுபாடுகளை இரு நாடுகளும் சுமுகமாக தீர்த்துள்ளதாக இந்திய வணிகத்துறை துணை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியாவின் பாலியில் கடந்த ஆண்டு நடைபெற்ற உலக வணிக அமைப்பின் உச்சி மாநாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய உலக வணிக ஒப்பந்தத்திற்கு இந்தியா ஆதரவு அளிக்காததை அடுத்து அந்த ஒப்பந்தம் நிறைவேறாமல் போனது.

இந்த ஒப்பந்தத்தில் உள்ள உணவு மானியங்கள் தொடர்பிலான சில விதிகள் தமக்கு பொருந்தவில்லை என்று தெரிவித்த இந்தியா, அந்த ஒப்பந்தத்திற்கு ஆதரவு அளிப்பதிலிருந்து பின்வாங்கியிருந்தது.

இந்நிலையில் இந்தியாவின் கோரிக்கைக்கு உலக வணிக அமைப்பின் பொதுக்குழுவில் அமெரிக்கா ஆதரவு அளிக்கும் என்று இந்திய வணிகத்துறை துணை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இந்த பாலி ஒப்பந்தம் மூலம் ஆண்டுக்கு ஒரு இலட்சம் கோடி டொலர்கள் பணத்தை உலக பொருளாதாரத்தில் சேர்க்க முடியும் என்றும் சுமார் இரண்டு கோடி தொழில்கள் உருவாகும் என்றும் சில பொருளாதார வல்லுநர்கள் நம்புகின்றனர்.

**இந்தியாவின் அச்சம்**

இந்தியாவில் உள்ள இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு உதவும் வகையில் இந்திய அரசாங்கம் அமுல்படுத்திவரும் ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான உணவு பாதுகாப்பு திட்டத்தை இந்த புதிய பாலி ஒப்பந்தம் பாதிக்கும் என்று இந்திய அரசாங்கம் முன்னதாக கவலை தெரிவித்திருந்தது.

இந்தியாவின் உணவு பாதுகாப்பு திட்டத்தின்படி இந்திய அரசு, விவசாயிகளிடமிருந்து அரிசி, கோதுமை போன்ற தானியங்களை சந்தை விலையை விட அதிக விலையில் வாங்கி அதனை ஏழை மக்களுக்கு மலிவு விலையில் அளிக்கிறது.

அத்துடன், எதிர்கால பற்றாக்குறையை சமாளிக்க மீதமுள்ள தானியங்களை சேமித்து பாதுகாப்பதும் இந்த திட்டத்தின் ஒரு அங்கமாகும்.

விவசாயிகளுக்கும் ஏழை மக்களுக்கும் தமது உணவுத் திட்டம் பயனளிக்கும் என்று இந்திய அரசாங்கம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் பாலி ஒப்பந்தம் இந்தியாவின் உணவுப் பாதுகாப்பு திட்டத்திற்கு தடைகளை ஏற்படுத்தலாம் என்று இந்தியா தெரிவித்திருந்தது.

அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் இந்தியாவின் முடிவை கடுமையாக விமர்சித்திருந்தன. உணவு தானியங்களை சேமிப்பது உலக வர்த்தகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று அமெரிக்கா தலைமையிலான மேற்கத்தேய நாடுகள கவலைகளை எழுப்பியிருந்தன.

உணவு மானியங்கள் குறித்த ஒரு தனி ஒப்பந்தம் எட்டப்படும் வரை இந்த பாலி ஒப்பந்தம் எந்த நிபந்தனைகளுமின்றி செயற்பட வேண்டும என்று இந்தியா கோரியிருந்தது.

இந்நிலையில் இந்த கோரிக்கையை அமெரிக்கா ஏற்றுக்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவிற்கு ஒரு பெரிய வெற்றியாக பார்க்கப்படுகிறது. (இ)




## போலி என்கவுண்டர் 7 இராணுவத்தினருக்கு ஆயுள் தண்டனை விதிப்பு

இந்திய நிர்வாகத்துக்குட்பட்ட காஷ்மீரில் மூன்று இளைஞர்களை திட்டமிட்டுக் கொலை செய்ததாக, இரண்டு இராணுவ அதிகாரிகள் உட்பட ஏழு படையினருக்கு இந்திய இராணுவ நீதிமன்றம் ஒன்று. ஆயுள் தண்டனை விதித்திருக்கிறது.

இந்த இளைஞர்களுக்கு பணமும் வேலைவாய்ப்பும் தருவதாகக் கூறி அவர்களை அவர்களின் வீடுகளிலிருந்து வெளியே வரவழைத்து, பின்னர் பாகிஸ்தானுடனான கட்டுப்பாட்டுக் கோட்டருகே இவர்கள் சுட்டுக்கொன்றதாக குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தன. இந்த சம்பவம் நான்காண்டுகளுக்கு முன்னர் நடந்தது.

அவர்கள் பாகிஸ்தான் தீவிரவாதிகள் என்று பொய்யாகப் பின்னர் முத்திரை குத்தப்பட்டனர்.

இந்த போலி என்கவுண்டர் நடந்த பின்னர், காஷ்மீர் பள்ளத்தாக்கில் பல வாரங்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் இரத்தக்களறியும் ஏற்பட்டது. இந்நிலையில் 7 இராணுவத்தினருக்கு தற்போது ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (இ)

பாரதச் செய்தி

### வீடற்றவர்களுக்கு முகாம்கள்

## விபரம் கேட்கும் உச்சநீதிமன்றம்

இந்தியாவில் வீடற்ற ஏழை எளிய மக்கள் வசிப்பதற்கு தேவையான பாதுகாப்பான முகாம்களை ஏற்படுத்தி கொடுப்பதற்காக, இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை மத்திய அரசு மூன்று வார காலத்திற்குள் தாக்கல் செய்யுமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி எச்.எல்.தத்து தலைமையிலான அமர்வு முன்பு நடைபெற்ற இது தொடர்பான வழக்கு விசாரணையில் நேற்று முன்தினம் வியாழனன்று வெளியிடப்பட்ட உத்தரவில், மத்திய அரசு இன்னும் 10 நாட்களுக்குள் இது தொடர்பிலான அனைத்து மாநில தலைமைச் செயலாளர்களுடனான கூட்டத்தை கூட்டவும் கூறியுள்ளது.

அந்த கூட்டத்திற்கு நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம் அழைப்பு விடுக்க கூறி அறிவுறுத்தியுள்ள அந்த அமர்வு, அப்போது இது தொடர்பில் ஒவ்வொரு மாநிலத்திலும் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை குறித்தான விளக்கத்தை பெறவும் வலியுறுத்தியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களில், அரசாங்கம் போதுமான முகாம்களை ஏற்படுத்தித் தருவதில்லை என்றும், முன்னதாக அமைக்கப்பட்ட சில முகாம்களில் கூட சரியான வசதிகள் செய்யப்படுவதில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக குடிநீர், கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதில் கூட குறைகள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நகரப்பகுதிகளில் இது போன்ற முகாம்களை அமைக்கும் போது. அவை மிக அதிக தூரத்தில் அமைக்கப்படுவதாகவும், தொழில் மற்றும் வேலை வாய்ப்புகளுக்காக நகரத்தின் மையப்பகுதிக்கு சென்று வர போக்குவரத்து வசதி போதாக் குறையாக இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.மனுதாரர்களில் ஒருவர் தரப்பில் இந்த வழக்கில் ஆஜராகிய வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் வாதாடிய போது, இது தொடர்பில் டில்லி அரசாங்கம் வெளியிட்டுள்ள ஒரு கணக்கெடுப்பை முன்வைத்தார்.

அதன்படி டில்லியில் மட்டும் 39ஆயிரம் பேர் வீடற்று வாழ்வதாகவும், ஆனால் அரசாங்கத்தால் அங்கு 17ஆயிரம் பேருக்கு மட்டும் தான் பாதுகாப்பு முகாம்களை ஏற்படுத்தி தர முடியும் என்று கூறப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

இத்தகைய சூழலில் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை பெற்று தர வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்று கூறிய உச்சநீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (இ)

## மத்திய அரசு பாடசாலையில் ஜேர்மன் தடையால் சர்ச்சை


இந்தியாவில் மத்திய அரசால் நடத்தப்படும் கேந்திரிய வித்யாலயா பாடசாலைகளில் மூன்றாவது மொழியாக ஜேர்மன் கற்றுத்தரப்படுவதை நிறுத்திவிட்டு, சமஸ்கிருதம் அல்லது வேறு நவீன இந்திய மொழிகளை கற்பிக்க வேண்டுமென்ற மத்திய அரசின் முடிவு தமிழகத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கேந்திரிய வித்யாலயா பாடசாலைகளை நிர்வகிக்கும் கேந்திரிய வித்யாலயா சங்காத்தன் அனுப்பியிருக்கும் சுற்றறிக்கையில், ஜேர்மன் மொழி கற்பிக்கப்படுவது உடனடியாக கைவிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை ஜேர்மன் மொழியைத் தற்போது படித்து வரும் மாணவர்கள், அதற்குப் பதிலாக சமஸ்கிருதத்தையோ, வேறு இந்திய மொழிகளையோ படிக்கலாம் என அந்தச் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.ஜேர்மன் மொழியை கூடுதலாகவோ, பொழுதுபோக்குப் பாடமாகவோ படிக்கலாம் எனவும் அந்த அறிக்கை கூறுகிறது.

**ராமதாஸ் கண்டனம்**

கேந்திரிய வித்யாலயாவின் இந்த அறிவிப்புக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். [illegible] மொழிகள் அறிமுகம் செய்யப்பட்டன.



இதை எதிர்த்து சமஸ்கிருத ஆதரவாளர்கள் டில்லி உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் பதில்மனு தாக்கல் செய்த முந்தைய மத்திய அரசு, வெளிநாட்டு மொழிகள் கற்றுத் தரப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்று கூறியிருந்தது. ஆனால், அடுத்த சில மாதங்களில் இந்நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு திடீரென சமஸ்கிருதத்தை திணிப்பதற்கான தேவை என்ன?" என்று அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

மத்திய அரசின் இந்த திடீர் நடவடிக்கை தேவையற்ற ஒன்று என்கிறார்கள் கல்வியாளர்கள். இது முழுக்க முழுக்க சமஸ்கிருதத்தை திணிக்கும் முயற்சி என்கிறார் பொதுப் பாடசாலைகளுக்கான மாநில மேடையின் பொதுச் செயலாளர் பிரின்ஸ் கஜேந்திர பாபு. நாடு முழுவதும் கல்வி கற்பிப்பதை மேம்படுத்த வேண்டுமென மத்திய அரசு விரும்பினால், தாய் மொழிக் கல்வியை அறிமுகப் படுத்தியிருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, இம்மாதிரி முயற்சிகளில் ஈடுபட்டால் அது சமஸ்கிருதத்தைத் திணிபதற்கான வேலையாகத்தான் பார்க்கப்படும் என்கிறார் அவர்.

ஜேர்மன் மொழியைப் படிப்பதே ஒரு சிறந்த கல்வி அனுபவம். அதன் மூலம் ஒரு புதிய கலாசாரத்தையே மாணவர்கள் கற்கிறார்கள்" என்று குறிப்பிடுகிறார் ஜேர்மன் அரசின் கலாசார அமைப்பான கதே இன்ஸ்டிடியூட்டில் முன்பு பணியாற்றியவரும் நாடக இயக்குனருமான் பிரசன்னா ராமசாமி.

ஆனால், அரசியல் விமர்சகரும் எழுத்தாளருமான பத்ரி சேஷாத்ரி இதை சமஸ்கிருதத்தை திணிக்கும் முயற்சியாகப் பார்க்க வேண்டியதில்லை என்கிறார். மூன்றாவதாக ஒரு மொழியைப் படிக்கும்போது, ஜேர்மன் மொழியைப் படித்தாலும் படிப்பேனே தவிர, சமஸ்கிருதத்தைப் படிக்க மாட்டேன் என்பது நியாயமல்ல என்கிறார் அவர்.

இந்தியாவில் தற்போது ஆயிரத்து 92 கேந்திரிய வித்யாலயா பாடசாலைகள் இயங்கிவருகின்றன. இவற்றில் 500க்கும் மேற்பட்ட பாடசாலைகளில் பயிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஜேர்மன் மொழியை மூன்றாவது மொழியாகப் பயின்று வந்தனர். ஜேர்மன் மொழியைக் கற்பிப்பதற்காக கதே இன்ஸ்ட்டிடியூட்டுடன் கேந்திரிய வித்யாலயா பாடசாலைகள் ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் புத்தர் சிலைகளை உடைத்து எறிய காத்திருப்பு!

## அமைச்சர் விமல் கூறுகிறார்



**வடக்கில் புத்தர் சிலைகளை உடைத்து எறிய காத்திருக்கின்றனர் எனவும் அமெரிக்கத் தூதரகத் திடமிருந்து சம்பளம் பெற்றுக் கொள்வோர் வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற முயற்சிப்பதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கூட்டமொன்றில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கின் புத்தர் சிலைகளை உடைத்து எறிய நேரம் பார்த்து காத்திருக்கின்றனர். நாட்டில் புதிய அரசியல் அமைப்பு ஒன்றின் தேவை கடுமையாக எழுந்துள்ளது.

மக்கள் நலனை உறுதிப்படுத்தக் கூடிய அரசியல் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

பௌத்த சங்க நாயக்கர்களின் ஒத்துழைப்புடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வெற்றிபெறச் செய்ய அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எதிர்க்கட்சிகள் பொது வேட்பாளரை இன்னமும் கண்டு பிடிக்கவில்லை. ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் கட்சித் தலைவர் பதவி பறிபோய்விடும் என்று ரணில் விக்ரமசிங்கவிற்கு தெரியும்.

வெற்றியீட்ட முடியாத பொது வேட்பாளர் ஒருவரை போட்டியிடச் செய்வதே ரணிலின் நோக்கமாகும்.

தேர்தலில் வெற்றியீட்ட முடியாது எனத் தெரிந்து கொண்ட ஜே.வி.பி. மகிந்தவிற்கு மூன்று தடவை முடியாது என கோசம் எழுப்புகின்றது என விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (இ-5)

# அரசிற்கு வேண்டியவர்களுக்கு மட்டும் இரட்டை குடியுரிமை வழங்க முயற்சி

## விஜித ஹேரத் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் தமக்கு வேண்டியவர்களுக்கு மாத்திரம் இரட்டை குடியுரிமையை வழங்க முயற்சிப்பதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வதியாதோர் வெளிநாட்டு வங்கி கணக்கின் வட்டி வீதம் குறைந்துள்ளது.

இது நிதியமைச்சுக்குரிய விடயம் அல்ல என்ற போதிலும் வெளிநாட்டில் தொழில்புரிவோர் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் நிதியமைச்சு இந்த விடயம் குறித்து கவனம் செலுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

வரவு செலவுத் திட்டத்தில், வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கை பிரஜை சுங்க வரியின்றி வாகனம் ஒன்றை கொள்வனவு செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அதனை செயற்படுத்தும் கட்டமைப்பு குறித்து தெரிவிக்கப்படவில்லை.

அத்துடன் செயற்படுத்தும் விதம் பற்றியும் தெளிவுபடுத்தப்பட வேண்டும் எனவும் விஜித ஹேரத் மேலும் தெரிவித்தார். (இ)

# மத்தள விமான நிலையத்தில் வரவுக்கு அதிகமான செலவு

(கொழும்பு)

மத்தள மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்ட நாளில் இருந்து 2014 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வரை விமான நிலையத்தை நடத்தி செல்வதற்காக 2 ஆயிரத்து 756 மில்லியன் ரூபா செலவு நட்டம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் வரை மத்தள விமான நிலையத்தின் மொத்த வருமானம் 143.79 மில்லியனாகும்.

ஆனால் மொத்த செலவு 2 ஆயிரத்து 900 மில்லியன் ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரை விமான நிலையத்தின் மொதத வருமானம் 48.1 மில்லியன் ரூபா. எனினும் இந்த காலப்பகுதியில் செலவு மாத்திரம் 1403.65 ரூபா. 2013 ஆம் ஆண்டில் மத்தள விமான நிலையத்திற்கு 760 விமானங்கள் வந்து சென்றன.

2014 ஜனவரி மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரை ஆயிரத்து 28 விமானங்கள் வந்து சென்றுள்ளன. இதனை தவிர மத்தள விமான நிலையத்தில் 2013 ஆம் ஆண்டு 565 ஊழியர்கள் பணியாற்றி வந்தனர். தற்போது 600 பேர் பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## இலங். அகதிகளை நாடு திரும்ப கட்டாயப்படுத்தக் கூடாது-ஜி.கே.

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளை நாடு திரும்புமாறு நிர்பந்திக்கக் கூடாது என இந்தியாவின் முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் இலங்கையில் தமிழர்களுக்கு உரிமை மற்றும் பாதுகாப்பு இன்றும் கிடைக்கவில்லை என்று அவர் இதன்போது சுட்டிக்காட்டியதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு இல்லாத காரணத்தினாலேயே இலங்கை அகதிகள் நாடு திரும்ப அச்சமடைகிறார்கள், இலங்கையில் மறுவாழ்வுத் திட்டங்களை விரைந்து செயற்படுத்த வேண்டியது அவசியம் என வாசன் சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

# கொலைக்குற்றவாளிகள் இருவருக்கு மரணதண்டனை

கொலை குற்றத்துடன் தொடர்புடைய இரண்டு பேருக்கு புத்தளம் மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

28 வயதான திருமணமான நபரை வெட்டிக்கொலை செய்த குற்றத்திற்காக இந்த நபர்களுக்கு நேற்று முன்தினம் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

ஆனமடுவ பெரியகுளம் பிரதேசத்தை சேர்ந்த மான்ன பிச்சைகே டெனி மற்றும் சுனில் ஜயசிங்க ஆகிய இருவருக்கே இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

குற்றவாளிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த கொலை குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதி பிரியந்த பெர்ணான்டோ தனது தீர்ப்பில் கூறியுள்ளார்.

1998 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மைய தினம் ஒன்றில் இந்த கொலை நடந்துள்ளது. வாக்குவாதம் முற்றியதால் இந்த கொலை நடந்ததாக விசாரணைகளில் தெரியவந்தது. (இ-5)

## இன்று ஒரு தகவல்

### புல்லுக்கட்டும் காளை மாடும்

ஒரு ஆசிரமத்தில் குரு நிறைய சீடர்களுடன் அமர்ந்திருந்தார். அவர் சிறிய சிறிய கதைகளை சொல்லிக் கொண்டிருந்தார். ஒரு சீடனுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

"நாம் இவர்களிடம் பெரிய தத்துவங்களை எதிர்பார்த்து வந்தோம். வாழ்க்கையின் உண்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டுமென்பது நமது நோக்கம்.

ஆனால், இவர் ஏதோ கதை சொல்லிக் கொண்டிருக்கிறார் என்று நினைத்தான்.

இவர் மாதிரியே இன்னும் பல சீடர்களும் நினைத்தார்கள்.

ஆனால், எதுவும் வெளியில் சொல்லவில்லை. பேசாமல் அமர்ந்திருந்தார்கள்.

இதை குரு புரிந்து கொண்டார். வகுப்பு நடத்திக் கொண்டிருந்த அவர் திடீரென்று யன்னல் வழியாக வெளியே பார்த்தார்.

" சரி... எல்லோரும் எழுந்து வாருங்கள் வெளியே போகலாம். அங்கே என்னமோ நடக்கிறது. அது என்னவென்று பார்க்கலாம்... வாருங்கள்"

எல்லோரும் வெளியே வந்தார்கள்.

அங்கே ஒரு ஆள்... ஒரு காளை மாட்டைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தான். அவன் முன்னால் இழுக்கிறான். காளை மாடு பின்னால் இழுக்கிறது.

ஆனால், காளை மாட்டுக்கு அவனை விட வலு அதிகமாக இருந்தது. அதனது விளைவு என்னவென்றால், அவன் இரண்டு அடி முன்னாலே இழுத்தான் என்றால் காளை மாடு நான்கு அடி பின்னால் இழுக்கிறது.

தொடர்ந்து அந்த இழுபறி நடந்து கொண்டிருக்கிறது.

"உங்களுக்கும் எனக்கும் இடையில் உள்ள நிலைமை இதுதான் என்று சொல்கிறேன். ஆனால், அந்த மனிதனுக்கும் எனக்கும் வித்தியாசம் உண்டு. அவன் செய்வது முட்டாள்தனம்"

இப்படிக் கூறிக் கொண்டே அவனிடம் போனார்.

"ஐயா... நீ ஊருக்குப் புதியவனா?

ஆமாம் நான் ஊருக்கு புதியவன். ஆனால், இந்த வேலைக்கும் புதியவன். அதனால்தான் நீண்ட நேரமாக இப்படியாக இழுபறி.

"காளைக்கு என்று ஒரு மொழி உண்டு,... அது உனக்கு விளங்கவில்லை... அதுதான் பிரச்சினை!"

"என்ன ஐயா சொல்கிறீர்கள்?"

"சற்று பொறு. இப்போது பார்..." என்று சொல்லிக் கொண்டே அந்த குரு பக்கத்தில் இருந்த பசுமையான புல்கட்டு ஒன்றை கையில் எடுத்துக்கொண்டார். மாட்டிற்கு முன்னால் போனார். அதன் முகத்திற்கு எதிரே நீட்டினார்... உடனே அது அவர் பின்னால் தனது பயணத்தை ஆரம்பித்தது.

அவனுக்கு ஆச்சரியம்.

"அடடா, இது என்ன? கயிறு கூடத் தேவையில்லை போலுள்ளது"

குரு, தன் கையில் இருந்த புல்லுக்கட்டை அவன் கையில் கொடுத்தார்... "நீ போ... இது உன் பின்னால் வரும்" என்றார்.

அவனும் போனான். மாடு அவன் பின்னால் நகர்ந்தது.

அதன்பின் அவர் தன் சீடர்கள் பக்கம் திரும்பினார்.

"சீடர்களே! இதைத்தான் நான் உங்கள் விடயத்திலும் செய்ய வேண்டியிருக்கிறது" என்றார்.

சீடர்கள் வியப்புடன் அவர் முகத்தைப் பார்த்தார்கள்.

உடனே குரு சொன்னார்; "இப்போது உங்களை ஒரு மலை உச்சிக்கு அழைத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. கயிறு கட்டி இழுத்துச் செல்வது கடினம். அதுதான் கதை சொல்லி அழைத்துச் செல்கிறேன். நான் உங்களுக்குச் சொல்கிற கதைகள் அந்தக் காளை மாட்டுக்கு முன்னால் இருக்கிற புல்கட்டு மாதிரி.

எனது வேலை உண்மையை நோக்கி உங்களை அழைத்துச் செல்வதுதான்.

அங்கே போய் உண்மையை கண்டுகொள்வது உங்கள் வேலை. உண்மை உச்சியில் இருக்கிறது.

ஆகவே, நான் சொல்கிற கதைகளில் உண்மை இருக்கிறதா என்று ஆராயாதீர்கள். இது ஒரு ஏமாற்று வேலை.

காளை மாட்டுக்குப் புல்லைக் காட்டுகிற மாதிரி. அந்தப் புல்கட்டு அதை அழைத்துச் செல்கிறது. அதற்கு வேண்டிய ஆகாரம் அங்கே கொட்டகையில் காத்திருக்கிறது.

சான்றோர்கள் நமக்கு நிறைய நீதிக் கதைகளை சொல்லியிருக்கிறார்கள். அவற்றைப் படிக்கும்போது; "ஒன்றும் நம்புகிற மாதிரி இல்லையே" என்று நமக்குத் தோன்றும்.

அவையெல்லாம் புல்கட்டுகள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

982



## கொஞ்சம் எட்டிப் பார்க்கலாமா?

**…வ**ழக்கம்போல அன்றும் பள் ளிக்கூடத்துக்குள் முதல் மாண வனாக வந்தான் கபிலன்.

அவன் வீடு பள்ளிக்கு மிக அருகில்தான் இருக்கிறது என்றாலும், குறித்த நேரத்துக்கு முன்பாகவே வந்துவிடுவது அவன் வழக்கம்.

பள்ளிக்கூடக் காவலர், வாயிற கதவைத் திறந்துவிட்டு சாப்பிடச் சென்றிருந்தார்.

பள்ளி அலுவலக அறையும் திறந்திருந்தது.

இவ்வளவு சீக்கிரம் அலுவலக ஆட்கள் வர மாட்டார்களே' என்று நினைத்தவாறு உள்ளே எட்டிப் பார்த்தான்.

கபிலன், 10ஆம் வகுப்பு பி பிரிவு தலைவன்.

தன் வகுப்பின் வருகைப் பதிவேட்டை அலுவலகத்திலிருந்து தினமும் எடுத்து வருவது அவன் பணிகளில் ஒன்று.

அலுவலக அறையிலிருந்து சாம்பிராணி மணம் வந்தது.

நெற்றியில் சந்தனம் பூசிய ஒருவர், கடவுள் படங்களுக்கு மாலையிட்டுக்கொண்டிருந்தார்.

சராசரியைவிட குள்ளமான உருவம். கறுப்பு நிறம். கபிலனைக் கண்டதும், வாங்க, என்னங்க வேணும்? என்று கேட்டார்.

நான் கபிலன்.

வருகைப் பதிவேட்டை எடுத்துப்போக வந்தேன் என்றான்.

கபிலன்... அருமையான பெயர். குறிஞ்சித்திணை புலவரின் பெயர்.

நான் தங்கமுத்து. பள்ளிக்குப் புதிதாக வந்திருக்கும் கணக்காளர் என்றார்.

கபிலன் புன்னகையுடன் தலையாட்டிவிட்டு, வருகைப் பதிவேட்டை எடுத்துக்கொண்டு வகுப்பறைக்குச் சென்றான்.

அவனிடம் மரியாதையாகப் பேசியதுடன், தனது பெயரையும் அறிமுகம் செய்துகொண்ட அவரை, முதல் சந்திப்பிலேயே பிடித்து விட்டது.

அடுத்து வந்த நாட்களில்.. தங்கமுத்து பற்றி மாணவர்கள் மத்தியில் பேச்சுவந்தது.


அது பெரும்பாலும் அவரது நெற்றிப் பட்டை, உருவம், செய்கைகள் குறித்த கேலிப் பேச்சாக இருக்கும்.

வெப்பாராம். அப்பவும் எட்டாம. எக்கி எக்கி வெககிறாராம்.

சார், நான் வேணும்னா வெக்கட்டுமா? எனக்கு நாற்காலியே தேவையில்லை'னு ரகு கேலி பண்ணியிருக்கான்.

முன்னாடி வெள்ளிக்கிழமையில் மட்டும்தானே படங்களுக்கு பூ வெப்பாங்க.

மற்ற நாள்ல, இவர் காசுல வாங்கிவர்றாராம். கொஞ்ச நாள்ல ஆபீஸ் ரூமை ஒரு மடமா மாத்திடுவார்னு மேத்ஸ் சார் கிண்டல் பண்ணிட்டு இருந்தார்.



காலையில் வெச்ச திருநீறு சாயந்திரம ஆனாலும் அப்படியே இருக்கே எப்படிடா?

அவர் பையில ஒரு சின்ன பிளாஸ்டிக் டப்பா வெச்சிருக்காருடா. திருநீறு டப்பாதான் அது.

11 மணிக்கு ஒருமுறை, மதியம் சாப்பிட்டு முடிச்சதும் ஒருமுறை, முகத்தை வாஷ் பண்ணிட்டு, பட்டை போட்டுக்கறார்.

ஓ... அந்த முகத்தை வாஷ் வேற பண்றாரா? ஹைவே நடுவுல வெளளைக் கோடு போட்ட மாதிரி.

எல்லோரும் சிரிப்பார்கள். டென்த் சி செக்ஷன் ரகு, அந்த தங்கமுத்து பற்றி சொன்னது பயங்கர தமாஷாக இருந்தது.

சாமி படங்களுக்கு அவர் பூ வெக்கிறப்ப, நாற்காலியைப் போட்டு மேலே ஏறித்தான்

அவர்களின் கேலியும் கிண்டலும் கபிலனுக்கு எரிச்சலாக இருந்தது.

தினமும் அவரைப் பற்றி பேசலைனா, உங்களுக்கு சாப்பாடு இறங்காதாடா என்றான்.

சில டீச்சர்ஸே அவரைக் கிண்டல் பண்ணிட்டுதான் இருக்காங்க.

டீச்சிங் பத்தி அவருக்கு என்ன் தெரியும்? ஸ்டாஃப் ரூம்ல டீச்சர்ஸ் ஏதாவது பேசிக்கும்போது, சம்பந்தம் இல்லாம மூக்கை நுழைச்சு, இப்படி செய்யலாம் அப்படி செய்யலாம்னு கருத்து வேற சொலறாராம் என்றான் பிரவின்.

ஏன் அலுவலகப் பணியாளர் என்றால், வேறு ஒன்றும் தெரியாதா.

ஆசிரியர்கள் மட்டும்தான் அறிவுள்ளவர்களா? என்று மனதில் நினைத்துக் கொண்டான் கபிலன.

தினமும் இறைவழிபாட்டுக் கூட்டத்தில், ஓர் ஆசிரியர் ஏதாவது ஒரு கருத்தை மாணவர்களிடையே பதிவுசெய்வது அந்தப் பள்ளியின் நடைமுறை.

(தொடரும்)

## 11.2014 15 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖1505 - போர்த்துக்கேய மாலுமியும் நாடுகாண் பயணியுமான லோரன்ஸ் டி அல்மெய்டா, கொழும்பை வந்தடைந்து ஐரோப்பியக் குடியேற்றத்தை ஆரம்பித்தார்.

❖1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டுப்படைத் தளபதி வில்லியம் ஷேர்மன் அட்லாண்டா நகரைத் தீக்கிரையாக்கி ஜோர்ஜியாவின் சவான்னா துறைமுகம் நோக்கி நகர்ந்தார்.

❖1889 - பிரேசில் குடியரசாகியது. இரண்டாம் பெதரோ ஆட்சியிழந்தான்.

❖1926 - என்பிசி வானொலி 24 நிலையங்களுதன் தனது வானொலி சேவையைத் தொடங்கியது.

❖1941 - நாசி ஜேர்மனியில் சில உயர் அதிகாரிகளைத் தவிர்த்து அனைத்து ஓரினச்சேர்க்கையாளர்களையும் வதைமுகாம்களுக்கு அனுப்ப உத்தரவிடப்பட்டது.

❖1942 - இரண்டாம் உலகப் போர்: சொலமன் தீவுகளில் குவாடல்கனல் என்ற இடத்தில் ஜப்பானியப் கடற்படையுடன் இடம்பெற்ற மோதல்களில் கூட்டுப் படைகள் வெற்றி பெற்றன.

❖1943 - நாசி ஜேர்மனியில் அனைத்து ஜிப்சிகளையும் யூதர்களுக்கு இணையாக வதமுகாம்களுக்கு அனுப்ப உத்தரவிடப்பட்டது.

❖1948 - இலங்கையில் மலையகத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது.

❖1966 - ஜெமினி 12 விண்கலம் அட்லாண்டிக் கடலில் பாதுகாப்பாக இறங்கியது.

❖1969 - வியட்நாம் போர்: வாசிங்டன் டிசியில் 250,000-500,000 பேர் போருக்கெதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்குபற்றினர்.

❖1970 - சோவியத்தின் லூனா தானூர்தி சந்திரனில் தரையிறங்கியது.

❖1971 - இண்டெல் நிறுவனம் உலகின் வர்த்தகரீதியி லான முதலாவது 4004 என்ற single-chip microprocessor வெளியிட்டது.

❖1983 - வடக்கு சைப்பிரஸ் துருக்கியக் குடியரசு நிறுவப்பட்டது. துருக்கி மட்டுமே இதனை அங்கீகரித்தது.

❖1988 - சோவியத் ஒன்றியத்தின் ஆளற்ற பூரான் விண்ணோடம் தனது முதலாவது கடைசியுமான பயணத்தை ஆரம்பித்தது.

❖1988 - பாலஸ்தீன நாடு பாலஸ்தீன தேசிய கவுன்சிலினால் அறிவிக்கப்பட்டது.

❖1990 - அட்லாண்டிஸ் விண்ணோடம; STS-38 கப்பலை விண்ணுக்குக் கொண்டு சென்றது.

❖2002 - ஹூ சிங்தாவ் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச செயலாளர் ஆனார்.

❖2000 - இந்தியாவில் ஜார்க்கண்ட் தனிமாநிலமாக உருவாக்கப்பட்டது.

### பிறப்புகள்

❖1738 - வில்லியம் ஹேர்ச்செல், விண்கோள் யுரேனசைக் கண்டு பிடித்த ஜெர்மன் விஞ்ஞானி (இ. 1822)

❖1986 - சானியா மிர்சா, இந்தியாவின் டென்னிஸ் வீராங்கனை

### இறப்புகள்

❖1630 - ஜொஹான்னெஸ் கெப்லர், ஜேர்மானிய கணிதவியலாளரும், வானியலாளரும் (பி. 1571)

❖1917 - எமில் டேர்க்கேம், பிரெஞ்சு சமூகவியலாளர் (பி. 1858)

❖1949 - நாத்தூராம் கோட்சே, மகாத்மா காந்தியை சுட்டுக் கொன்ற கொலையாளி (பி. 1910)

❖1949 - நாராயண் ஆப்தே, மகாத்மா காந்தியை சுட்டுக் கொன்ற கொலையாளி (பி. 1911)

❖[illegible] - இலங்கையர்கோன், [illegible] சிறுகதை எழுத்தாளர், நாடகாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்




..தான் நினைத்ததை சாதிக்கும் வகையில் துவக்க ஆட்டக்காரராகக் களம் இறங்கும் சச்சினை மூன்றாவது ஆட்டக்காரராகக் களம் இறங்கினார். பயிற்சியாளர் என்ற பதவி காரணமாக க்ரெக் சாப்பல் முடிவை எதிர்த்து சச்சினால் எதுவும் செய்ய இயலவில்லை. ஆனால், இந்த மன உளைச்சல் அவரது விளையாட்டைக் கடுமையாகப் பாதித்தது. பங்களாதேஷ், பெர்முடா மற்றும் இலங்கைக்கு எதிரான ஆட்டங்களில் சச்சின் எடுத்த ஓட்டங்கள் முறையே 7.57 மற்றும் 10 ஆகும். ராகுல் டிராவிட் தலைமையிலான இந்திய அணி அடுத்தடுத்த படுதோல்விகளுடன் 2007 உலகக் கோப்பை போட்டிகளில் இருந்து பரிதாபமாக வெளியேறியது. 2003 உலகக்கோப்பை போட்டிகளில் வெற்றி முகப்பு வரை சென்ற இந்திய அணி 2007 போட்டிகளில் முதல் சுற்றிலேயே சுருண்டது.

- ❖ லட்சியம்:- உலகின் நெ.1 விளையாட்டு வீரன்
- ❖ பிடித்த மைதானம்:-ஆஸ்ரேலியாவின் சிட்னி
- ❖ பிடிக்காத மைதானம்:- பெங்களூர் மைதானம்
- ❖ வேறு விளையாட்டு:-டென்னிஸ்
- ❖ கனவு மங்கை:-எனது மனைவி அஞ்சலி
- ❖ வெறுப்பது:- வதந்தி
- ❖ பிடித்த உடை:-:ஜீன்ஸ், டீசர்ட்
- பிடித்த கடவுள்:- பிள்ளையார் சாய்பாபா மீதும் பக்தி உண்டு
- பிடித்த வாசகம்:- உனக்கு நீயே உண்மையாக இரு

க்ரெக் சாப்பலின் சகோதரர் ஐயன் சாப்பல் இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டார். மும்பையில் இருந்து வெளியாகும் மிட்டே பத்திரிகையில் சச்சின் ஓய்வுபெற வேண்டும் என்று பகிரங்கமாக எழுதி தனது நீண்ட நாள் எரிச்சலைத் தணித்துக்கொண்டார்.

2002 தொடங்கி 2007 வரை சுமார் ஐந்து ஆண்டு காலம் சச்சின் கிரிக்கெட் வாழ்க்கையில் சோகமான காலகட்டம் என்று சொல்லலாம். கை மூட்டு வலி, தோள்பட்டை வலி ஆகிய உடல் வலியுடன் பல்வேறு தரப்புகளில் இருந்து புறப்பட்ட அவரது விளையாடும் திறன் குறித்த சந்தேகங்களும் விமர்சனங்களும் அவரை மனதளவில் பாதிக்கத் தொடங்கின. முன்பு போல் அவரால் அடித்து ஆட முடியவில்லை. ஆட்டம் இழக்காமல் இருக்க தன்னைத் தற்காத்துக்கொள்வதிலேயே குறியாக இருக்கிறார். அவருடைய ஸ்டைல் காணாமல் போய் வெகு நாட்கள் ஆகின்றன என்ற ரீதியில் பத்திரிகைகள் எழுதின. பகிரங்கமாகவே சச்சின் ஓய்வு பெறவேண்டும் என்று ஆளாளுக்குப் பேசவும் ஆரம்பித்தார்கள். ரிக்கி பாண்டிங் மற்றும் காலிஸ் ஆகியோர்

## 35ஆவது டெஸ்ட் சதம் சச்சின் உலக சாதனை!



புகழின் உச்சிக்கு ஏறிக் கொண்டிருந்த நிலையில் சச்சின் புகழ் சரியத்தொடங்கியது. 2007 உலகக்கோப்பை இந்தியாவிற்கும் சச்சினுக்கும் பலத்த ஏமாற்றமாகவும் பேரிடியாகவும் அமைந்தன எனில் மிகையில்லை.

**ஃபீனிக்ஸ் பறவை போல் மீண்டெழுந்த சச்சின்**

மீண்டும் மீண்டும் தோல்வியைத் தழுவிய மன்னன் ப்ரூஸ் அறுக அறுகத் தளராமல் வலை பின்னிக் கொண்டிருந்த சிலந்தியைப் பார்த்து புத்துணர்ச்சி பெற்று போரில் வெற்றி பெற்றான் என்று ஒரு கதை உண்டு. அதைப்போல் உடலாலும் மனதாலும் தொடர்ந்து பாதிக்கப்பட்ட நிலையிலும் உறுதியுடன் சாம்பலில் இருந்து உயிர்த்தெழும் ஃபீனிக்ஸ் பறவைபோல் மீண்டெழுந்தார் சச்சின்.

அடுத்து 2007 மே மாதம் பங்காளதேசத்துடன் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் சச்சின் அதிரடி ஆட்டம் ஆடினார். பங்களாதேசத்திற்கு எதிராக மே 19 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் 101 ரன்கள் குவித்து தனது 36 ஆவது டெஸ்ட் சதத்தையும் மே 26 அன்று நடைபெற்ற போட்டியில் 122 ரன்கள் குவித்து தனது 37 ஆவது டெஸ்ட் சதத்தையும் சச்சின் பதிவு செய்தார். இதன் காரணமாக மேன் ஆஃப் தி சீரீஸ் ஆக தேர்வு செய்யப்பட்டார். தென் ஆப்பிரிக்காவிற்கு எதிரான ஃப்யூசர் கோப்பை போட்டிகளில் பந்துகளைச் சிதற அடித்து இரண்டு முறை 90 ரன்களுக்கு மேல் எடுத்து சதத்தை மயிரிழையில் தவறவிட்டார்.

**கே. ரமேஷ்** (தொடரும்)

---

# ஆத்ம ஞானத்தைத் தேடி

...நான் இன்னும் அழகாக இருந்தால்..... நான் இன்னும் நல்ல வேலையில் இருந்தால்... அது இருந்தால்.... இது இருந்தால்...


தீர்வை வெளியுலகப் பொருட்களில் கண்டுபிடிக்க முடியாது. அதனை நமக்குள்ளேயேதான் கண்டுபிடிக்க முடியும்

ஒரு சின்னக் கதை...

## கவலைகள் இன்றி வாழ்தல்!

புத்தரிடம் பத்தாயிரம் சீடர்கள் இருந்தனர். அவர்களுக்கு தினமும் காலையில் ஒரு உரை நிகழ்த்துவார். ஒருநாள் நன்கு முடியிடப்பட்ட ஒரு கயிற்றைக் கொண்டு வந்து அவர்களுக்கு முன் வைத்து, இதை யாரேனும் அவிழ்க்க முடியுமா? என்று கேட்டார். சீடர்கள் முன்வந்து, அந்த முடிச்சை இழுத்தும் தள்ளியும் அவிழ்க்க முயற்சித்தனர். ஆனால், அவிழ்க்க முடியவில்லை. பிறகு அறிவாளியான சீடன் ஒருவன் வந்து சிறிது நேரம் அந்த முடிச்சை உற்று கவனித்தான்; பின்னர் அதைச் சுலபமாக அவிழ்த்துவிட்டான்.

அது எவ்வாறு உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த முடிச்சு எவ்வாறு விழுந்திருக்கிறது என்பதை உற்று நோக்க வேண்டும். பிறகு அந்த முடிச்சு உருவாக்கப்பட்டிருக்கும் முறைக்கு எதிர்ப்புறமாக திருப்பி செய்தால் அதுதானே அவிழ்ந்து விடும். அதை விட்டுவிட்டு வெறுமனே இழுப்பதும் தள்ளுவதுமாக இருந்தால் அதை ஒருபோதும் அவிழ்க்க முடியாது; மேலும் அது இறுகி



விடும்.

அதே விடயம் நமத பிரச்சினைக் கும் பொருந்தும் நமது பிரச்சினைகள், நோய்கள் நாம் போராடிக்கொண்டிருக்கும் உணர்ச்சிகள் ஆகிய எல்லாமே நமது அமைப்பில் இருக்கும் முடிச்சுகளே தவிர வேறில்லை. அந்த முடிச்சுகள் எவ்வாறு உருவாக்கப் பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் தெளிவாகப் புரிந்துகொண்டுவிட்டால் அதை அவிழ்ப்பதற்கான சரியாக செயற்பாட்டைச் செய்ய முடியும்.

கவலை, தொப்புள் பகுதியில் இருக்கும் மணிபூரக சக்கரத்துடன் நெருங்கிய தொடர்புடையது. எதிர்மறை எண்ணங்கள் மணிபூரக சக்கரத்தை நேரடியாகத் தாக்குகின்றன.

இந்த ஒரு சிறு சோதனையைச்

**ஆன்மீகம் 75**

செய்யவும்..... எதிர்மறையான எண்ணங்கள் வருவதாக நீங்கள் உணரும் பொழுது அவை எங்கிருந்து எழுகின்றன என்று பாருங்கள். அவை எப்பொழுதுமே தொப்புளிலிருந்து எழுவதைக் காண்பீர்கள். நீங்கள் கவலைப்படும் பொழுது உங்களால் கையாள முடியாத சூழ்நிலைகள் எழும் பொழுதெல்லாம் முதலில் பாதிக்கப்படுவது உங்கள் தொப்புள் பகுதி, உங்கள் வயிறு, மனச் சோர்வை நீங்கள் உடலிலேயே வயற்றில் ஒரு சுமையாக உணர முடியும். அதனால் தான் நாம் எப்பொழுதும் என் வயற்றில் சுமக்க முடியாது என்னால் ஜீரணிக்க முடியாது என்று சொல்கிறோம்.

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்பின் இரகசியம்!

ராஜேந்திரசோழனின் ஆயிரமாவது முடிசூடிய ஆண்டுவிழாவையொட்டி, ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் தமிழகத்தின் 36 இடங்களில் அணிவகுப்புகளை நடத்தி, தமிழக மக்களை தங்கள் பக்கமும் திருமபிப் பார்க்க வைத்துள்ளார்கள..

இவ்வணிவகுப்பை ஆர்.எஸஎஸ. மொழியில், பத சஞ்சலன் என்றும் ஆங்கிலத்தில் Route march என்றும் கூறுவார்கள்.

மத்தியில் ஆட்சிபுரியும் பா.ஜ.க.வின் தாய் அமைப்பான இந்த ஆர்.எஸ்.எஸ். (ராஸ்டிரிய ஸ்வயம்சேவக் சங்கம்), தமிழகத்தில், இதுபோல இதற்கு முன்பு ஆக்ரோஷமாக களத்தில் இறங்கியதில்லை.

வழக்கமாக இம்மாநிலத்தில், விநாயகர் சதுர்த்தியின்போது இந்து முன்னணி அமைப்புதான் ஊர்வலங்களை பிரமாண்டமாக நடத்தி, தங்கள் அமைப்பு இருப்பதை அரங்கேற்றிக் கொள்ளும். ஆனால், இந்த முறை ஆர்.எஸ்.எஸ். அமைப்பு அப்படியொரு பிரமாண்டமான அணிவகுப்புகளை தமிழகம் முழுவதும் மிகுந்த கட்டுப்பாட்டுடன் நடத்தி முடித்திருக்கிறது.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பு என்றாலே அதன் தொண்டர்கள் காக்கி அரைக்காற்சட்டை, வெள்ளை நிறத்தில் முழுக்கை சட்டை அணிந்து அதை முஷ்டியை உயர்த்துவது போல் மடித்துவிட்டு, கறுப்புத் தொப்பி அணிந்து காணப்படுவார்கள். இப்படி சீருடையில் வருவதற்கு ஆர்.எஸ்.எஸ், மொழியில், பூர்ண கணவேஷ் என்று கூறுவார்கள்.

எங்கு அமர்ந்தாலும் அணிவகுத்தாலும் ஒரு சீரான அணிவகுப்பாகவும் ஒழுங்கான வரிசையில் பேரணியாகவும் அது அமையும்.

திராவிட கட்சிகள், மாநாடுகள் போட்டும் பேரணிகள் நடத்தியும் மக்களின் ஆதரவைத் திரட்டியிருக்கின்ற இந்த நேரத்தில், ஆர்.எஸ்.எஸ். அமைப்பு மட்டுமே அணிவகுப்பு என்ற வடிவில் ஆர்ப்பாட்டமின்றி அமைதியான நிகழ்ச்சியை தமிழகம் முழுவதும் நடத்தி முடித்திருக்கிறது.

இந்த நிகழ்ச்சிக்கு பின்னணி உண்டு. ஒக்டோபர் மூன்றாம் திகதி விஜயதசமி விழாவில் பேசிய ஆர்.எஸ்.எஸ். தலைவர் டாக்டர் மோகன்ராவ் பகவத் தமிழக நிலைமைகளை வழக்கத்துக்கு மாறாக சுட்டிக்காட்டினார்.

வருடா வருடம் மஹாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் நடக்கும் இந்த விஜயதசமி உரை என்பது, ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் உள்ள ஸ்வயம்சேவக்குகளுக்கு (தொண்டர்கள்) ஒரு கொள்கை விளக்கக் குறிப்பு போன்றதாகும்.

அந்த வருடத்தில் இடம்பெறும் பேச்சில் ஆர்.எஸ்.எஸ். தலைவர் என்ன குறிப்பிட்டுள்ளாரோ அதுதான் தொண்டர்களுக்கான செய்தி. அதை சம்பந்தப்பட்ட மாநிலங்களில் அவர்கள் முன் னெடுத்துச் சென்று நிறைவேற்ற வேண்டும். அதற்கான செயற்றிட்டங்களை உருவாக்க வேண்டும்.

இந்த விஜயதசமி உரையில், ஆர்.எஸ்.எஸ். தலைவர் பகவத், தமிழகத்தின் மீது கவனம் செலுத்தியிருக்கிறார். அவரது பேச்சில் தமிழகத்திலும் கேரளத்திலும் ஜிஹாத் தீவிரவாதம் குறையவில்லை. அந்த நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் தெரியவில்லை.

தமிழகத்திலிருந்து தாது மணல் கடத்தப்படுவதும் குறையவில்லை என்று தமிழக நிலவரங்களை மிகவும் விரிவாக கூறியிருக்கிறார்.

இது மாதிரி சுட்டிக்காட்டிவிட்டு, இந்த வருடம் ராஜேந்திரசோழனின் முடிசூட்டும் விழாவின் ஆயிரமாவது வருடம் என்றும் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

ராஜேந்திர சோழன், தமிழர்களின் பெருமையாகவும் கௌரவமாகவும் அடையாளமாகவும் திகழ்ந்தவர்., அந்த மன்னனின் பெயரை முன் வைத்து தமிழகத்துக்குள் தன் கவனத்தைத் திருப்பும் முயற்சிக்கு விதை போட்டது தான் நாக்பூரில் நடைபெற்ற விஜயதசமி விழா.

இதைத்தொடர்ந்து, நவம்பர் 9 ஆம் திகதி ராஜேந்திர சோழனுக்கு விழா எடுக்கும் பொருட்டு ஆர்.எஸ். எஸ். அமைப்பினர் தங்களது சீருடையில் தமிழகம் முழுவதும் 36 இடங்களில் அணிவகுப்பு நடத்தினார்கள்.

பொதுவாக தமிழகத்தில் வருடப்பிறப்பு போன்ற நேரங்களில் இது மாதிரி நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். ஆனால், இந்த முறை ராஜேநதிரசோழனை கையில் எடுத்துக் கொண்டனர். இந்த அணிவகுப்புக்கு மாநில அரசு தடை விதித்தது.

அதாவது, தொண்டர்கள், தண்டா (தடி) எடுத்துக் கொண்டு போவார்கள். அது மாநில அமைதிக்கு சரிவராது என்பது பொலிஸார் அதற்கு தெரிவித்த காரணம். ஆனால், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் அணிவகுப்புக்கு அனுமதி பெற்றனர்.

அதைத் தொடர்ந்து சென்னை உள்ளிட்ட, அனைத்து இடங்களிலும், பால ஸ்வயம் சேவக்கிலிருந்து (குழந்தை பருவ ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள்) மூத்த ஸ்வயம்சேவக்குகள் வரை அனைவரும் இதில், ஒரு குடும்ப விழா போன்ற கலந்து கொண்டார்கள்.

இதில் கலந்து கொண்டு பேசிய வித்யா பாரதி அமைப்பின் மாநில செயலாளர் விஸ்வநாதன், ராஜேந்திரசோழனின் 17 சிறப்பம்சங்களை பட்டியலிட்டார்.

அவருக்கு கங்கை கொண்ட சோழன் என்று பெயர் உண்டு என்றும் இமயம் வரை நல்லாட்சி நடத்தியவர் என்றும் அவர் கட்டிய சிவாலயங்கள்தான் இன்றைக்கும் பிரமாண்டமாக இருக்கின்றன என்றும் பல சிறப்பம்சங்களைப் பட்டியலிட்டார்.

அதைவிட முதலில் கப்பற்படையை துவங்கிய முதல் தமிழன் ராஜேந்திர சோழன் என்று தமிழர் பெருமை பற்றி அங்கே விலாவாரியாக எடுத்துரைத்தார். அவர் பேச்சு முடிந்த பிறகு அனைவரும் அணி வகுப்புக்கு தயாரானார்கள்.



முதலில் தண்டா கொண்டு செல்லக்கூடாது என்று தடை விதித்தது பொலிஸ். பிறகு வாத்தியங்கள் மூலம் பாடல்கள் பாடக்கூடாது என்று கட்டுப்பாடு விதித்தது. அதற்கு எல்லாம் சம்மதித்தனர் ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள.

இறுதியில் அணிவகுப்பே போகக்கூடாது என்றனர். அதற்கு மறுத்த ஆர்.எஸ்.எஸ் தொண்டர்கள், நாங்கள் அமைதியாக அணிவகுப்பு புறப்படுவோம். தடையை மீறுவோம். கைது ஆவோம், என்று பிரகடனப்படுத்தினார்கள்.

அதைத் தொடர்ந்து அணிவகுப்பு ஆரம்பமானது. கைது செய்யப்பட்டார்கள். இந்தக் கைதை பா.ஜ.க.வின் அகில இந்திய பொதுச் செயலாளர் ராம் மாதவ் கண்டித்திருக்கிறார்.

மாநிலத்தில் உள்ள பா.ஜ.க.வினரும் ஆர்.எஸ்.எஸ். தலைவர்களும் கண்டனம் செய்திருக்கிறார்கள். விரைவில் இது தொடர்பாக தனியாக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்படும் என்றும் அறிவித்துள்ளார்கள்.

இத்தெல்லாம் ஒரு புறமிருக்க ஆர்.எஸ்.எஸ். ராஜேந்திரசோழனின் நல்லாட்சி பிரசாரத்தை தமிழகத்தில் முன்னெடுத்துச் செல்வதில் அர்த்தம் பொதிந்துள்ளது.

மாநிலத்தைப் பொறுத்தவரை அ.தி.மு.க.வின் வாக்கு வங்கி ஏறக்குறைய பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்பு தொண்டர்களுக்கு வருத்தம் அளிகாத வாக்கு வங்கி. அக்கட்சி தலைமையும தி.மு.க.போல், அதிரடி இந்துத்துவா எதிர்ப்பு கொள்கையை கடைப்பிடிப்பதில்லை.

குறிப்பாக மதமாற்றத் தடை சட்டம் கொண்டு வந்தது, திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் கொண்டு வந்தது போன்றவற்றை பா.ஜ.க.வும் ஆர்.எஸ்.எஸ், இந்து முன்னணி போன்ற அமைப்புகள் பாராட்டியே வந்திருக்கின்றன.

ஆனால் இதற்கெல்லாம் மாறாக இந்த முறை ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. இந்துத்துவா எதிர்ப்பு கொள்கைய்ய கடைப்பிடிக்கவில்லை என்றாலும் சிறுபான்மையின சமுதாய வாக்குகளை பகைத்துக் கொள்ளும் எந்த முயற்சியிலும் இறங்கவில்லை.

அது துப்பாக்கி, விஸ்வரூபம் படப் பிரச்சினைகளில் கூட எதிரொலித்தது. அதை விட வழக்கத்துக்கு மாறாக அ.தி.மு.க. ஆட்சியில் இருக்கும் போது பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்து முன்னணித் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

அது சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை அ.தி.மு.க. அரசு கைது செய்துள்ளது என்றாலும் அ.தி.மு.க. ஆட்சியிலிருக்கும் போது நடைபெற்ற இந்தக் கொலைகள் ஆர்.எஸ்.எஸ். போன்ற இயக்கத் தலைவர்களை கொந்தளிக்க வைத்தது.

அதன் வெளிப்பாடுதான் ஒக்டோபரில் நடந்த விஜயதசமி உரையில், தமிழகத்தில் ஜிகாத் நடவடிக்கைகள் குறையவிலலை. கட்டுப்படுத்தப்படவும் போதிய நடவடிக்கைகள் இல்லை என்பது டாக்டர் மோகன்ராவ் பகத்தின் குற்றச்சாட்டு.

இது போன்ற சூழ்நிலையில், இனி அ.தி.மு.க.வை நம்பி தமிழகத்தில் நாம் அரசியல் செய்ய முடியாது என்ற முடிவுக்கு பா.ஜ.க.வும் வந்திருக்கிறது.

அதை விட முக்கியமாக ஆர்.எஸ்.எஸ். முடிவு செய்திருக்கிறது. அதனால்தான் பெங்களூர் சொத்துக் குவிப்பு வழக்கில், ஜெயலலிதா சிறை தண்டனை பெற்றுள்ள சூழ்நிலையில், 2-ஜி அலைக்கற்றை வழக்கின் இறுதி வாதம் டெல்லி சி.பி.ஐ. நீதிமன்றத்தில் தொடங்கும் நேரத்தில். தமிழகத்தில் ராஜேந்திரசோழனின் நல்லாட்சியை முன்னிலைப்படுத்தி ஆர் எஸ் எஸ். களமிறங்கியுள்ளது.

இந்த இயக்கத்தின் பிரசாரம் என்பது சக்திமிக்கது என்பதுதான் அனைவரது கருத்தும். குறிப்பாக நரேந்திரமோடி இன்றைக்கு பிரதமராகியிருக்கிறார் என்றால் அதற்கு முழுமுதற் காரணம் ஆர்.எஸ்.எஸ்.தான்.

அந்த அமைப்பின் தொண்டர்கள் நாடுமுழுவதும் காங்கிரஸ் அரசின் நிர்வாக சீர்கேடுகள் பற்றியும் அந்த அரசு நீடித்தால் நாட்டுக்கு எப்படி ஆபத்து என்பது பற்றியும் செய்த தீவிர பிரசாரம்தான் மோடியின் வெற்றிக்கு முத்தாய்ப்பாக அமைந்தது.

அதேபோல, இப்போது அ.தி.மு.க. ஆட்சியின் நிர்வாக சீர்கேட்டைக் கண்டித்து, அந்த ஆட்சியில் தங்களுக்கு அணிவகுப்பு மறுக்கப்பட்டமை குறித்து, பிரசாரத்தை அதிவேகமாக எடுத்துச் செல்லப் போகிறது ஆர்.எஸ்.எஸ். இயக்கம்.

தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. அரசியலுக்கு மாற்றாக முதலில் காங்கிரஸ் இருந்தது. பிறகு வைகோ மற்றும் ராமதாஸ் போன்றவர்கள் உருவானார்கள். அவரகளுக்குப் பிறகு தமிழ் மாநில காங்கிரஸ் பிறந்தது. அதுவும் முடியாத சூழலில் விஜயகாந்தின் தே.மு.தி.க. பிறந்தது.

அதுவும் நாடாளுமன்றத் தேரதலில் தோற்றுள்ள நிலையில், தி.மு.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் மாற்று என்பதை முன்னிறுத்தி ஆர்.எஸ்.எஸ்., தமிழகத்தில் பலமாக கால் ஊன்றுகிறது.

அணிவகுப்புக்கு அசத்தலாக வந்திருந்த தொண்டர்களைப் பார்த்தால் அதுதான் தோன்றுகிறது.

இவர்களது பிரசாரம், பா.ஜ.க.வுக்கு, தமிழகத்தில் அ.தி.மு.க.வுக்கும் தி.மு.க.வுக்கும் மாற்று என்ற அந்தஸ்தை பெற்றுத் தருமா என்பது 2-ஜியில் வரப்போகும் தீர்ப்பு, பெங்களூர் சொத்துக் குவிப்பு வழக்கு தண்டனையின் மீதான மேல்முறையீட்டு மனுத் தீர்ப்பு போன்றவை முடிவு செய்யும் என்பதே இன்றைய நிலைமை.

*-எம்.காசிநாதன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில் நுட்பங்கள் -26


## நீரும் நாமும்: வினைத்திறனான நுண்நீர்ப்பாசன தொழில்நுட்பமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

இயற்கையின் திருவிளை யாடல்களை நாம் காலங் காலமாக உணர்ந்திருந்தாலும் தற்போது திருவிளையாடல் மாறி இயற்கையின் சீற்றமாக மாறியிருக்கின்றது எனலாம். எல்லாவறுக்கும் காரணம் நீரும் நாமும் தான். மழைவீழ்ச்சி தற்போது தலைகீழாக மாறத் தொடங்கியிருக்கின்றது. மலைநாட்டில் பெய்யும் மழையின் பெயரால் மண்சரிவு ஏற்பட்டு மக்கள் இன்னல் பட்டதை எண்ணும்போது நெஞ்சம் பதைபதைக்கின்றது. கவனக்குறைவினால் ஏற்பட்டதாகவே கருதலாம். காரணம் நீரும் நாமும் தான். தொழில்நுட்ப வளர்ச்சி சமகால விஞ்ஞான யுகத்தில் அபிரிமிதமாக வளர்ச்சியடைந்திருக்கின்றது. இதற்கான புலமை வாய்ந்த வல்லுநர்களும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருக்கத்தானே செய்கின்றார்கள். அனைவரும் எங்கள் தேசத்திற்குரியவர்கள். ஆனால் இயற்கை அனர்த்தம் ஒன்று நடைபெற்றதன் பின்னர் ஒவ்வொருவரும் விலாவாரியான அறிக்கைகளாக வெளியிட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அதற்கொரு சின்னத்தனமான காரணமும் முன்வைக்கின்றார்கள். இனியொரு முறை இவ்வாறு மண்சரிவு அனர்த்தம் நடைபெறக்கூடாதென்பது அவர்கள் புலமையின் ஆதங்கமும வாதமுமாகும். இந்த புலமையை முன்கூட்டியே உணர்ந்தறிந்தால் இவ்வாறான அனர்த்தங்களை தவிர்த்திருக்கலாம் அல்லவா? வெறுமனே அரசாங்கத்தையோ ஒரு துறையையோ அல்லது ஒரு நிறுவனத்தையோ குறைகூறும் கலாசாரத்திலிருந்து நாம் விடுபடவேண்டும். இதற்கு காரணம் நீரும் நாமும் தான். இங்கே நீர் என்பது மக்களனை வரையும் நாம் என்பது புலமையாளர்களையும் இன்னும் ஊடகத்துறையையும் குறிக்கும். மக்கள் தானே அரசாங்கம். மக்களிலிருந்து தானே அமைச்சர்கள், பணிப்பாளர்கள், அதிகாரிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள். அவரவர் தமக்குரிய பணியை சரியாகச் செய்தால் எமக்குள்ள பிரச்சினையை நாமே தீர்த்துக்கொள்ளலாம். எமக்குரிய பணியை நாம்முன்னின்று வினைத்திறனாக சரி வரச்செய்தால் நீரும் நாமும் தேடிக்கொண்டிருக்கும் எமது தேசத்தின் விடிவெள்ளியை காணலாம். இதையெழுதி என்னவாகப் போகுது. இதுவெல்லாம் கதையாகத்தான்இருக்குமே யொழிய நடைமுறைச்சாத்தியமாகுமா என நீரும் கொடுப்புக்குள் புன்னகைப்பது நாமும் அறிய முடிகின்றது. வருமுன் காப்போம் என எமது மூதாதையர் அடித்துச்சொன்னதை நீரும் நாமும் மறந்தது போக அதனை அலட்சியப்படுத்தியதன் விளைவே இந்த துயரம், இன்னல் அனைத்தும்.

தற்போது நாமிருக்கும் கால போகத்தில் கிடைத்த மழைவீழ்ச்சி மிகமிக குறைவானதாக பதிவாகியிருப்பதாக நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவித்திருப்பதை நன்றாக கூர்ந்து அவதானிக்க வேண்டும். கிடைத்த மழைவீழ்ச்சி போதாது என்பதற்கு மேலாக இனியுள்ள மீதி காலத்தில் கிடைக்கப் போகும் மழைநீரின் அளவு 2015 ஆம் ஆண்டில் நாம் நீருக்காக படப்போகும் பாட்டை முன்கூட்டியே விதந்துரைத்திருக்கின்றது. நீரும் கடலுக்குள் ஓடவிடப்பட்டிருக்கின்றது. இயற்கைக்கு தேசத்தைத்தான் தெரியுமேயொழிய அரசியல் தெரியாது. எமது நாடு என்பது தாய்நாடு என்பதற்கும் மேலாக இங்குள்ள வளங்களனைத்தும் நாட்டு மக்களுக்கு சொந்தம். கிடைக்கும் நீரும் அப்படிப்பட்டதே. நீரை அரசியலாக்கியதால் அதனை ஆயுதமாக்கியதால் இந்த தேசத்தில் அழிவு யுத்தம் நடந்து இறுதியில் னும் நிலை வரும்போது அனைத்தும் தானாக நடந்தேறும். தேனீக்களின் குடியில் இராணித் தேனீக்கு வலுவிழந்தால் அல்லது குடியை நிருவகிக்க முடியாவிட்டால் ஏனைய வேலையாள் தேனீக்கள் (மக்கள்) சேர்ந்து அதனை குடியை விட்டு வெளியில் அகற்றிவிட்டு புதிதாக ஒரு இராணியை தேர்ந்தெடுத்துக் கொள்ளும். ஐந்தறிவு ஜந்துக்களுக்கு புரிந்தது ஆறறிவுக்கு இன்னும்



தூவல் நீர்ப்பாசனம்

### இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XVI

நாமும் இப்படியே இருந்துவிட்டு பின்னர் இருவரும் நீருக்காக (குடிப்பது, குளிப்பதிலிருந்து நீர்ப்பாய்ச்சுவதென்பதுவரை) இன்னல்படப் போகின்றோம் என்பதனையே எங்களூர் பொறியியலாளர் தெரிவித்த செய்தியிலிருந்து ஊகித்துக் கொள்ளலாம். இங்கே விஞ்ஞான தொழில்நுட்பம் பிரச்சினையை முன்கூட்டியே தெரிவித்திருப்பதை கவனத்தில் கொணடு இதற்கு மேலே ஆகவேண்டிய காரியங்களை திட்டமிடல் வேண்டும். இல்லையேல் நீரும் நாமும் நீருக்காக நீண்ட கியூவில் நிற்க வேண்டியிருக்கும். பரவாயில்லை அதுவெல்லாம் எமக்கு பழக்கப்பட்டது தானே என சாக்குபோக்கு சொல்லக் கூடாது. இதில் ஒவ்வொரு துறைக்கும் தனிமனிதனுக்கும் கணிசமான பங்குண்டு. நீர்ப்பிரச்சினை பற்றி கருத்தரங்குகள், மாநாடுகள் பல கூடினாலும் ஆக்கபூர்வமான முறையில் எதனையும் செய்யாது இந்த நீர்ப்பிரச்சினையிலிருந்து நீரும் நாமும் தப்பவே முடியாது. அப்படித்தான் தப்பினாலும் குடிப்பதற்காக நீருக்காக அலையவேண்டியிருக்கும்.

மழையாக வந்த நீர் நல்ல நீர். அதனை அதுவாக (நன்னீராக) சேமித்தால் எமக்கிருக்கும் நீர்ப்பிரச்சினை தீர்க்கப்பட்டு விடும். ஆனால் எங்கிருந்தோ வந்த மழை நின்ற மழையையும் கூட்டிச்சென்று தென்பகுதியிலல்லவா கொட்டித்தீர்த்து வெள்ள அனர்த்தமாகியிருக்கின்றது. இது தொடர்ச்சியாக மூன்று வருடங்களாக நடந்து கொண்டிருக்கின்றது. அளவுக்கதிகமாக பெய்ததால் மண்சரிந்து துன்பியல் நிகழ்வையையும் நடத்திக்காட்டியிருக்கின்றது: தென்பகுதி நீர்த்தேக்கங்களின் வான்கதவுகளனைத்தும் திறக்கப்பட்டு மழைநீர் இருந்ததையும் இழந்து இருப்பையும் தொலைத்து இப்போது இழந்ததற்கு நிவாரணம் தேடிக் கொண்டிருக்கின்றோம். நாமே அழித்து, அழிந்து இப்போது அழிந்ததற்கு நிவாரணமும் நட்டஈடும் பெற்றுக் கொண்டிருக்கின்றோம். இந்த விசித்திரத்தை இன்னும் அரசியலாக்கி வாழநினைப்பது தான் மனதை எங்கோ நெருடுகின்றது. துன்பத்திலுழன்ற மக்களின் அன்றாட வாழ்க்கைக்கான வழிகளை செய்து கொடுப்பதும் எதிர்காலத்தில் இந்த தேசத்தில் மக்கள் வாழ வழிவகைகளை திட்டமிடலும் தற்கால தேவைகளாகும். எமது கைகளை இனியும் நம்பாது இன்னொருவர் கைகளை நம்பி இன்னும் எவ்வளவு காலத்திற்கு நாம் துன்பப்படப் போகின்றோம்? தாயும் மகளும் என்றாலும் வாயும் வயிறும் வேறு வேறு என எதற்காக சொல்லிவைத்தார்கள்?

அரசியலை தொழிலாக வரித்துக்கொண்டவர்கள், இன்னும் வாழ்பவர்கள் அரசியல் செய்யலாம் ஆனால் அதனையே அனைவரும் தொழிலாகக் கொண்டால் நாடு என்னாவது? திணைக்களங்கள், துறைகள், நிறுவனங்கள், சங்கங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் இன்னும் குடும்பங்களில் கூட அரசியல் புகுந்து விட்டது. உள்வீட்டு அரசியல் என்பது தான் அதுவோ? இதுவும் ஒருவகை அரசியல் தொழில்நுட்பம் என்கிறார்கள். கடமை செய்பவர் அந்த கதிரையை பாரமாகவோ அல்லது கதிரைக்கு பாரமாகவோ இருந்து எந்தவித பிரயோசனமுமில்லை. பதவிகளில் உள்ளவர்கள் அதற்குரிய கடமையை செய்யத்தவறினால் கதிரையிலேயே தூங்கியெழுந்தால் மக்களால் தூக்கியெறியப்பட வேண்டும் என ஏழாம் அறிவுக்கு இன்னுமேன் புரியவில்லை ?

வடபகுதி குளங்கள், நீர்த்தேக்கங்கள் அரைகுறையாக நிரம்பியிருக்கின்றன. நன்றாக நாம் கவனிக்க வேண்டிய விடயமிது. வருங்காலம் எமக்கு சோதனையான காலமாக இருக்கப் போகின்றது. நீரின்றி ஏது உலகம் என்பதனை நாம் நீருக்காக நீரும் நாமும் தேடியோடும் போது தெரியவரும். சிலவிடயங்கள் எமக்கு புரிவதேயில்லை. தென்பகுதியிலிருந்து போத்தல் போத்தலாக குடிநீர் வடபகுதிக்கு பண்டமாக வந்து அதனை கருத்தரங்குகள், மாநாடுகள், விழாக்கள் என பலவிடங்களில் பயன்படுத்தும் போது வந்து சேராத அரசியல் மழைநீராக விழுந்ததை வழிதிருப்பி இரணைமடுக்குளத்திற்கு வந்து யாழ்ப்பாணம் வர அரசியலாகிவிடுமாம். பண்டமாக வரும் போது காசு கொடுத்து வாங்கி தான் குடிக்கும் நம்மஊர் அரசியல் மக்களுக்காக, விவசாயத்திற்காக அந்த நீர் தேவையென குரலெழுப்பும் போது பின்னடிக்கின்றது. மழையாக விழுந்த நீர் நன்னீர். அதனை கடலுக்குள் வில்லங்கத்திற்கு அனுப்பிவிட்டு பின் அந்த உவர்நீரை சுத்தம் செய்து குடிப்பதற்கு பயன்படுத்தப் போகின்றோம். இதற்கு பலமடங்கு செலவு செய்யும் தொழில்நுட்பம் தேவை. கிடைத்த மழை நீரை வழிமாற்றி, வழி நடத்தி தேவையான பகுதிகளில் சேமித்து நேரடியாக மிகவும் குறைந்த செலவில் பயன்படுத்துவதற்கு வழியிருந்தும் அதனை உள்வீட்டு அரசியலாக்கி மிகைப்பட்ட செலவும் செய்ய துணிந்திருக்கின்றோம். இங்கே பயன்படும் தொழில்நுட்பம் எந்தவகை? எனக்குத் தெரிந்து இதனைத்தான் அரசியல் தொழில் நுட்பம் என்பார்களோ?

எதிர்காலம் நீருக்கான போட்டியாக இருக்கப்போகின்றது எம்மினிய உறவுகளே! அனைவரும்இதில் கவனமாகவும் கரிசனையாகவும் இருக்கவேண்டும். நுண்ணிய பாசனமுறைகள் பலவுண்டு. அதிலும் சொட்டுநீர்ப்பாசனம் மற்றும் தூவல்நீர்ப்பாசன முறைகள் எளிமையான முறையில் நீர் விரயமாவதைத்தடுத்து வினைத்திறனான முறையில் பயன்படுத்தகூடியவை. இன்னும் பானைமுறை நீர்ப்பாசனம் தென்னை, கமுகு போன்ற மரங்கள் இறந்து விடாமல் உயிர் காக்கக்கூடிய எளிய நீர்ப்பாசன தொழில்நுட்பங்கள், இவ்வருடம் பல இடங்களில் குறிப்பாக கிளிநொச்சி பகுதியில் தென்னை மரங்கள் வட்டுடன் இறந்து கவிழ்ந்து விட்டதற்கு காரணம் அதிகரித்த வரட்சியும் நிலத்தடி நீரின் மட்டம் குறைவடைந்ததுமாகும். இதற்கான காரணத்தை கண்டறிந்தால் அடுத்த வருடமும் வரப்போகும் அதீத வரட்சியில் மரங்கள் இறந்து போகாமல் பார்த்துக் கொள்ளலாம். மரம் நடுகை மாதமான இம்மாதத்தில் பல மரங்களை நடுவதைப்போன்று இருக்கும் மரங்கள்ளையும் விரைந்து காப்பாற்ற வேண்டும். இதற்கான எளிய தொழில்நுட்பம் மக்களுக்கு முன்கூட்டியே தெரியப்படுத்தினால் வரவிருக்கும் பேரிடரிலிருந்து நாமும் நீரும் தப்பிப்பதைப் போன்று எமது வளமான மரங்களையும் தப்பித்துக்கொள்ள வைக்கலாம்.

வரட்சியைப்பற்றி மட்டும் பேசிக் கொள்வதில் பிரயோசனமில்லை. வெள்ள அனர்த்தம் ஒன்று ஏற்படுமிடத்து அதனை எவ்வாறு சமாளிப்பது என்பது பற்றியும் கரிசனை கொள்ளவேண்டும். தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் போது அவற்றின் பராமரிப்பும் மிக முக்கியமானதாகும். இதற்காக தொழில்நுட்பத்தை கற்று முடித்த இளைஞர் யுவதிகளுக்கு தேவையான பயிற்சியளித்து தொழிலில் இறக்கி விடலாம்.இயந்திரங்களை பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பதற்காக தொழில்நுட்பத்தை இளையோருக்கு பயிற்றுவித்து அவர்களுக்கான தொழிற்றுறையாக, வருமானந்தரும் தொழிலாக மாற்றிவிடலாம். இத் தொழில் நுட்பத்தை கற்று வெளியேறிய மாணவர்களை ஒன்றிணைத்து இதற்கான அத்திபாரத்தை இடலாம். காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்பதன் அர்த்தமும் இதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கு உதவிகளை வழங்குமாறு வடமாகாண சபை கோரிக்கை விடுப்பு

**தமிழ்மக்களின் வாழ்வியலையும் வாழ்வாதாரங்களையும் மேம்படுத்துவதற்கு உதவுமாறு வடக்கு மாகாண சபை புலம்பெயர் உறவுகளிடமும் ஏனையவர்களிடமும் பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பாக வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,**

கடந்த முப்பது வருட கால யுத்த நிலை மற்றும் இலங்கை அரசாங்கத்தின் திட்டமிட்ட புறக்கணிப்புக்கள் பாகுபாடுகள் காரணமாக தமது வாழ்வாதாரங்களை இழந்தும் தொலைத்தும் விட்டும் நிரந்தர தொழில் வருமானம் எதுவுமின்றியும் அல்லற்படும் எமது மக்களின் வாழ்வியலையும் வாழ்வாதாரங்களையும் மேம்படுத் துவது மிக அவசியமானது.

இதன் பொருட்டு எமது தாயகத்தில் இருக்கக்கூடிய உற்பத்தி சார் வளங்களைஇனங்கண்டுஅவற்றைக் கொண்டு உருவாக்கக்கூடிய தொழில்களையும் இனங்கண்டு திட்டங்களைத் தயாரித்தும் எமக்கு வழங்கியுதவ வேண்டுமென நிலத்திலும் புலத்திலும் வாழும் துறைசார் அறிவு ஆற்றல் அனுபவம் மற்றும் நிபுணத்துவம் கொண்ட உறவுகளை வடக்கு மாகாண சபை வேண்டிநிற்கிறது. அத்துடன் இன்றைய நவீன தொழில்நுட்பங்களின் அடிப்படையில் அயல் பணி (Out Sourcing) சேவைகளில் எமது இளைஞர்கள் ஈடுபடக்கூடிய வாய்ப்புக்கள் பற்றியும் ஆலோசனைகள் வரவேற்கத் தக்கது.

வடக்கு மாகாணசபை தனித்து நின்று திட்டங்களை தயாரிக்கலாம் என்றோ அமுல்படுத்தலாம் என்றோ கருதவில்லை.

மாறாக எமது உறவுகளின் உதவிகளுடனும் ஒத்துழைப்புடனேயே எமது மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டை முன்னெடுக்கலாம் எனத் திட்டமாக நம்புகிறது.

இந்த முயற்சியில் எம்முடன் இணைந்து கொள்ள யாழ்ப்பாணம் கைதடியிலுள்ள எமது பேரவைச் செயலகத்துடன் தபால் மூலமாகவோ Councilnpc@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாகவோ தொடர்பு கொள்ள வேண்டுகின்றோம் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சப்ரகமுவ மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின 10 மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளவுள்ளதாக உபவேந்தர் பேராசிரியர் சந்தன உடவத்த தெரிவித்துள்ளார்.

பகிடிவதை சம்பவத்துடன் தொடர்புடைய முகாமைத்துவபீடம் இரண்டாம் வருடத்தைச் சேர்ந்த 10 மாணவர்களுக்கு எதிராகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கடந்த 6ஆம் திகதி முகாமைத்துவ பீட மாணவர்களால் முதலாம் வருட மாணவர்கள் மனிதாபிமான மற்ற முறையில் பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பேராசிரியர் சந்தன உடவத்த தெரிவித்தார்.

இந்த சம்பவம் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சிலரால் கவனிக்கப்பட்டுள்ளதோடு, சம்பந்தப்பட்ட மாணவர்களும் இதனை ஒப்புக் கொண்டுள்ளனர்.

இதனால் இந்த மாணவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்த விரிவுரையாளர்கள் 2ஆம் வருட மாணவர்களுக்கான விரிவுரையை நேற்று முன்தினம் பகிஷ்கரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

மேற்கொள்ளப்படும் ஒழுககாற்று விசாரணைகளின் படி, குற்றம் சாட்டப்பட்ட 10 பேருக்கும் வழங்கப்பட வேண்டிய தண்டனை தொடர்பில் ஒழுக்காற்றுக் குழுவே தீர்மானிக்கும் எனவும் உபவேந்தர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## சூரியகாந்தி சிறுவர் கழகத்தின் சிறுவர் தின நிகழ்வுகள் இன்று

(புன்னாலைக்கட்டுவன்)

யாழ்.மானிப்பாய் கிழக்கு சூரிய காந்தி சிறுவர் கழகத்தின் சிறுவர் தின நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மானிப்பாய் கிழக்கு பாரதி சனசமூக நிலையத்தின் தலைவர் சி.அஜந்தா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில்பிரதம விருந்தினராக வலி தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலர் திருமதி என். செல்வகுமாரி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் கிழக்கு ஜே/ 138, கிராம சேவையாளர் எம்.முரனும் வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எம். பத்மராஜ் மற்றும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் பொ. சுசிதரன், மானிப்பாய் கிழக்கு குடும்ப உத்தியோகத்தர் மல்லிகா தேவி ஜீவரட்ணம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7-78)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 90 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 130 | 140 |
| தக்காளி | 140 | 180 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 40 | 40 | 60 |
| கோவா | 120 | 120 | 120 | 120 |
| கரட் | 200 | 140 | 180 | 200 |
| பூசணி | 50 | 40 | 40 | 50 |
| புடோல் | 80 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 170 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 110 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 80 | 80 |
| பயற்றங்காய் | 120 | 140 | 130 | 160 |
| லீக்ஸ் | 280 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 120 | 100 | 80 | 160 |
| கறிமிளகாய் | 130 | 220 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 350 | 190 | 200 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 80 | 60 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 150 | 220 | 180 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 250 | 120 | 170 | — |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like (193)

தசா ஜெயா

வாழ்க்கையின் வெற்றி நிர்ணயிக்கப்படுவது உங்களது கடந்த கால வாழ்க்கையை பொறுத்ததல்ல... இனி நீங்கள் என்ன செய்ய போகிறீர்கள் என்பதை பொறுத்தது...



மெஸ்ஸி: டீ கடையில் வேலை பார்த்து காற்பந்து பயிற்சியை பெற்றேன்.


ரஜினி: எனது 25 வயதில் நான் ஒரு பேருந்து நடத்துநர்.

சச்சின்: 10 ஆம் வகுப்பில் நான் தேர்ச்சி பெறவில்லை.


பில் கேட்ஸ்: எனது கல்லூரி படிப்பை நான் முடிக்க வில்லை.

நம்பிக்கை + முயற்சி = வெற்றி

துஷா துஷா



டொறின் மன்மதநாயகம்



"யாருப்பா அந்த ஜோடி... ரெண்டு மணி நேரமா ஒரே இளநீயைக் குடிச்சுட்டு இருக்காங்க?"

"கடை விளம்பரத்துக்காக நான்தான் காசு கொடுத்து நிக்கவைச்சிருக்கேன்!"

ராஜமணி சுப்பிரமணி

பாட்டி : "டேய் நீ ஒரு வாரமா லீவு போட்டுட்ட, உங்க டீச்சர் நம்ம வீட்டுக்கு வந்துருக்காங்க போடா ஒளிஞ்சிக்கோ"...!!



பேரன் : "பாட்டி நீ செத்துப்போயிட்டேன்னு சொல்லித்தான் ஒரு வாரம் லீவு போட்டேன், முதல்ல நீ போய் ஒளிஞ்சுக்கோ"...!

அமிர்தலிங்கம் அஜந்தன்




ரத்தினசபாபதி பாலராஜா



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014
## மாதிரி வினாத்தாள்- கிழக்கு மாகாணம்

**வரலாறு** **பகுதி I** **ஒரு மணித்தியாலம்**

31.பேர்சிவல் அடிகளாருடன் இணைந்து பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்தவர்
1.ஸ்டில் ஒல்கொட் 2.பிலவஸ்கி அம்மையார்
3.D.P.ஜாயா 4.ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

32.சட்டசபைக்கு முதன்முதலாக மலைநாட்டுச் சிங்களவர் ஒருவரைத் தெரிவு செய்த யாப்பு
1.மக்கலம் யாப்பு 2.மனிங் யாப்பு
3.டொனமூர் யாப்பு 4.சோல்பரி யாப்பு

33.சோல்பரி யாப்பின் கீழ் அமைக்கப்பட்ட பொது சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிப்பவர்
1.பிரதம மந்திரி 2.மகாதேசாதிபதி
3.பிரதம நீதியரசர் 4.பிரித்தானியமகாராணி

34.இலங்கையின் மந்திரி சபை ஆட்சி முறைக்கு ஆரம்ப பயிற்சியினை வழங்கிய முதல் யாப்பு
1.கோல்புறூக் யாப்பு 2.மக்கலம் யாப்பு
3.டொனமூர் யாப்பு 4.சோல்பரி யாப்பு

35.இலங்கையில் முதன்முதலாக இடம்பெற்ற தொழிலாளர் வேலை நிறுத்தம்
1. தள்ளுவண்டித் தொழிலாளர் வேலைநிறுத்தம்
2.வெள்ளவத்தை நெசவுத் தொழிலாளர் வேலைநிறுத்தம்
3. சலவைத் தொழிலாளர் வேலைநிறுத்தம்
4. கொழும்பு அச்சகத் தொழிலாளர் வேலைநிறுத்தம்

36. பெண்கள் கல்விக்காக கொழும்பு விசாகா, மியூசியஸ், காலி சங்கமித்தா கல்லூரிகளைத் தோற்றுவித்தவர்
1. அநாகரிக தர்மபாலா 2. ஏ.ஈ.குணசிங்கா
3. ஸ்டில் ஒல்கொட் 4. எம்.சி.எம். சித்தலெப்பை

37. ஜப்பானில் உருவான முதலாவது அரசியல் கட்சி
1. தாராண்மைவாதக் கட்சி 2. முற்போக்குக் கட்சி
3. பழைமைபேணும் கட்சி 4. தொழிற் கட்சி

38.உலகின் விவசாயிகளின் உதவியுடன் பாரிய புரட்சி ஒன்றை ஏற்படுத்தியவர்
1. சங்-யாத்-சென் 2.மாவோ-சே-துங்
3.சங்- யாத்- லின் 4.செள்- என்- லாய்

39. இந்தியாவின் தேசிய சங்கத்தின் ஆரம்ப உறுப்பினரும் இந்தியாவின் மேன்மையாளரும் என அழைக்கப்படுபவர்
1. சுரேந்திரநாத் பனர்ஜி 2.பாலகங்காதரதிலகர்
3.லாலாலஜ்பதிராஜ் 4.தடாபாய் நபரோஜி

40. இந்திய தேசிய காங்கிரசின் உதவியுடன் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தவர்
1. சுரேந்திரநாத் பனர்ஜி 2. கோபால் கிருஸ்ணகோகிலே
3. மகாத்மா காந்தி 4. சுபாஸ்சந்திரபோஸ்

பகுதிII 3 மணித்தியாலங்கள்

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பகுதி 1ல் முதலாம் வினா் கட்டாயமானது.
- பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களுக்கும், பகுதி III இலிருந்து
- எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.
- மொத்தமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி-I

01) 1.

(அ)தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தில் பின்வரும் வரலாற்று இடங்களைக் குறித்துப் பெயரிடுக.

ஜம்புகோளப்பட்டினம், பொம்பரிப்பு, திரியாய், கம்பளை, ஜஜ்ரநதி, உபதிஸ்ஸகம, தீகவாவி, சிகிரியா, மினிப்பே அணை, மகியங்கனை

(ஆ)தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தில் பின்வரும் வரலாற்று இடங்களைக் குறித்துப் பெயரிடுக.


நன்னம்பிக்கைமுனை, மகலன் தொடுகடல், தாமிரலிப்தி, கொன்ஸ்தாந்து நோபிள், கள்ளிக்கோட்டை, ஜிப்ரோட்டல் தொடுகடல், வெனிஸ், ஜப்பான்

2.


(அ).பின்வரும் சிறப்புக்குரிய நபர்களைப் பெயரிடுக.

I. கலிகாலசாகித்திய சர்வஞ்ஞ பண்டிதன்.....
II. கோட்டைச் சிங்கம்.....
III.தொழிலாளர் இயக்கத்தின் கர்த்தா.....
IV.செய்முறை விஞ்ஞானத்தின் தந்தை.....

அருகே காட்டப்பட்டுள்ள ஆக்கங்களை அவதானித்து படம் A,B யில் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.



(ஆ )I. படம் A யில் காணப்படும் ஆக்கத்தின் பெயர் யாது?
II.இவ்வாகத்தினை உருவாக்கிய மன்னன் யார்?
III.இக்கலைப்படைப்பு எக்காலத்துக்குரியது?
IV.இங்குள்ள தூண்களின் வடிவம் யாது?



(இ I.படம் B யில் காட்டப்பட்டுள்ள ஆக்கத்தின் பெயர் யாது?
II.இவ்வாக்கத்தினை அமைத்தவர் யார்?
III.இது யாருடைய ஞாபகமாகக் கட்டப்பட்டது பெயரினைக் குறிப்பிடுக?
IV.இக்கலையாக்கத்திற்கு பயன்படுத்திய கல்வகை யாது?

### பகுதிII

02)



1.அருகே தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் A,B,C எனும் எழுத்துக்களால் குறிப்பிட்டுள்ள புராதன குடியேற்றங்களை முறையே தருக.
2.இலங்கையில் ஆரியக் குடியேற்றங்களைத் தோற்றுவித்த ஆரியக் குழுக்களுள் முதல் நான்கினையும் ஒழுங்கு முறையில் தருக.
3.ஆரியர்கள் நீர்ப்பாசன நடவடிக்கைகளில் கவனம் செலுத்தியமைக்கான இரு காரணங்களைக் குறிப்பிட்டு அவைபற்றி விளக்குக.
4.ஆரியர்களின் அரசியல் முறைகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றில் இரண்டினைப்பற்றி சுருக்கமாக விபரிக்குக.

03)

I.பின்வரும் குளங்களை அமைத்த மன்னர்களைப் பெயரிடுக.
அ)பதவியாக்குளம்
ஆ)மின்னேரியாக்குளம்
இ)பசவக்குளம்

II.பின்வரும் பணிகளை ஆற்றும் புராதன குளத்தின் உறுப்புகளைப் பெயரிடுக.
A.வான்கதவு உடைப்பெடுக்கும் சந்தர்ப்பத்தில் குளத்து நீர் முழுமையாக வெளியேறாமல் பாதுகாத்தலுக்காக அமைக்கப்பட்டுள்ள உறுப்பு
B.குளக்கட்டின் ஊடாக கால்வாய்க்கு நீரை வழங்கும்போது ஏற்படும் அமுக்கத்திலிருந்து குளக்கட்டைப் பாதுகாப்பது
C.மழைகாலத்தில் சேரும் குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்டுள்ள உறுப்பு
D.குளக்கட்டானது நீரினால் அரிக்கப்படாமல் பாதுகாப்பதற்காக குளக்கட்டின் உட்புறத்தே கருங்கற்களைப் பரவி அமைக்கப்பட்டுள்ள உறுப்பு

III.பண்டைய தொழில்நுட்பவியலாளர்கள் நீர்ப்பாசன நிர்மாணிப்புகளுக்காக நாட்டின் பௌதீக இயல்புகளைப் பயன்படுத்திய விதத்தினை இரு காரணிகள் கொண்டு விளக்குக.

IV.நீர்ப்பாசன வரலாற்றில் பொற்காலமென சிறப்பித்துக் குறிப்பிடப்படும் காலத்தில் ஆட்சி செய்த மன்னனைக் குறிப்பிட்டு அவன் அதற்காக ஆற்றிய சேவைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

04)




I.அருகே இராசதானிகளின் இடப்பெயர்வு அம்புக் குறியினால் காட்டப்பட்டுள்ளது. அவற்றுள் A B C எழுத்துக்கள் குறிக்கும் இராசதானிகளை ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

II.பின்வரும் இராசதானிகளைத் தலைநகராக்கிய முதல் மன்னர்களைப் பெயரிடுக.
1.அநுராதபுரம் 2.தம்பதெனியா
3.குருநாகல் 4.கம்பளை

III.பொலநறுவை ஆட்சியின் வீழ்ச்சிக்கு வழிகோலிய காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவை பற்றி விளக்குக.

IV.குருநாகல் இராசதானியை ஒளிமயமாக்கிய மன்னனையும் அவனது சமய இலக்கிய சேவைகளையும் குறிப்பிட்டு விளக்குக.

05)

I.போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்த வேளையில் இலங்கையில் காணப்பட்ட மூன்று பிரதான இராட்சியப் பிரிவுகளையும் பெயரிடுக.

II.பின்வரும் வரலாற்று நிகழ்வுகளுடன் சம்பந்தப்பட்டவர்களை A B C D ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.
A.முல்லேரியாப் போருக்கு தலைமை தாங்கிய இலங்கை மன்னன்
B.கி.பி 1621ல் யாழ்ப்பாண இராட்சியத்தைக் கைப்பற்றுவதற்காக போர்த்துக்கேயரால் அனுப்பப்பட்ட படைத் தளபதி.
C.ஒல்லாந்தருக்கு அனுப்பிய கடிதங்களில் தனது பெயரை திறீசிங்களாதீஸ்வர என்ற பட்டப் பெயரைப் பொறித்த மன்னன்
D.கி.பி.1766ல் இடம்பெற்ற ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஒல்லாந்த தளபதி

III.போர்த்துக்கேயராலும் ஒல்லாந்தராலும் மலையகத்தைக் கைப்பற்ற முடியாமைக்கான இரு காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

IV.போர்த்துக்கேயரை விட ஒல்லாந்தர் அதிகளவு பொருளாதார நன்மைகளை பெற்றமைக்கான காரணங்கள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக.

06)

I. 1.நோத்தினால் ஒழிக்கப்பட்ட இராஜகாரிய முறையை மீண்டும் இலங்கையில் கொண்டு வந்த ஆள்பதி
2.1810 ல் யூரி சபைக்கு இலங்கைக்கு அறிமுகப்படுத்த ஆலோசனை வழங்கியவர்
3.கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு ஒற்றர் சேவையினை ஏற்படுத்தியவர்

மேற்கூறப்பட்ட நிகழ்வுகளுக்குப் பொருத்தமானவர்களை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்து அதே ஒழுங்கில் எழுதுக.

(பிரட்டிக்நோத், தோமஸ்மெயிற்லண்ட், றொபேட் பிறவுண்டிக், எட்வேட் பாண்ஸ், யோண்டொயிலி, எகலப்பொல, சேர் அலெக்சாண்டர், யோன்ஸ்ரேனன்)

II.நோத்தின் மலையகப் படையெடுப்பு தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

III.இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையால் ஏற்பட்ட சாதகமான விளைவுகள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக.

IV.இலங்கையில் பெருந்தோட்டத் துறையின் விருத்திக்கு பங்களிப்புச் செய்த மூன்று காரணிகளைக் குறிப்பிட்டு அவைபற்றி சுருக்கமாக விளக்குக.

### பகுதிIII

07)



I.அருகே தரப்பட்டுள்ள இந்தியப் படத்தில் ABC எனும் எழுத்துக்களால் குறித்துக் காட்டப்பட்ட நதிகளின் பெயர்களை ஒழுங்கு முறையில் தருக.

II.பின்வரும் சிறப்புப் பெயர்களுக்குரிய மன்னர்களைப் பெயரிடுக.
1.விறல் ஒளிக்கதிரோன்/விக்கிரமாதித்தன்
2.ராஜாதிராஜன்
3.மகேந்திராதித்தன்
4.இந்தியாவின் நெப்போலியன்

III.இந்திய கலாசாரத்தில் குப்த ஆட்சியாளர் காலம் பொற்காலமாகும். இதனை இரு காரணிகளின் துணைகொண்டு விளக்குக.


IV.மகத இராட்சியத்தின் எழுச்சிக்காக பிம்பிசாரன், அஜாதசத்துரு ஆகியோர் ஆற்றிய சேவைகள் ஒவ்வொன்று தந்து விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை- சீன நெருங்கிய உறவால் இலங்கை வந்தது நீர்மூழ்கிக்கப்பல்!

*சண்டே டைம்ஸ் பத்திரிகையில் 2014.11.02 அன்று இராட்சத சீன ட்ராகனின் நவீன இலங்காபுரி பிரவேசம் என்னும் .தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கம் பிரசுரமாக்கப்படுகின்றது.*

இலங்கையின் போருக்குப் பிந்திய வரலாற்றில் அந்நிய சக்திகளின் ஆதிக்கத்திற்கு உட்படாமல் தனது சொந்த சக்தி மற்றும் செல்வாக்கின் மூலம் சுயாதீனமாகவும் கட்டுப்பாட்டுடனும் நிமிர்ந்து நிற்கும் விதத்தில் சீனா தற்போது செயற்படுவதுபோல் வேறெந்த நாடும் செயற்பட்டதில்லை.




இலங்கை- சீன நாடுகளுக்குமிடையிலான இரு தரப்பு உறவுகளிலும் ஏற்பட்டிருக்கும் அந்தளவு தீவிர வளர்ச்சி காரணமாக அதனது வளர்ச்சியின் போக்கு குறித்து ஆராய்ந்து அறிவதற்கு தேவையான பெருமளவு நேரமும் தகவலும் ஒரு சில நாடுகளைத் தவிர அநேகநாடுகளுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

சீனாவுடன் இலங்கை கொண்டிருக்கும் உறவு நீண்ட வலராற்றைக் கொண்டதாகும்.

புராதன காலங்களில் அவையிரண்டும் வியாபார பங்காளிகளாயிருந்ததுடன் இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் 1952 இல் ஏற்பட்டுத்தப்பட்ட இறப்பர்- அரிசி ஒப்பந்தம் இந்த நாடுகளின் உறவு வளர்ச்சிக்கு பெருமளவில் உதவியது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது சீனா அளப்பரிய பங்காற்றியது.

போர் முடிபுக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இடம்பெற்று வரும் ஒவ்வொரு போர் நினைவு தின படை அணிவகுப்பிலும் காட்சிப்படுத்தப்படும் சீனாவின் தொழில்நுட்பம் வாய்ந்த பலரக ஆயுதங்களின் வரிசைகள் அவ்வாயுதங்கள் இல்லாமல் இலங்கை போரில் வெற்றி கிட்டியிருக்காது என்பதை எடுத்துக்காட்டும்.

எப்படியும் இருநாடுகளுக்குமிடையிலான சமகால இருதரப்பு உறவுகள் நேர்மையோ வெளிப்படைத் தன்மையோ அற்றவையாகவே இருப்பதுடன் உறவுகளின் தன்மையில் காணப்படும் முக்கிய பாரதூரமான விடயங்கள் பாக்கு நீரிணைக்கு அப்பால் கவலைகளை ஏற்படுத்துவதாயுமுள்ளன.

தெற்காசியாவில் சீனாவிற்கு இருக்கும் புவியியல் மூலோபாய நலன்களையிட்டு சந்தேகத்துடன் கூடிய ஒருவித எச்சரிக்கை உணர்வுடனேயே புதுடில்லி எப்போதும் இருந்து வருகிறது.

ஆனாலும் ஆக்கிரமிக்கும் விதத்தில் இலங்கையில் சீனா மேற்கொள்ளும் அண்மைக் கால ஆதிக்க விஸ்தரிப்பு நடவடிக்கைகளை கொழும்பு அரசானது கேள்வியற்ற விதத்தில் ஏற்றுக் கொள்வது போன்ற செயற்பாடுகள் அதிக ஆத்திரத்தை கிளறியிருக்கிறது. இதுபோல் முன்னர் கொழும்பு அரசு நடந்து கொண்டதில்லை.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, இந்திய பாதுகாப்பு அமைச்சர் அருண் ஜெட்லியையும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் டோவலையும் புதுடெல்லியில் சந்தித்த விடயங்கள் இந்தியாவின் அக்கறைக்குரிய விதத்தில் உச்சநிலையை எட்டியிருந்ததாக தெரிகிறது.

செப்ரெம்பர் மாதத்தில் சீனாவின் கடற்படை நீர்மூழ்கிக் கப்பலொன்று கொழும்பு துறைமுகத்தில் தரித்திருந்த விடயமானது இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு விடுக்கப்படும் மோசமானதொரு அச்சுறுத்தலாகவே கொள்ளப்படும் என பாதுகாப்பு செயலரிடம் அறிவுறுத்தப்பட்டது.

சீனாவின் படைப்பிரசன்னம் எதுவும் இலங்கையிலில்லை என மறுக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையில் பிரதம கடற்படை அதிகாரியாகிய வைஸ் அட்மிரல் ஜெயந்த பெரேரா, இந்தியாவின் பாதுகாப்பே எமது பாதுகாப்பு என இந்தவாரமே புதுடெல்லியில் கூறியதாக தெரிகிறது.

கொழும்பு அரசு கூறியவாறு உண்மையாக நடக்கவும் வேண்டும். ஏனைய நாடுகளைப்போல் இந்தியாவும் இனிமேலும் இலங்கையை நம்பப்போவதில்லை.

சீனர்களால் கட்டப்பட்டு சீனர்களாலேயே நடத்தப்பட்டுவரும் கொழும்பு- சர்வதேச கொள்கலன் இறங்கு துறைப்பகுதிக் கப்பற் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந்த நீர்மூழ்கியே இலங்கை துறைமுகத்தை பயன்படுத்திக் கொண்ட முதலாவது நீர்மூழ்கிக் கப்பலாகும்.






சீனாவுக்குத் திரும்பும் பயணத்தின் போது அது மீளவும் இத்துறைமுகத்திற்கு வருகிறதோ இல்லையோ என்பதற்குப் புறம்பாக சீனக்கடற் படைக் கப்பல் அணியொன்று கொழும்பில் இந்த மாதம் தரித்திருக்கும் என தன்னைத் தானே சீன மக்கள் விடுதலை இராணுவம் சார்ந்த ஒரே அதிகாரபூர்வ ஊடகமென கூறிக்கொள்ளும் சீன மிலிட்டரி ஒன்லைன் கூறுகிறது. குறிப்பிட்ட இந்த நீர்மூழ்கிக்கு முன்னரும் இரு சீன கடற்படை அணிகள் இரகசியமாக கொழும்பு வந்து திரும்பிச் சென்றிருந்தன.

ஏனைய வேறு நாடுகளின் ஆயுதப் படைக்கப்பல்கள் இலங்கைக்கு வரும்போது பின்பற்றும் விதிமுறைகள் போலல்லாது முற்றிலும் மாறுபட்ட விதத்தில் சந்தடியில்லாமல் இரகசியமாகவே இவை இடம்பெற்றிருக்கின்றன.

சாதாரண நடைமுறைகளுக்கேற்ப இவ்வித ஆயுதப்படைக்கப்பல்கள் வரும்போது அரசாங்கமே அவற்றின் வருகையை அறிவித்து பத்திரிகை அறிக்கைகளையும் வெளியிட்டிருக்கிறது.

2011 இலிருந்து 2014 வரையிலான காலகட்டத்தின்போது பாகிஸ்தான், இந்தியா, ஜப்பான், ரஷ்யா, தென்கொரியா, தாய்லாந்து, புருனை, அவுஸ்திரேலியா, மலேசியா, இந்தோனேசியா, பங்களாதேஷ் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளின் ஆயுதப்படைக் கப்பல்களுடன் ஏனைய வேறு நாடுகளின் கப்பல்களும்கூட வந்துபோயிருந்தன.

இந்த வருடம் ஜனவரியிலும் சீனப்போர்க்கப்பல்கள் இரண்டு திருகோணமலை துறைமுகம் வருவதாக பகிரங்கமாகவே அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் இந்த சீன நீர்மூழ்கிக் கப்பலுடன் வருகை தந்த ஏனைய கடற்படைக்கப்பல்கள் பற்றி வித்தியாசமான முறையில் மௌனம் காக்கப்பட்டதே சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு மன உளைச்சலையும் அசௌகரியத்துடன் ஏற்படுத்தியிருந்தது. மேலும் நீர்மூழ்கிக் கப்பல் உள்வந்த திகதி தொடர்பில் உண்மை மறைக்கப்பட்டிருக்கிறது.

உத்தியோகபூர்வ அறிவிப்பின்படி அந்த நீர்மூழ்கிக் கப்பலானது சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங் வருகைக்கு முந்திய நாளான செப்ரெம்பர் 15 ஆம் திகதியன்று கொழும்புத்துறைமுகக் கப்பல் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது.

ஆனாலும் சீன மிலிட்டரி ஒன்லைன் கூற்றுப் படி நீர்மூழ்கிக் கப்பலும் அதனது ஆதரவுக்கப்பலும் செப்ரெம்பர் 7 இலிருந்து 14 வரையில் கொழும்பு விஜயத்தில் இருந்திருக்கின்றன.

இதிலிருந்து அவ் நீர்மூழ்கிக் கப்பல் ஜப்பான் பிரதமர் ஷின்ஷோ அபே வருவதற்கு முந்திய நாளில் கொழும்பு வந்தது புலப்படும்.

சீன ஜனாதிபதியின் வருகையின் போது இக்கப்பல் வரவில்லை என்பதும் தெளிவு. இந்த விதத்தில் இது சீனாவின் அதிமுக்கிய எதிரியான ஜப்பானுக்கு ஆத்திரமூட்டும் உணர்வுப்பூர்வமான விடயமாயிற்று.

எனவே, இந்நிகழ்வுகள் கூறும் செய்து என்னவெனில், இலங்கை தனது நீண்டகால சர்வதேச நட்பு நாடுகள் இரண்டிற்கும் (ஒன்று அதனது அண்மித்த அயல்நாடும் பிராந்திய வல்லரசுமாகும்) தனது புதிய விசுவாசம் இப்போது எங்குள்ளது என்று வெளிப்படையாகவே காட்டத் தொடங்கியுள்ளது.


இலங்கை தனது அணிசேரா கொள்கை என்ற வெற்று மந்திரத்தையே (போலியான விசுவாசம்) காற்றில் உச்சாடனம் செய்தபடி தனது செயற்பாடுகளை தீவிர வளர்ச்சி கண்டுவரும் தனது தூரத்து உறவுக்காரர் (பெரிய கடன்காரர்) பக்கத்தில் தானாகவே நிலைநாட்டிவருகிறது.

**தமிழில்-யோகர்**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியாவில் இரு நகரங்கள் தீவிரவாதிகளிடமிருந்து மீட்பு!



ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோஹராம் தீவிரவாதிகள் இஸ்லாமிய சட்டத்தை கடைப்பிடிக்க வலியுறுத்தி 2002 ஆம் ஆண்டு முதல் அந்த நாட்டு அரசுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வருகின்றனர்.2009 ஆண்டு முதல் நைஜீரியாவில் தாங் கள் ஃகைபற்றிய பகுதிகளை இஸ்லாமிய நாடாக் அறிவித்து கொண்டனர். இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு பலியாகி உள்ளனர்.

இவர்களால் 30 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். இந்த தீவிரவாதிகளுடன் போர் நிறுத்த உடன்படிக்கையை கடந்த மாதம் நைஜீரியா அரசு அறிவித்தது. ஆனால் இதை ஏற்க மறுத்த தீவிரவாதிகள் அங்கு தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

நைஜீரியாவின் வடகிழக்கு பகுதிகளின் பெரும்பாலான பகுதிகள் தீவிரவாதிகளின் வசமுள்ளது. இந்த நிலையில் நைஜீரியாவின் அடமவா மாநிலத்துக்கு உட்பட்ட முபி மற்றும் மல்கா நகரங்களை சமீபத்தில் போகோஹராம் தீவிரவாதிகள் கைப்பற்றினர். இதற்காக நடந்த சண்டையில் அப்பாவி பொது மக்கள் ஏராளமானோர் கொலலப்பட்டதுடன், பல வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டன. இந்த நகரங்களில் வசித்து வந்த ஆயிரக்கணக்கான பொது மக்களை தீவிரவாதிகள் விரட்டியடித்தனர். தீவிர வாதிகளின் பிடியில் இருந்த இந்த நகரங்களை மீட்க, இராணுவம் அதிரடியாக களமிறங்கியது. இந்த நடவடிக்கையில் உள்ளூர் வேட்டைக்காரர்கள் மற்றும் பொதுமக்களால் உருவாக்கப்பட்ட அமைதி காப்புக்குழுவினரும் இராணுவத்துக்கு உதவியாக செயறபட்டனர். இந்த குழுவினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் தீவிரவாதிகள் வசமிருந்த அந்த 2 நகரங்களும் மீட்கப்பட்டன.

இந்த நடவடிக்கையின் போது 75 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும் உள்ளூர் வேட்டைக்காரர் ஒருவர் தெரிவித்தார். எனினும் இந்த தகவலை அதிகாரிகள் உறுதி செய்யவில்லை. (இ-5)

# புலியைப் பிடிக்க பாரிஸில் தேடுதல்

பிரான்சின், தலைநகர் பாரிஸ் அருகே சுப்பர் மார்க்கெட் அருகே பொதுமக்களால் காணப்பட்ட புலி ஒன்றைப் பிடிக்க பொலிஸ், தீயணைப்புப் படையினர் ஹெலிகொப்டர்கள் உதவியுடன் தேடுதல் வேட்டையை நடத்தி வருகின்றனர்.

பாரிஸ் நகரின் அருகே உள்ள மாண்டிவ்ரேயன் என்ற நகர் அருகே உள்ள பெருவணிக வளாகம் ஒன்றின் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் இந்தப் புலி தென்பட்டதாக ஒரு பெண் உள்ளூர் அதிகாரிகளுக்குத் தெரிவித்தார்.

இதனை அடுத்து, பொலிசாரும் தீயணைப்பு வீரர்களும் அப்பகுதியில் இந்தப் புலியைத் தேட தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகினறனர். ஹெலிகொப்டர்களும் இந்தத் தேடல் வேட்டையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்த விலங்கின் கால் தடங்களைப் பார்வையிட்ட வல்லுநர்கள், இது ஒரு இளம புலியின் கால் தடங்களை ஒத்ததாக இருப்பதாகக் கூறினர். இது நகரின் அருகே இருக்கும் ஒரு வனப்பகுதிக்குள் சென்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்தப் புலியை பல உள்ளூர்வாசிகள் பார்த்ததாக லெ பாரிசியன் செய்தித்தாள் கூறியது.

பொதுமக்களும், சிறார்களும் வெளியே வர வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இந்தப்புலி எங்கிருந்து வந்தது என்பது இன்னும் தெளிவாகவில்லை.

நகரில் சனிக்கிழமை வரை இருந்த ஒரு சர்க்கஸ் கம்பனியிலிருந்து இந்தப் புலி தப்பியிருக்கக்கூடும் என்ற செய்திகளை நகர மேயர் அலுவலகம் மறுத்திருக்கிறது.

பாரிசில் இருந்து இயங்கும் "டிஸ்னிலேண்ட்" கேளிக்கை பூங்கா நிறுவனம் தன்னிடம் புலி எதுவும் இல்லை என்று தெரிவித்திருக்கிறது. (இ)




# 14 கோடி ஆண்டுகள் பழைமையான டைனோசருடைய பல் கண்டுபிடிப்பு

சுமார் 14 கோடி ஆண்டுகள் பழைமையான டைனோசர் பல் ஒன்று ஆய்வாளர்களால் மலேசியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தாவிர உண்ணி வரிசையைச் சேர்ந்த பறவை இடுப்பு டைனோசர் வகை உயிரினத்தின் பல் என்று கூறப்படுகிறது.

சுமார் 13 மிமீ நீளமும், 10.5 மிமீ அகலமும் கொணட இந்தப் பல், மலேசியப் பல்கலைக்கழகத்தின் தலைமை ஆய்வாளரான மசா டோஷி சோன் குழுவினரால் பஹாங் மாகாணத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஆய்வில், வசேதா பல்கலைக்கழகம் மற்றும் குமா மோட்டோ பல்கலைக்கழகம் ஆகிய இரண்டு ஜப்பானியப் பல்கலைக்கழகங்களும் கலந்து கொண்டன.

இதுகுறித்து மசாடோஷி சோன் கூறியது, பஹாங் மாகாணத்தில் இரண்டு ஆணடுகளுக்கு முன்பு டைனோசர் தொடர்பான படிமங்கள் குறித்து ஆய்வைத் தொடங்கினோம்.

2012 ஆம் ஆண்டு சுமார் 7 கோடி ஆண்டுகள் பழைமையான முதல் டைனோசர் படிமம் கிடைத்த இடத்துக்கு அருகில் இந்தப் பல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றார்.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள பல், பறவை இடுப்பு அமைப்பு கொண்ட டைனோசரின் பல் ஆகும்.

அந்த டைனோசர் தாவிர உண்ணியாகும். அது குதிரையின் உயரத்துக்கு இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. (இ-5)

# சீனா சென்ற ஒபாமாவுக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு

## உறவுகளை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்லவும் இணக்கம்



ஆசியா, பசுபிக் பொருளாதார கூட்டுறவு அமைப்பின் தலைவர்களிடையே பீஜிங்கில் இடம்பெற்ற மாநாட்டில் பங்கேற்பதற்காக அதிகார பூர்வ பயணமாக சீனாவுக்கு சென்ற அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு பீஜிங் விமான நிலையத்தில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் சிவப்புக் கம்பள வரவேற்பு அளித்தார்.

இந்த மாநாட்டுக்கு பின்னர் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை சந்தித்த பராக் ஒபாமா, வளர்ந்த நாடுகளான சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் நிலவும் நட்புறவை அடுத்தகட்டத்துக்கு கொண்டு செல்லும் வழிமுறைகள் பற்றி ஆலோசனை நடத்தினார்.

இருநாட்டு தலைவர்களும் முக்கியமான பிரச்சினைகளை மேலும் நெருக்கமாக அணுகி, அவ்வ்போது தொடர்பு கொண்டு, தங்களது ஆழ்ந்த கருத்துகளை பரிமாறிக் கொள்ள வேண்டும் என பராக் ஒபாமாவிடம் ஜி ஜின் பிங வலியுறுத்தினார்.

பொருளாதார பலத்தில் உலகின் இரு மிகப்பெரிய நாடுகளாகவும், உடல் ஆற்றலும், படைப்பாற்றலும் கொண்ட மக்களை பெற்ற நாடுகளாகவும் அறியப்படும் அமெரிக்காவுகதும் சீனாவுக்கும் இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்துவதன் மூலம் இரு நாட்டு மக்கள் மட்டுமல்ல, உலகில் உள்ள அனைத்து மக்களும் பயன் அடைவார்கள என்று இந்த சந்திப்பின் போது பராக் ஒபாமா தெரிவித்தார்.

சீன ஜனாதிபதி வலியுறுத்தியது போலவே முக்கியமான பிரச்சினைகளில் ஜி ஜின்பிங்கை உடனுக்குடன் தொடர்பு கொண்டு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்ல தானும் விரும்புவதாகவும் பராக் ஒபாமா தெரிவித்தார். (இ)

# அதிகளவான மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்ட வடகொரிய தலைவருக்கு எதிராக ஆதாரங்கள்

## ஐ.நா.தகவல் வெளியீடு

வடகொரியா தொடர்ந்து மனிதவுரிமை மீறல் குற்றத்தில் ஈடுபட்டு வருவதாக சர்வதேச அளவில் குற்றச் சாட்டு எழுந்துள்ளது. தற் போது சமகால உலகில், மனித வுரிமை மீறலில் பிற எந்தவொரு நாட்டுடனும் ஒப்பிட முடியாத அளவுக்கு அங்கு மனிதவுரிமைகள் மீறப்படுவதாக கூறப்படுகிறது.

அந்த நாட்டின் அரசியல் சட்டத்தில் மனிதவுரிமைகளுக்கு வகை செய்யும் சட்டப்பிரிவுகள் இருந்தாலும்கூட, அவை ஏட்டளவில்தான் உள்ளன. அங்கு பேச்சுரிமை கூட கிடையாது. தகவல் தொடர்பு என்றால் அரசின் வானொலி மற்றும் தொலைக்காட்சியின் மூலம் இடம்பெறுகிறது.

அண்மையில் தென்கொரியாவின் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இரகசியமாக பார்த்தும் வானொலி நிகழ்ச்சிகளை கேட்டும் குற்றம் செய்ததாக தனது சொந்த உழைப்பாளர் கட்சியை சேர்ந்த 50 பேருக்கு வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் மரண தண்டனை விதித்து, அதை நிறைவேற்றி விட்டதாக தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

அங்கு ஏறத்தாழ 2 இலட்சம் அரசியல் கைதிகள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கட்டாயமாக வேலை செய்ய வைக்கப்படுகிறார்கள், சித்திரவதைக்கு ஆளாகிறார்கள், மரணதண்டனையும் நிறைவேற்றப்படுகிறது என புகார்கள் உள்ளன. அந்த நாட்டுக்குள் சுற்றுலா தவிர்த்து வேறு எந்த நோக்கத்துக்காகவும் பிற நாட்டினர் எளிதில் நுழைந்து விட முடியாது.

வடகொரியாவின் மனித வுரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. விசாரணை நடத்தியது. இதன் அறிக்கையில், வடகொரியாவின் பாதுகாப்பு படை தலைவர்கள், ஆட்சியாளர் கிம் ஜாங் உன் உள்ளிட்டவர்கள் சித்திரவதை, பட்டினி, கொலை செய்தல் போன்றவற்றை தூண்டிய குற்றச்சாட்டுகளின் பேரில் விசாரணையை எதிர்கொளள வேண்டும்எனகூறப்பட்டுளளது.

மேலும், நாட்டில் ஒரே ஒரு மனிதரின் கைகளில் அதிகாரம் குவிந்திருப்பதன் காரணமாகத்தான் இத்தகைய மனிதவுரிமை மீறல்கள் நடைபெறுகின்றன என்று சந்தேகத்துக்கு இடமின்றி சுட்டிக்காட்ட முடியும். எனவே வடகொரியாவில் நடந்து வரும் மனிதவுரிமை மீறல்களுக்கு அந்த நாட்டின் தலைவர் கிம் ஜாங் உன் மீது நேரடியாக குற்றம் சாட்ட முடியும் என கூறப்படடுள்ளது.


இது தொடர்பாக ஐ.நா. விசாரணையாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில், வடகொரியாவில் நடந்து வரும் மனிதவுரிமை மீறல்கள், சித்திரவதைகளுக்கு அந்த நாட்டின் தலைவர் கிம் ஜாங் உன்னுக்கு எதிராக போதுமான ஆதாரங்கள் உள்ளன என்றார்.

இது தொடர்பாக ஐரோப்பிய நாடுகளும், ஜப்பானும் இயற்றிய வரைவுத் தீர்மானம், மனிதவுரிமைகளுக்கு எதிராக குற்றங்களை வடகொரியா செய்தது குறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணைக்கு அனுப்ப வேண்டும் என கூறுகிறது.

ஆனால் ஐ.நா. அறிக்கையை வடகொரியா நிராகரித்துள்ளது. வடகொரியாவின் அரசியல் அமைப்பை சீர்குலைக்கும் வகையில் அமெரிக்கா மேற்கொண்ட சதி இது என அது கூறி உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைத்து கொண்டு செல்லப்பட்ட ஆறு மாடுகள் மீட்கப்பட்டுள்ளன



(கிளிநொச்சி)

ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பிக்கப் ரக வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட இரு மாட்டு கன்றுக்குட்டிகள், நான்கு மாடுகள் ஆகியவற்றை கிளிநொச்சி குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் நேற்று காலை 9.30 மணியளவில் மீட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

விசுவமடுவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி மூடி கட்டப்பட்டு பூட்டிய நிலையில் பயணித்த மேற்படி வாகனம் பரந்தன் சந்தியை அண்மித்த வேளையில் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் குழுவினர் சந்தேகத்தின் பேரில் குறித்த வாகனத்தை நிறுத்தி சோதனையிட்ட போது அதில் இரு கன்றுக்கட்டிகள், நான்கு மாடுகளை மறைத்து கொண்டு சென்றமை தெரியவந்தது.

இதனையடுத்து பொலிஸார் மேற்படி வாகனத்தையும் மாடுகளையும் வாகனத்தில் பயணித்த இரு நபர்களையம் மேலதிக விசாரணைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் குறித்த வாகனத்தை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். (அ-2-271)

# சுகாதார விழிப்புணர்வூட்ட சித்திரம் வரைதல் திட்டம்

**துணுக்காய் கல்வி வலயத்திற்கு 378 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு**

ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் 3 இலட்சத்து 78 ஆயிரம் ரூபா நிதியுதவியில் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட 18 பாடசாலைகளில் சுகாதார விழிப்புணர்வு தொடர்பில் சித்திரங்களை வரைந்து காட்சிப்படுத்தும் செயற்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி.எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

தலா 21 ஆயிரம் ரூபா வீதம் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள மு/அலைக்கல்லு போட்டகுளம் அ.த.க.பாடசாலை, மு/மாமடு பழம்பாசி அ.த.க.பாடசாலை, மு/பெரிய இத்தி மடு அ.த.க.பாடசாலை, மு/கரிப்பட்டமுறிப்புஅதகபாடசாலை, மு/ஒலுமடு அ.த.க. பாடசாலை, மு/கருவேலன் கண்டல் அ.த.க. பாடசாலை, மு/காதலியார் சமணங்குளம் அ.த.க. பாடசாலை, மு/கூழாமுறிப்பு அ.த.க. பாடசாலை, மு/புழுமச் சிநாதகுளம் அ.த.க.பாடசாலை, மு/ஒட்டுசுட்டான் இ.த.க. பாடசாலை, மு/பனிக்கன்குளம் அ.த.க.பாடசாலை , மு/பெரிய புளியங்குளம் அதகபாடசாலை, மு/ஈஸ்வரன் வித்தியாலயம், மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயம், மு/ஆறுமுகம் வித்தியாலயம், மு/முத்துவிநாயகர்தமிழ்வித்தியாலயம், மு/கண்முகரெட்ணம் வித்தியாலயம், மு/முத்தையன்கட்டு வலது கரை மகாவித்தியாலயம் ஆகிய 18 பாடசாலைகளுக்கு 3 இலட்சத்து 78 ஆயிரம் ரூபா நிதியுதவியில் மாணவர்களிடையே சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தும் சித்திரங்கள் வரையும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-15)

## மாலை அணிவிக்கும் நிகழ்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி அருள் மிகு சபரி ஐயப்பன் திருக்கோயிலில் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு குருசாமியினால் பக்தர்களுக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)




# வாழ்வாதார உதவியில் பாரபட்சம்; அம்பாள்குள கிராமமக்கள் ஆதங்கம்

வாழ்வாதார மற்றும் அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றின் உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களை சென்றடைவதில்லை என அம்பாள்குளம் Kn/14 கிராம சேவையாளர் பிரிவு மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி கிராமத்தில் சுமார் 00 குடும்பங்கள் வசிப்பதுடன் இவர்கள் வன்னி யுத்தத்தின் பின்னர் இங்கு மீள்குடியேறி வசிக்கின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இக் கிராமத்திற்கு வழங்கப்படும் வாழ்வாதார உதவி தெரிவுகளில் பாரபட்சம் காட்டப்படுகின்றது. முன்னர் உதவிகளை பெற்றுக் கொண்டவர்களுக்கே மீண்டும் மீண்டும் உதவிகள் வழங்கப்படுகினற்ன.

அண்மையில் இக் கிராம மக்களுக்கு மாடுகளும் கோழிகளும் வழங்கப்பட்டன. ஆயினும் கடும் வறுமையில் சிக்கித்தவிக்கும் மக்களுக்கு உதவிகள் கிடைக்கவில்லை என சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் மக்கள் கிராம அலுவலரிடம்தெரிவித்தபோது, பயணாளிகள் தெரிவை தன்னிடம் கேட் காமலே செய்கின்றனர். உதவி வழங்குபவர்களிடம் இவ்விடயம் பற்றி கேளுங்கள் எனக் கூறுகின்றார்.

கால்நடை கூட்டுறவு சங்க தலைவரிடம் மக்கள் முறையிட்டபோது பயனாளிகள் தெரிவு தொடர்பில் தான் அறிந்திருக்கவில்லை எனவும் இத்தெரிவில் பிழைகள் இருப்பதாகவும் கூறினார்.

ஆகவே இக்கிராமத்தில் இனி வரும் காலங்களில் பயனாளிகள் தெரிவு செய்வதில் பாகுபாடின்றி அனைவருக்கும் ஏதோ ஒரு வழியில் உதவி கிடைக்க கிராம அலுவலர், கிராம அபிவிருத்தி சங்கத்தினர், சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கமக்கார அமைப்பினர், கால்நடை கூட்டுறவு சங்கத்தினர் ஆகியோர் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-271)



நாடளாவிய ரீதியில் மரநடுகை வாரம் நேற்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதனை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தலைமையில் மரநடுகை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது நீதிமன்ற பதிவாளர், உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகள், சட்ட உதவி ஆணைக்குழு சட்டத்தரணிகள், உத்தியோகத்தர்களும் பங்குபற்றியிருந்தனர். ஏற்கனவே அழகிய பூங்காவும் பயன்தரும் மரங்களும் நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவின் முயற்சியினால் நடப்பட்டு நிர்மாணம் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இங்கு கருத்துரைத்த நீதிபதி சூழலை நாம் பாதுகாத்தால் சூழல் எம்மை பாதுகாக்கும் என குறிப்பிட்டார்.

## வதிவிட செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள பாடசாலைகளில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நேற்றும் இன்றும் நடைபெறவிருந்த கணித பாட வதிவிடச் செயலமர்வு தேசிய மரநடுகை தினத்தினை முன்னிட்டு நடைபெறவில்லை என துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

மேற்படி செயலமர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் எதிர்வரும் 28, 29 ஆம் திகதி உட்பட நான்கு தினங்களும் நடைபெறும் என பாடசாலை அதிபர்களுக்கும் மற்றும் கணித பாட ஆசிரியர்களுக்கும் அவர் அறிவித்துள்ளார். (அ-2-15)

# பாடசாலை மட்டத்தில் தேசியமர நடுகை தினம்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டின் கீழ் தேசிய மரநடுகை தினம் பாடசாலை மட்டத்தில் செயற்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய பயிர் வளங்களுடனான ஒரு நாடு-செழிப்பான ஒரு எதிர்காலம் எனும் தொனிப்பொருளின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இன்று காலை 9 மணிக்கு மரநடுகை நிகழ்வு நடைபெறவுள்ளதாக மேற்படி அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்ட பொறுப்பதிகாரி ப.துவாரகன் அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மு/மாங்குளம் மகாவித்தியாலயம், மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம், மு/கலைமகள் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், வலயக் கல்வி அதிகாரிகள் ஆகியோர் மரநடுகை நிகழ்வில் பங்கேற்று பயன் தரும் மரங்களை நாட்டி வைக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-15)

# மழைவேண்டி அபிஷேகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்பயிர்ச்செய்கை சிறந்த முறையில் நடைபெற்றுள்ள போதிலும் பருவ மழை பெய்யாமை காரணமாக விவசாயிகள் மழை வேண்டி தொன்மை மிக்க உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தில் 108 பால்குட அபிஷேகம், சங்காபிஷேகம் என்பவற்றை நேற்று நடத்தினர்.

இதனையடுத்து சிவனின் அருளினால் நேற்றையதினம் இரவு மழை பெய்துள்ளது. (அ-2-254)

# கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் கைது

பல்வேறு கொள்ளைச் சம்பவங்கள் மற் றும் குற்றச் செயல்க ளுடன் தொடர்புடைய இருவர் வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வவுனியா குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சுமார் ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான 11 பவுண் தங்க நகைகளை வங்கி ஒன்றில் அடகு வைக்க சென்ற போதே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், கோப்பாய் மற்றும் நாவற்குழி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பது முதல் கட்ட விசாரணையில தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர்களை வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் பிரச்சினைகளை சமாளிக்க நகைச்சுவையும் உதவும். -ஓர் அறிஞர்-

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கொலைகாரனின் படம் டுவிட் செய்யப்பட்டுள்ளது

பாகிஸ்தான் வாகா எல்லையில் தற்கொலை தாக்குதல் நடத்திய தீவிர வாதியின் புகைப்படத்தை தீவிரவாத இயக்கம் டுவிட்டரில் பதிவு செய்துள்ளது.

இந்திய பாகிஸ்தான் எல்லையை யொட்டி உள்ள பாகிஸ்தானின் வாகா எல்லையில் அண்மையில் கொடி இறக்க நிகழ்ச்சி நடந்தது.

இந்த நிகழ்ச்சி முடிந்த சிறிது நேரத்தில் அங்கு ஊடுருவிய தற்கொலைப் படை தீவிரவாதி ஒருவன் நடத்திய திடீர் தாக்குதலில் 61 பேர் கொல்லப்பட்டனர்.

அப்பகுதியில் குவிக்கப்பட்டு இருந்த இராணுவ வீரர்களின் பாதுகாப்பையும் மீறி நடத்தப்பட்ட இந்த தாக்குதல் சம்பவம் பாகிஸ்தானில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தான் தலிபான் இயக்கத்தில் இருந்து பிரிந்த பாகிஸ்தான் ஜமாத் அரார் இயக்கம் பொறுப்பு ஏற்றுக் கொண்டது. இதையடுத்து. அந்த இயக்கத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி கடும் கண்டனம் தெரிவித்தார்.

அதன்பின்னர். தலிபான் தீவிர வாத இயக்கம் சார்பில் பிரதமர் நரேந்திர மோடிக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தற்போது வாகா எல்லையில் தற்கொலை தாக்குதல் நடத்திய தீவிர வாதியின் புகைப்படத்தை ஜமாத் அரார் தீவிரவாத இயக்கம் டுவிட்டரில் பதிவு செய்துள்ளது.

ஜமாத் உல் அரார் தீவிரவாத இயக்கத்தின் செய்தித் தொடர்பாளர் எசானுல்லா எசான், தற்கொலை தாக்குதல் நடத்திய தீவிரவாதியின் இரண்டு புகைப்படங்களை டுவிட்டரில் வெளியிட்டுள்ளான் என்று செய்திகள் வெளியாகியுள்ளது. தாக்குதல் நடத்திய தீவிர வாதியின் பெயர் 25 வயதான ஹானி புல்லாக் என்ற ஹம்சா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எசானுல்லா எசான், தீவிரவாத தாக்குதல் தொடர்பான வீடியோ வெளியிடப்படும் என்றும் ஆப்கானிஸ்தான் எல்லையில் தீவிரவாதிகள் மீது பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்தியதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக தாக்குதல் நடத்தப் பட்டது என்று குறிப்பிட்டுள்ளான் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## முன்பு ‘வரப்புயர’ இப்போது ‘றோட்டுயர’

அரச சபையில் புலவர்கள் கூடி மன்னனைப் புகழ்ந்து பாடுகின்றனர். ஒவ்வொரு புலவராக மன்னனைப் புகழ்ந்து பாடுகையில், அடுத்த சந்தர்ப்பம் ஔவையாருக்குக் கிடைக்கின்றது.

ஆசனத்தில் இருந்து எழுந்த ஔவையார் மன்னனைப் பார்த்து “வரப்புயர” என்று கூறிவிட்டு அமர்ந்து கொண்டார்.

அரச சபையில் ஒரே கலகலப்பு. எல்லாப் புலவர்களும் மன்னனைப் புகழ்ந்து பாட, ஔவையார் மட்டும் வரப்புயர என்றாரே! அவர் கூறியதன் பொருள் புரியாததன் காரணமாக்வே சபையில் சலசலப்பு ஏற்பட்டது.

தாயே! தங்கள் பாட்டின் பொருள் யாது என்று புலவர்கள் வினவ ஔவையார், வரப்புயர நீர் உயரும்; நீருயர நெல் உயரும்; நெல்லுயர குடியுயரும்; குடியுயர கோன் உயர்வான் என்றார்.

இப்பாடலைக் கேட்டு மன்னனும் புலவர்களும் பெருமகிழ்ச்சி அடைந்தனர். வரப்புயர என்ற ஔவையின் பாடல் இப்போதெல்லாம் பொருந்தாது.

வரம்பேயில்லாத வயல்கள், வயல்களுக்குச் செல்ல முடியாத தடைகள் என்பதாக நம் நிலைமை மாறி விட்டது. எனினும் ஔவையார் சமகாலத்தில் நம் மத்தியில் வாழ்ந்து மன்னனைப் பாடுவாராயின், **றோட்டுயர...** என்றே பாடியிருப்பார்.

இப்போது றோட்டுயர என்பதன் பொருள் யாது தாயே! என்று வினவினால், றோட்டுயர வீடு பதியும்; வீடு பதிய வெள்ளம் உயரும்; வெள்ளம் உயர இடம் பெயர்வு நடக்கும்; இடம்பெயர்ந்தால் சமைத்த உணவு கிடைக்கும் என்பதாக அவரின் பாடல் அமையும். வட பகுதி எங்கும் வீதிகள் உயர்த்தப் பட்டுள்ளன. கூடவே புகையிரதப் பாதைகளும் மலையாக எழுந்து நிற்கின்றன.

இந்நிலையில் சொற்ப மழை பெய்தாலும் வீதிகளின் இரு மருங்கிலும் வெள்ளம் தங்கி விடுகின்றது. ஒழுங்கைகள் எங்கும் மழை நீர்த் தேக்கம். வீடுகளில் மழை நீர் புகும் ஆபத்து என்நேரமும் நடக்கலாம் என்றவாறு எங்கள் நிலைமை உள்ளது.

திட்டமிடல் எதுவுமின்றி அபிவிருத்திப் பணி என்ற பெயரில் நடக்கின்ற செயற்பாட்டின் விளைவு இது எனலாம்.

ஒரு பிரதேசத்தில் அபிவிருத்திப் பணியை முன்னெடுக்கும் போது துறைசார்ந்தவர்களிடம்– ஊர்ப் பெரியவர்களிடம்–அனுபவசாலிகளிடம் கருத்துக்களைப் பெறுவது அவசியம். இதைவிடுத்து கட்டிடம் கட்டுகிறோம். வீதி போடுகிறோம். இதில் கருத்தறிவுக்கு என்ன? இடம் இருக்கிறது என்று செருக்குக் கொண்டால், திருநெல்வேலியில் கட்டப்பட்ட சந்தைக் கட்டிடம் போலத்தான் நிலைமை முடியும்.

ஆம், திருநெல்வேலியில் கட்டப்பட்ட சந்தைக் கட்டிடத்தின் அமைப்பு; சந்தை இயங்கும் மேற்தளம்; மழை காலத்தில் சந்தையின் அவலக் கோலம் என்பன எங்களிடம் இருக்கக்கூடிய அறியாமையின் வெளிப்பாடாகும்.

திருநெல்வேலியில் சந்தைக் கட்டிடம் கட்டப்பட்ட போது வெள்ளவத்தையிலும் ஒரு சந்தைக் கட்டிடம் அமைக்கப்பட்டது. இரண்டு கட்டிடங்களுக்குமான செலவில் திருநெல்வேலி சந்தைக் கட்டிடமே அதிகம். ஆனால் வெள்ளவத்தை சந்தை அமைப்பு, அதன் தோற்றம் என்பன மிகச் சிறப்பான திட்டமிடலை, மேற்பார்வையை, இலஞ்சங்கள் ஊடுருவாத வேலைத் திட்டத்தை வெளிப்படுத்தி நிற்கும்.

ஆக, எதைச் செய்ய முன்பும் அதைப் பற்றி பல தடவைகள் ஆராய்வது அவசியம். இல்லையேல் வீதிகள் அமைக்கப்படும் ஆனால் மழை காலத்தில் வீடுகளில் இருக்கமுடியாமல் போகும் என்பதை இப்போது நாம் யதார்த்தபூர்வமாக அனுபவிக்கப் போகின்றோம்.

எது உயர வேண்டுமோ அதை அறிந்து உயரக் கூடாததை உயர்த்தினால் உபத்திரங்கள் தொடரும் என்பதற்கு எங்கள் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட வீதிகளும் புகையிரதப் பாதைகளும் நல்ல எடுத்துக் காட்டு. நடந்தது நடந்தாயிற்று என்று மௌனமாக இருக்காமல் வடிகால் அமைப்புகள் தொடர்பில் நவீன நுட்பங்களைப் பிரயோகித்து மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உதவுவது அரசின் கடமை.

## சிவத்தமிழ் வித்தகரின் “நூல்கள் அறிமுகமும் நூலாசிரியர் கௌரவிப்பும்”

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் பிரதேச சபை கோண்டாவில் பொது நூலக தேசிய வாசிப்பு மாத நிகழ்வை முன்னிட்டு சிவத்தமிழ் வித்தகரின் நூல்கள் அறிமுகமும் நூலாசிரியர் கௌரவிப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலய மண்டபத்தில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப. வசந்தகுமார் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதன் போது சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் விழா நாயகனாக கௌரவிக்கப்படவுள்ளதுடன் வாழ்த்துரைகளை ஓய்வு நிலைப்பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலய அதிபர் எஸ்.வாமதேவன், கோப்பாய் பிரதேச செயலாளர் ம.பிரதீபன், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய ஆசிரியர் ம.சிவலிங்கம், நல்லூர் பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் தலைவர் பெ.கனகசபாபதிப்பிள்ளை, வேலணை நடராஜா வித்தியாலய ஆசிரியர் எஸ்.பாலசண்முகன், கே.ரி.சி. கல்வி நிறுவன இயக்குநர் ஞானதிருக்கேதீஸ்வரன் மற்றும் இணுவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் தி.சசிதரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

அத்துடன் ஆசியுரையினை நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர பரமாச்சார்ய சுவாமியும் நூல் அறிமுக உரையினை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் எஸ். லலீசனும் வழங்கவுள்ளனர். (இ-7)

## யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி பிரேம்சங்கர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் வவுனியா மேல் நீதிமன்றுக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் நீதிச்சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பேரில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மேல் நீதிமன்றுக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

உடனடி இடமாற்றத்திற்கான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை. மேலும் வவுனியா மேல் நீதிமன்ற ஆணையாளராக கடமையாற்றும் சிவஞானசுந்தரம் யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வுத்தரவு 17.11.2014 அன்று [illegible] முன்னமை குறிப்பிடத்தக்கது. (இ)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

“மரம்தான் மரம்தான் எல்லாம் மரம்தான்
மறந்தான் மறந்தான் மனிதன் மறந்தான்
மனிதன் மனிதனாக வேண்டுமா
மரத்திடம் வா... ஒவ்வொரு மரமும் போதிமரம்!”

–கவிஞர் வைரமுத்து

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



பெற்றோருக்கான செய்தி

பக்தன்: குழந்தைகளிடம் நாங்கள் பழகவேண்டிய முறை மற்றும் அவர்களை வளர்க்கும் முறை பற்றியும் கூறுவீர்களா?

ஸ்ரீகல்கி: ஆறு வயதுவரை குழந்தை வளர்ப்பின் மிகமிக முக்கியமான காலகட்டமாகும். நீங்கள் குழந்தையை குழந்தையாக இல்லாமல் ஒரு வயது வந்தவரைப்போல் நடத்தவேண்டும். அதாவது குழந்தைக்கு நீங்கள் ஒரு பெரியவருக்கு கொடுக்கும் முழு மரியாதையைக் கொடுக்கவேண்டும். அதாவது அவனிடம் மரியாதையான வார்த்தைகளையே பேசவேண்டும். மரியாதையுடன் நடத்த வேண்டும். உதாரணத்திற்கு ஹோலந்து நாட்டில் பல வீடுகளில் சாப்பிடும் மேசைக்கு, உயரமான நாற்காலிகள் வைத்துள்ளார்கள். இதனால் ஒரு குழந்தை பெரியவர்களுக்கு சமமாக தன்னை உணரும். உங்களுக்கு சமமாக அவன் தன்னை உணரவேண்டும். இதை 6 வயதுவரை உங்களால் செய்ய முடிந்தால் அவன் வாழ்நாளில் அவனைப் பற்றி கவலைப்படத்தேவையில்லை. உங்களுக்கு ஒரு பிரச்சினைக்குரிய குழந்தை இருக்காது. உங்களுக்கு மிக அழகான, மிக அன்பான, மிக சாமர்த்தியமான குழந்தை இருக்கும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### மலையையே துளையுங்கள்



❖ சரியான சிந்தனையும், முறையான பயிற்சியும் பெற்றவர்கள் ஒருபோதும் தவறு செய்ய மாட்டார்கள்.

❖ இரும்பு போல மன உறுதியும், மலைகளைத் துளைத்துச் செல்லும் வலிமையும் கொண்டவராக செயற்படுங்கள்.

❖ இந்த உலகம் என்னும் பயிற்சிக்கூடத்தில் நம்மை வலிமையுடையவர்களாக ஆக்கிக் கொள்ளவே நாம் வந்திருக்கிறோம்.

❖ சண்டையிடுவதால் பயனில்லை. ஒற்றுமையுடன் வாழ்வதில் தான் முன்னேற்றமே அடங்கியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டம்; சம்பியனானது யாழ்.மத்திய கல்லூரி




யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்திய பாடசாலை அணிகளுக்கிடையிலான ஆண்களுக்கான கூடைப் பந்தாட்ட தொடரில் யாழ்.மத்திய கல்லூரி சம்பியனாகியது.

போட்டிகளின் இறுதிப் போட்டி அண்மையில்யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்றது.

முன்னதாக இடம்பெற்ற அரையிறுதிப் போட்டிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இப் போட்டியில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றாலும் இறுதியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி ஆதிக்கம் செலுத்தி 54:42 என்னும் புள்ளிகள் கணக்கில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.மற்றைய அரையிறுதியில் யாழ் மத்திய கல்லூரி அணியும் சென் ஜோன்ஸ் கல்லூரி அணியும் மோதின.இதில் 76:63 என்னும் புள்ளிகள் கணக்கில் யாழ் மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்று இறுதிக்கு தகுதிபெற்றது.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இறுதியில் இரு அணிகளும் பாதியாட்டம் வரை மாறி மாறி புள்ளிகளைப் பெற்றது.

முதல் கால்பாதியின் போது 15:10 என முன்னிலை வகித்த யாழ் மத்திய கல்லூரி அணி 24:15 33:25 என அடுத்த கால் பகுதிகளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

இறுதியில் 48:44 என்னும் புள்ளிகள் கணக்கில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்திய மற்றிக்ஸ் ஹோம்ஸ் பாடசாலை அணிகளுக்கிடையிலான ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட தொடரில் யாழ் மத்திய கல்லூரி அணி சம்பியனாகியது.

போட்டித் தொடரின் சிறப்பாட்டத்தை வெளிப்படுத்திய வீரனாக சென் பற்றிக்ஸ் கல்லூரியின் கௌரிஸன், போட்டியின் சிறப்பாட்டத்தை வெளிப்படுத்திய வீரனாக யாழ் மத்திய கல்லூரி அணியின் விகேரியன்ஸ் ஆகியோர் தெரிவானார்கள். (க-23)

## யாழ்.இந்துவின் ஏற்பாட்டில் மென்பந்து கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழையமாணவர் சங்கத்தின் கொழும்பு கிளை பிரமாண்டமான மென்பந்து கிரிக்கெட் கார்னிவெல் நிகழ்ச்சியை எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை வெள்ளவத்தை ரொக்ஸ்சி மைதானத்தில் நடத்த உள்ளது.

நாடெங்கும் உள்ள கல்லூரியின் பழைய மாணவர்களை இந்துவின் மணிக்குடையின் கீழ் ஒன்றிணைக்கும் முகமாக இந்த நிகழ்ச்சி நடத்தப்படவுள்ளது.

பழைய மாணவர்கள் உயர் தரப்பிரிவு ஆண்டு அடிப்படையில் அணிகளாக ஒழுங்கமைக்கப்பட்டு 11 பேர் கொண்ட ஒவ்வொரு அணியும் 8 பந்து பரிமாற்றங்களை கொண்ட மென்பந்து துடுப்பாட்ட போட்டியில் பங்குபற்றுவார்கள்.

ஒரே உயர்தரப்பிரிவு ஆண்டு பழைய மாணவர்களில் ஒன்றுக்கு மேற்பட்ட அணிகள் பங்குபற்றினால் அவைகளுக்கிடையில் தெரிவு போட்டிகள் நடத்தப்பட்டு தெரிவாகும் அணி சுற்றுப்போட்டிக்கு தகுதி பெறும்.

எனவே பங்குபற்ற விரும்பும் பழைய மாணவர்கள் தங்கள் துடுப்பாட்ட அணியினைத் தயார் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். விண்ணப்ப படிவத்தை http://www.jhcoba.net/எனும் முகவரியில் பெறமுடியும். (க-254)

## ஆளுநர் கிண்ணத்திற்கான உதைபந்து போட்டி முடிபுகள்

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் ஆளுநர் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இப் போட்டிகளில் வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட 24 அணிகள் பங்குபற்றுகின்றன.இரண்டாம் சுற்றில் வெற்றி பெற்ற அணிகள் காலிறுதிப் போட்டி களில் மோதின.காலிறுதிச் சுற்றின் போட்டி முடிவுகள் வரு மாறு,

நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதின.

இதில் போட்டி நேரத்தில் கோல்களெதுவும் பெறப்படாமையால் 0:0 என்னும் கோல் கணக்கில் போட்டி நிறைவுற்றது. சமநிலைஉடைப்பு தண்ட உதை நாடப்பட்ட போது அதனை சாதகமாகப் பயன்படுத்திய நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:2 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

நியூட்டன் விளையாட்டுக் கழக அணியும் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இப் போட்டியும் போட்டி நேரத்தில் கோல்களெதுவும் பெறப்படாமையால் 0:0 என்னும் கோல் கணக்கில் போட்டி நிறைவுற்றது. சமநிலை உடைப்பு தண்ட உதை நாடப்பட்ட போது அதனை சாதகமாகப் பயன்படுத்திய பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:2 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

கலைமதி விளையாட்டுக் கழக அணியும் கலட்டி யுனைட்டட் விளையாட்டுக் கழகமும் மோதின. இப் போட்டியும் போட்டி நேரத்தில் கோல்களெதுவும் பெறப்படாமையால் 0:0 என்னும் கோல் கணக்கில் போட்டி நிறைவுற்றது. சமநிலை உடைப்பு தண்ட உதை நாடப்பட்ட போது அதனை சாதகமாகப் பயன்படுத்திய கலைமதி விளையாட்டுக் கழக அணி 2:1 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.டயமண்ட்ஸ் விளையாட்டுக் கழக அணியும் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதின. இப் போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய டயமண்ட்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:0 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது. (க-23)

## சர்வதேச நட்பு காற்பந்து ஆர்ஜென்டினா வெற்றி



குரோஷியாவுக்கு எதிரான சர்வதேச நட்பு காற்பந்து போட்டியில் ஆர்ஜென்டீனா அணி 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

ஆர்ஜென்டீனா, குரோஷ்யா அணிகளுக்கு இடையிலான சர்வதேச நட்பு காற்பந்து போட்டி லண்டனில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் குரோஷியாவின் ஷார்பினி முதல் கோல் அடித்தார். இதற்கு ஆர்ஜென்டீனா அணியினரால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முதல் பாதி முடிவில் குரோஷியா 1:0 என முன்னிலை வகித்தது.

பின் இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட ஆர்ஜென்டீனாவுக்கு அன்சால்டி (49 ஆவது நிமிடம்) லியோனல் மெஸ்சி (57 ஆவது ) தலா ஒரு கோல் அடித்து கை கொடுத்தனர்.

கடைசி நிமிடம் வரை குரோஷிய வீரர்களால் கூடுதலாக கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் ஆர்ஜென்டீனா அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

## பிரேசில் வில்லியன் அதிரடி; துருக்கியை வென்றது பிரேசில்

துருக்கியில் இஸ்தான்புல்லில் நடந்த நட்பு ரீதியிலான சர்வதேச காற்பந்து போட்டியில் பிரேசில் துருக்கி அணிகள் மோதின.

இதில் அசத்தலாக ஆடிய பிரேசில் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பிரேசில் அணி சார்பில் நெய்மர் 2 (20,60 நிமிடம்), வில்லியன் ஒரு (44 ஆவது) கோல் அடித்தனர். துருக்கியின் கயா (24 ஆவது நிமிடம்), சேம் சைடு கோல் அடித்தார்.



இதேவேளை நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் நடந்த போட்டியில் நெதர்லாந்து மெக்சிக்கோ அணிகள் மோதின.

இதில் நெர்லாந்து அணி 2:3 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது. நெதர்லாந்து சார்பில் ஸ்னெய்டர் (49ஆவது நிமிடம்), பிலைண்டு (74 ஆவது) தலா ஒரு கோல் அடித்தனர். மெக்சிகோ அணிக்கு வேலா (8, 62 ஆவது நிமிடம்), ஹெர்னாண்டஸ் (69 ஆவது) கைகொடுத்தனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவை வென்றது ஆஸி

ஜோர்ஜ் பெய்லியின் துடுப்பாட்டமும், வேகப்பந்து வீச்சாளர்களின் துல்லியமான பந்துவீச்சும் இணைந்து தென்னாபிரிக்க அணிக்கு எதிராக வகாவில் நடந்த முதலாவது ஒருநாள் போட்டியில் ஆஸி அணிக்கு 32 ஓட்டங்களால் வெற்றியை ஈட்டிக் கொடுக்க, தென்னாபிரிக்க அணித்தலைவர் டி வில்லியர்ஸின் போராட்டம் வீணானது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி, அங்கு 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் ஒருநாள் போட்டி நேற்று பேர்த்தில் உள்ள வகாவில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் ஏபி.டி வில்லியர்ஸ், முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுபெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு வோர்னர் - பின்ஞ் இணை அசத்தலான ஆரம்பம் வழங்கியது.

இருவரும் நிலைத்து நின்று ஆடி அதிரடியாக ஓட்டங்களை குவிக்க ஆரம்பித்ததன் காரணமாக இவ்ஜோடியை பிரிக்க தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்கள் பெரிதும் சிரமப்பட்டனர்.

இந்நிலையில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 94 ஆக உயர்ந்த போது அவுஸ்திரேலிய அணிக்கு இரு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

அதிரடியாக ஆடி ஓட்டங்களை குவித்துக் கொண்டிருந்த வோர்னர், (49 பந்துகளில் 46 ஓட்டங்கள்) பிலாண்டர் வீசிய 14-வது ஓவரின் 2-வது பந்தில் ஆட்டமிழந்தார். அதே ஓவரின் 4-வது பந்தில் பிஞ்சும் 35 ஓட்டங்களில் ஆட்டமிழந்து நடையைக் கட்டினார்.

தொடர்ந்து களமிறங்கிய அணித தலைவர் கிளார்க் 11 ஓட்டங்களில் ஸ்ரெய்ன் பந்திலும், வோட்சன் 13 ஓட்டங்களுடன் சுழற்பந்து வீச்சாளர் இம்ரான் தாஹிர் பந்துவீச்சிலும் ஆட்டமிழந்தனர்.

இதன்பின்னர் களமிறங்கிய பெய்லி நிலைத்து நின்று ஆட, அதன் பின் களமிறங்கிய சகலதுறை வீரர் மிட்சல் மார்ஷ் சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்தி பிலாண்டரின் வேகத்தில் வெளியேறினார்.

5 ஆவது விக்கெட்டுக்காக மத்யூ வேட், பெய்லியுடன் ஜோடி சேர்ந்தார். இவ் இணை தமக்கிடையில் 92 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்திருந்தபோது, சிறப்பாக துடுப்பெடுத்தாடிய பெய்லி 70 ஓட்டங்களில் ஸ்ரெய்ன் வேகத்தில் வீழ்ந்தார்.

அவர் ஆட்டமிழந்த ஒருசில நிமிடங்களில் வேட் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

8 ஆம் இலக்க வீரராக களமிறங்கிய அதிரடி வீரர் மக்ஸ்வெல், தென்னாபிரிக்க வீரர்களின் பந்துகளை நாலாபுறமும் சுழற்றியடித்து 5 பவுண்டரிகள் அடங்கலாக 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின்னர் களமிறங்கிய ஜோன்சனும், நைலும் தென்னாபிரிக்க பந்து வீச்சாளர்களின் பந்துகளுக்கு சிறிதுநேரம் விளையாட்டுக் காண்பித்து ஓட்டங்களை குவித்ததன் காரணாக நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களின் நிறைவில் அவுஸ்திரேலிய



அணி 300 ஓட்டங்களைக் குவித்தது.

301 ஓட்டங்கள் என்ற கடின வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு,

அம்லா - டி ஹொக் இணை மோசமான ஆரம்பம் வழங்கியது. இருவரும் ஜோன்சனின் அடுத்தடுத்த ஓவர்களில் முறையே 8, 6 ஓட்டங்களுடன் வெளியேறினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய டு பிளெசிஸ் (31), பெகார்டியன் 20 ஓட்டங்களுடன் வெளியேற, தென்னாபிரிக்க அணி 76 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து நெருக்கடிக்குள்ளானது.

5ஆவது விக்கெட்டுக்காக இணை சேர்ந்த டி வில்லியர்ஸ் - மில்லரின் சிறப்பான ஆட்டத்தால் தென்னாபிரிக்க அணி வெற்றியை நோக்கி வீறுகொண்டெழுந்தது.

இவர்களின் அதிரடி கலந்த நிதானமாக ஆட்டத்தினால் தென்னாபிரிக்க அணி 36 ஓவர்களில் 202 ஓட்டங்களைத் தொட்டது. இதன் போது தென்னாபிரிக்க அணிக்கு வெற்றிக்கு 84 பந்துகளில் 99 ஓட்டங்களே தேவைப்பட்டன.

ஆனால், 37-வது ஓவரின் முதல் பந்தில் மில்லர் 65 ஓட்டங்களில் ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணிக்கு மீண்டும் நெருக்கடி பற்றிக் கொண்டது.

அதன்பின் துடுப்பாட வந்த வீரர்கள் அணித் தலைவர் டி வில்லியர்ஸ்க்கு சரியான முறையில் ஒத்துழைப்பு கொடுக்காததால் தென்னாபிரிக்க அணியின் தோல்வியை தவிர்க்க முடியவில்லை.

இறுதியில் தென்னாபிரிக்க அணியால் 48.1 ஓவர்களில் 268 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பில் இறுதிவரை வெற்றிக்காக போராடிய அணித் தலைவர் ஏபி.டி.வில்லியர்ஸ் 80 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக அவுஸ்திரேலிய அணியின் வேகப் பந்துவீச்சாளர் குல்ரர் நைல் தெரிவானார். இதன்மூலம், 5 போட்டிகள் கொண்ட தொடரில் அவுஸ்திரேலியா 1-0 என முன்னிலையில் உள்ளது. (க)

## ஐ.சி.சி சிறந்த வீரராக மிட்சல் ஜோன்சன் தெரிவு



அவுஸ்திரேலிய அணியின்வேகப் பந்து வீச்சாளரான மிட்சல் ஜோன்சன், இந்த ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரராக தேர்வு செய்யப்பட்டுள்ளதாக ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

சிறந்த வீரராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அவருக்கு சேர் ஹரிபீல்ட் சோபர்ஸ் கிண்ணம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறந்த வீரரை தேர்வு செய்வதற்காக, கடந்த 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 26 முதல் இந்த ஆண்டு செபரெம்பர் 17 வரை நடத்தப்பட்ட வாக்கெடுப்பு காலத்தில் ஜோன்சன் 62 டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இதில் அவரது சராசரி 15.68 ஆகும்.

இங்கிலாந்து அணிக்கு எதிராக 2013/2014 ஆம் பருவத்துக்கான ஆஷஸ் தொடரில் 37 விக்கெட்டுக்களை கைப்பற்றி அசத்திய அவர், அதிலொரு போட்டியில் 40 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 7 விக்கெட்டுக்களை கைப்பற்றியதுடன், இக்காலப்பகுதியில் 16 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்று 21 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த விருதை சக நாட்டவரான ரிக்கி பொன்ரிங்கிற்கு பின் ஜோன்சன் தற்போது இரண்டாவது முறையாக பெறுகிறார். முன்னதாக கடந்த 2009 ஆம் ஆண்டும் ஜோன்சன் இவ்விருதை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க)

## கணவனைக் கொன்ற மனைவிக்கு தூக்கு

கணவனைக் கொன்ற மனைவிக்கும் மற்றொருவருக்கும் யாழ். மேல் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

2010 ஆம் ஆண்டு பெப்ரவரி 3 ஆம் திகதி நெடுங்குளம் பிள்ளையார் கோவில் வீதி கொழும்புத் துறையைச் சேர்ந்த மார்க்கண்டு சிவராசா என்பவர் வெட்டுக் காயங்களுடன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இக் கொலை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம யாழ்.மேல் நீதிமன்றில் நடைபெற்றது.

இவ்வழக்கில் குறித்த குடும்பஸ்தரின் மனைவியும் இன்னொருநபரின் தலையீடு காரணமாகவே இக் கொலை இடம்பெற்றுள்ளது என கண்டறிந்ததன் அடிப்படையில் இருவருக்கும் யாழ்.நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. (செ-4)

## அரசியல் அமைப்பில்...

கூட்டமைப்பு பங்கேற்காவிட்டால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்கப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்தது.

தெரிவுக்குழுவில் பங்கேற்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் அழைப்பு விடுத்தேன்.

தெரிவுக்குழு ஒன்றை அமைத்து அரசாங்கம் தெளிவான திட்டமொன்றை முன்வைத்துள்ள நிலையில் அதனை பலவீனப்படுத்தும் நோக்கில் எதிர்க்கட்சிகள் போலிப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றன.

நிறைவேற்று அதிகாரத்தை ரத்து செய்ய வேண்டுமென, சிலர் தெரிவுக்குழுவில் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் மற்றுமொரு தரப்பினர் நிறைவேற்று அதிகாரம் அவசியமானது என தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு சுமார் 20 வரையிலான ஆசனங்கள் காணப்படுகின்றன.

நிறைவேற்று அதிகாரத்தை ரத்துச்செய்தால் சம்பந்தன் சரணம் கச்சாமி என்று சொல்லி கூட்டமைப்பின் பின் செல்ல நேரிடும்.

மீண்டும் பயங்கரவாதம் தலை தூக்காமல் இருக்க, பிரிவினை வாதத்தை தடுக்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியம்.

நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய, பொருளாதாரத்தை வலுப்படுத்த, வெளிநாட்டு அழுத்தங்களிலிருந்து நாட்டை பாதுகாக்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியமாகின்றது.

நாம்நாட்டை காட்டிக்கொடுக்கவோ அல்லது 600 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மரண பிடிவிராந்து வழங்கவோ உடன்படிக்கைகளில் கைச்சாத்திடவில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவசர அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்களை செய்ய முடியாது எனக் கூறும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் போது தனது பதவிக் காலத்தின் முதல் 5 வருடங்களுக்குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

இவ்வாறு வாக்குறுதி வழங்கிய ஜனாதிபதி அதனை நிறைவேற்றாது 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பதவியேற்றுக் கொண்ட பின்னர் 18 ஆவது திருத்தச் சட்டம் ஒன்றை அவசரமாக நடாளுமன்றத்தில் சமர்ப்பித்து ஒரு இரண்டு முறை வகிக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டிருந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் வகிக்கும் வகையில் மாற்றங்களை செய்தார்.

அது மாத்திரமல்லாது 17-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் மூலம் உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களையும் இரத்துச செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## உலக சம்பியன்ஷிப் செஸ்

## ஆனந்த்-கார்ல்சன் மோதிய 5ஆவது சுற்று ஆட்டம் சமநிலை



ஆனந்த்- கார்ல்சன் இடையிலான உலக செஸ் போட்டியின் 5-வது சுற்று ஆட்டம்சமநிலையில் முடிந்தது.

நடப்பு சம்பியன் மாக்னஸ் கார்ல்சன் (நோர்வே)- முன்னாள் சம்பியன் விஸ்வநாதன் ஆனந்த் (இந்தியா) இடையிலான உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டி ரஷ்யாவின் சோச்சி நகரில் நடந்து வருகிறது. 12 சுற்றுகள் கொண்ட இந்த போட்டியில்முதல்சுற்று சமநிலை ஆனது. 2-வது சுற்றில் கார்ல்சனும், 3-வது சுற்றில் ஆனந்தும் வெற்றி பெற்றனர். 4-வது சுற்று சமநிலையில் முடிந்தது.

இந்நிலையில், நேற்று 5-வது சுற்று நடைபெற்றது. இந்த சுற்றிலும யாருக்கும் வெற்றி கிடைக்காமல் சமநிலையிலேயே ஆட்டம் முடிந்தது.

5 சுற்றுகள் முடிவில் இருவரும் தலா 2.5 புள்ளிகளுடன் சமநிலையில் உள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை...

களிலும் இலங்கை அரசாங்கம் சீனாவிடம் உதவிகளை நாடி நிற்கிறது. இதன் காரணமாக இலங்கை சீனாவின் ஆதிக்கத்துக்குள் வந்துள்ளது. இது நாட்டுக்கு அழகல்ல.

இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். இந்தியாவுடனான உறவை இலங்கை அரசாங்கம் பலப்படுத்த வேண்டும்.

சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் நேரடியாக இலங்கைக்கு வந்து கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்ற சம்பவம் குறித்து இந்திய பாதுகாப்பு அமைச்சு கடும் சீற்றம் அடைந்துள்ளது. இது தொடர்பிலான தமது அதிருப்தியை இலங்கை அரசாங்கத்திடம் இந்தியா தெரிவித்துள்ளது.

எனவே எதிர்காலத்தில் பிராந்திய நாடுகளுடனான வெளிவிவகார கொள்கைகளை சரியாகப் பேணுவதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சம்பந்தன் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# வடக்கு அதி...

வாயிலுக்கான அடிக்கல், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நேற்று வெள்ளிக்கிழமை நாட்டப்பட்டது.

300 கிலோமீற்றர் நீளத்தைக் கொண்ட இந்த நெடுஞ்சாலை, நான்கு கட்டங்களாக நிர்மாணிக்கப்படவுள்ளது. முதற்கட்டமாக, என்டேரமுல்லயில் இருந்து அம்பேபுஸ்ஸ வரையிலு[illegible]டாம் கட்டமாக குருநாகல முதல் பெ[illegible]ரிய வரையிலும், மூன்றாம கட்டமாக [illegible] வரையிலும் நான்காம் கட்டமாக [illegible]யிலிருந்து யாழ்ப்பாணம வ[illegible] நிர்மாணப் பணிகள் இடம்பெறவுள்ளன.

6 ஆயிரத்து 750 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த பாதை 2018 ஆம் ஆண்டு பூர்த்தியடையும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. (செ-11)


**வீட்டுடன் காணி விற்பனைக்கு**


பிறவுண் வீதி, கொக்குவில் புகையிரத நிலையம், யாழ் தொழில்நுட்பக் கல்லூரி யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் 3 1/2 பரப்பு காணி வீடு விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு : 0778689332**

**+ கஜமுகன் டென்ரல் கிளினிக்**

ம.ம. வீதி, நெல்லியடி.

தொடர்பு : 0213203772, 0212262888



**Dr.A.செந்தில்குமரன் அவர்களினால் வாய்/பல் சம்பந்தமான எல்லா பிரச்சினைகளுக்கும் அதிநவீன முறையினால் சிகிச்சை அளிக்கப்படுகின்றது.**

நிரந்தரமாக பல் கட்டுதலும்
நிரந்தரமாக கிளிப் போடுதலும்
நடைபெறும்



(C-9083) - நிர்வாகம்


# மக்களின்...

மாதகலிலும், 18 ஆம் திகதியன்று இளவாலை மாரிசன்கூடலிலும், 19 ஆம் திகதியன்று மாதகலிலும், 20 ஆம் திகதியன்று திருவடிநிலையிலும் காணிகள் இராணுவத்தேவைக்கென அளவிடப்படவுள்ளன.

இவற்றினை விட யாழில் புதிதாக மேலும் பதினொரு இடங்களில் கடற்படையின் தேவைக்கென காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளன.

உடுத்துறை ஜே/430 கிராம சேவையாளர் பிரிவில் 15 பேர்ச், செம்பியன்பற்று ஜே/426 பிரிவில் 15 பேர்ச், அனலைதீவு ஜே/37 பிரிவில் 80 மற்றும் 20 பேர்ச், ஊர்காவற்றுறை ஜே/54 பிரிவில் (காம்பன்) 10 ஏக்கர், ஜே/50 பிரிவில் (ஊர்உண்டி) 40 பேர்ச், ஜே/54 பிரிவில் (நெருஞ்சிலை) 40 பேர்ச், ஜே/50 பிரிவில் 40 பேர்ச், காரைநகரில் ஜே/44 பிரி வில் (பாலாவோடை) 80 பேர்ச், ஜே/47 (வலந்தலை சந்திக்கருகாமை) 80 பேர்ச், ஜே/41 (கோவளம்) 80 பேர்ச், காரைநகர் மேற்கு ஜே/46 (கசூரினா கடற்கரை) 126 ஏக்கர் காணி கள் கடற்படையினால் சுவீகரிக்கப்படவுள்ளது.

வலி.வடக்கில் இராணுவம் பிடித்து வைத்துள்ள காணியின் 2013 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் திகதி நில அளவைத்திணைக்களத்தின் சீரியல் எண்ணில் பழைய படத்தினை நிறுவுவதற்கான முயற்சிகளும் இடம்பெற்றுக் கொண்டுள்ளன.

இவற்றினை கொழும்பிலிருந்து இங்கு வந்துள்ள நில அளவைத்திணைக்கள அதிகாரிகளான ஜே.ஆர்.கே.லியானகே, ஜீ.டி.ஜ. கலபாய, ஜி.எச்.எம்.பெரேரா, டி.எல்.யூ. குணசேகர ஆகியோரும் நில அளவைத் திணைக்கள சிரேஷ்ட அத்தியட்சகர் எட்.டி.என்.கல்தேரவும் மும்முரமாக அளவீட்டு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மக்களினது சொந்த காணிகளினை பிடித்து வைத்துள்ள இராணுவம் அம்மக்களினை தனியார் காணிகளில் முகாம் அமைத்து தங்க வைத்துவிட்டு அம் முகாமிலேயே காணிகளினை பகிர்ந்தளிக்கும் சூழ்ச்சி வேலைகளில் இராணும் ஈடுபட்டுள்ளது.

இவ்வாறுதான் சபாபதிப்பிள்ளை முகாமிலும் நடைபெறுகின்றது இராணுவத்தின் இச் செயற்பாட்டுக்கு எதிராக சபாபதிப்பிள்ளை முகாம் அமைந்துள்ள காணிக்கு சொந்தமானவர்கள் என்னிடம் கடிதம் மூலம் முறையிட்டுள்ளதோடு வழக்கு தொடரவும் ஆயத்தமாகவுள்ளனர்.

தமது காணிகளினை இராணுவத்திற்கு தாரை வார்த்துக் கொடுப்பதற்கு எம் மக்கள் தயாராக வில்லை. இராணுவத்தின் காணி சுவீகரிப்பதற்கு எதிராக தொடர்ந்து போராடுவதற்கு மக்கள் தயாராக உள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-4)

# யாழ்.பல்கலை...

இது மாணவர்கள் மத்தியில் மட்டுமல்ல பல்கலைக்கழக சமூகத்திற்கும் பெரும் அச்ச நிலையினை உருவாக்கி உள்ளது.

பல்கலைக்கழக சூழலிருந்து இராணுவம வெளியேற்றப்படும் போது தான் மாணவர்கள் சுதந்திரமாக கல்வி கற்கும் வாய்ப்பு ஏற்படும்.

அண்மைக் காலங்களாக பல்கலைக்கழகத்தில் எந்த விதமான குழப்பமான சூழ்நிலையும் நிலவவில்லை. அவ்வாறான ஒரு நிலையில் பல்கலைக்கழக பகுதியில் இராணுவம் நிலை நிறுத்தப்பட்டமையானது பாரிய ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே பல்கலைக்கழக சூழலில் நிலை நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரை அங்கிருந்து அகற்ற உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பல்கலைக்கழக சூழலில் இராணுவம் நிலை நிறுத்தப்பட்டமை தொடர்பாக யாழ். மாவட்ட கட்டளைத் தலைமையகத்தின் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் மல்லவராட்சி கூறுகையில்,

விசேட உத்தரவுக்கு அமைய யாழ்.பல்கலைக்கழகத்தில் இராணுவம் நிலை நிறுத்தப்பட வில்லை. இது ஒரு வழமையான நடவடிக்கையே. சில இடங்களில் தேவை கருதி இராணுவத்தினரை நிலைநிறுத்துவது வழமை. அதுபோன்றே யாழ்.பல்கலைக்கழக சூழலில் இராணுவம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது இதனால் மாணவர்கள் அச்சப்படத் தேவையில்லை என்று அவர் குறிப்பிட்டார். (செ-11)

# புலிச்சந்தேக...

பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெள்ளையன் ராசகுமார் என்ற பெயருடைய இவர் விடுதலைப் புலிகளின் முன்னாள முக்கிய உறுப்பினர் என்று பாதுகாப்புப் படையினரால் இனம் காணப்பட்டிருந்தார்.

எனினும் இறுதி யுத்தத்தின் பின்னர் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தோ, புனர்வாழ்வு பெறாத நிலையில் நாட்டை விட்டு வெளியேறியிருந்தார்.

இந்நிலையில் மலேசியாவில் இருந்து மீண்டும் நாடு திரும்பிய நிலையில் அவர் கைது செய்யப்பட்டிருப்பதாக விமான நிலைய வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

குறித்த நபர் கிளிநொச்சியை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# பாப்பரசர்...

பைன்ஸ் தலைநகர் மணிலா புறப்பட்டுச் செல்ல உள்ளார்.

**2015 ஜனவரி 12- திங்கள்**

இரவு 7 மணிக்கு ரோம் ஃயுமிசினோ விமான நிலையத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் புறப்படுதல்.

**2015 ஜனவரி 13- செவ்வாய**

காலை 9 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தல், வரவேற்பு வைபவம்.

பிற்பகல் 01.15 மணிக்கு கொழும்பு ஆயர் இல்லத்தில் இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் பேராயரை சந்தித்தல்.

மாலை 5 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் இலங்கை ஜனநாயக சோலிசக் குடியரசின் ஜனாதிபதியுடன் விசேட சந்திப்பு.

மாலை 06.15 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் சர்வ மத தலைவர்களுடன் சந்திப்பு.

**2015 ஜனவரி 14- புதன**

காலை 08.30 மணிக்கு கொழும்பு காலிமுகத் திடலில் திவ்ய நற்கருணை ஆராதனை மற்றும் புனித ஜோசப் வாஸ் அடிகளாரை புனிதராக திருநிலைப்படுத்துதல்.

பிற்பகல் 02 மணிக்கு மன்னார் மடு மாதா தேவாலயம் நோக்கிப் புறப்படுதல்.

மாலை 03.30 மணிக்கு மடு ஜெபமாலை தேவாலயத்தில் தேவ மாதாவுக்கு திருப்பலி பூஜை ஒப்புக்கொடுத்தல்.

மாலை 04.45 மணிக்கு கொழும்பு நோக்கிப் புறப்படுத்தல்

**2015 ஜனவரி 15- வியாழன்**

காலை 08.15 மணிக்கு போவலன 16-வது பெனடிக் ஆண்டகை கலாசார நிலையத்தின் தேவாலயத்திற்குச் செல்லுதல்.

காலை 08.45 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க விமான நிலையத்தில் பிரியா விடை வைப்வம்.

காலை 09.00 மணிக்கு கொழும்பில் இருந்து மணிலா புறப்படுதல். (செ-11)

# அரசியல் அமை...

தெரிவுக்குழுவை நியமித்தேன். இப்படியான நிலையில் தேர்தல் ஒன்று நெருங்கும் தருவாயில் அவசரமாக அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய முடியாது. நாடு முழுவதும் பெருந்தெருக்கள் கட்டமைப்பின் ஏற்பட்டுள்ள விரைவான அபிவிருத்தியுடன் சிறு குழந்தைகள் முதல் முதியவர் வரை சகலரது வாழ்க்கை மட்டமும் உயர்ந்துள்ளது.

எனினும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமது கருத்தை வெளியிடாத ஐக்கிய தேசியக் கட்சியினர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்யுமாறு கோரி நாடு முழுவதிலும் பிரசாரம் செய்கின்றனர்.

தமிழ்த் தேசியக்

23 ஆம் பக்கம் பார்க்க....

# கொழும்பு வரு...

வரும் 24ஆம் திகதி கொழும்புத் துறைமு[illegible]த்துக்கு வரவுள்ளது.

கொழும்பில் உருவாக்கப்படவுள்ள [illegible] மற்றும் தென்கிழக்காசிய நாடுக[illegible] காப்புத் தலைவர்களின் கலந்துரையாடலை முன்னிட்டே இந்த நாசகாரி போர்க்கப்ப[illegible] கொழும்புத் துறைமுகத்துக்கு வரவுள்ளது.

Yaroslav Mudiry என்ற பெயருடைய இ[illegible] நாசகாரி போர்க்கப்பலில் 30 அதிகாரிக[illegible] உள்ளிட்ட 200 கடற்படையினர் பணியா[illegible]வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி 8 சார்க் நா[illegible]கள் மற்றும் 10 ஆசியான் நாடுகளின் பாது[illegible]ப்பு தலைவர்கள் இணைந்து SASEAN Security Community என்ற புதிய கூட்டமைப்பை உருவாக்கவுள்ளனர்.

பிராந்திய பாதுகாப்பு, பாதுகாப்பில் ஒத்[illegible]ழைப்பு மற்றும் சவால்களை இணைந்து எதி[illegible] கொள்வதன் ஊடாக பரஸ்பர நம்பிக்கை[illegible] கட்டியெழுப்புதல் போன்ற நோக்கங்களை அடிப்படையாக வைத்து இந்த அமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

கொழும்பில் பாதுகாப்புத் தலைவர்களின் கலந்துரையாடல் என்ற தலைப்பில் மூன்று நாட்கள் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் ரஷ்யாவின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனடோலி அன்ரனோவ் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக சீனாவில் இருந்து உயர்மட்ட அதிகாரிகளைக்கொண்ட குழுவொன்று கொழும்பு வரும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (செ-11)

# ஜனாதிபதித்...

ஆணையாளர் அலுவலகத்தின் சகல அதிகாரிகளினதும் பணி மற்றும் நேர அட்டவணை தயார்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலை ஜனவரி 10 [illegible] திகதி நடத்தவே அரசதரப்பினர் முன்னர் தீ[illegible]மானித்திருந்தனர்.

பாப்பரசரின் விஜயத்தை ஒத்திப்போ[illegible] முடியாது என்பதால் ஜனவரி 3 ஆம் திக[illegible] தேர்தலை நடத்தலாம் எனத் தீர்மானிக்க[illegible]பட்டது.

எவ்வாறாயினும் ஜனவரி 2 ஆம் தி[illegible] தேர்தலை நடத்துவதே சுபமானது எ[illegible] சோதிடர்கள் கணித்து கூறியிருந்தனர்.

ஆனால், 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை என்பதால் முஸ்லிம்கள் அதனை எதிர்க்க[illegible] என்பதால் 8 ஆம் திகதி வியாழக்கிமை ந[illegible]துமாறு சோதிடர்கள் ஆலோசனை வழ[illegible]யுள்ளனர்.

இதனடிப்படையில் ஜனவரி 8 ஆம் திகதி தேர்தலை நடத்த ஜனாதிபதி எண்ணியுள்ளார்.

எவ்வாறாயினும் 8 ஆம் திகதி என்ப[illegible] ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கிரக ப[illegible]ன்களுடன் ஒத்துபோகும் சுப தினம் அல்ல என தெரியவருகிறது.

எண் சோதிடத்தை அடிப்படையாக கொண்டு 8 ஆம் திகதி தேர்ந்தெடுக்கப்பட்டதாக பேசப்படுகிறது. (செ-11)


**VACANCIES/பதவி வெற்றிடங்கள்**

O/L தகைமையுடையவரா? உங்களுக்கு ஓர் அரியவாய்ப்பு. வடக்கு. கிழக்கில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள எமது Granton Company இல் பிரதான 10 கிளைகளுக்கான பதவி வெற்றிடங்கள் உள்ளன.

பயிற்சியின் போது 12,000/= 15,000/= பின் 45,000/= வரை

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**அழைக்கவும் :- 0774458134**

இல.225, 3ம் குறுக்குத்தெரு (சுகவாழ்வு நிலையத்துக்கு அருகில்) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**IELTS - LAST MINUTE PREPARATION**

21, 22ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான சிறப்பான தயார்படுத்தல்கள்.



**ACADEMIC AND GENERAL STUDENTS**

◆LISTENING◆SPEAKING◆READING◆WRITING

**காலம்:** 16/11/2014 (ஞாயிற்றுக்கிழமை)
காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை

**இடம்:** V4 Educational Consultancy
49A, Chappel Street Jaffna. (Near Public Library)

FEE: **1000**/= Only - 1 Day Seminar

பதிவுகளுக்கு: **0776697960**

(C-9080)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.